Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

27°c 26°c

பக்கம் 32 ■ சுடர்: 28 ■ கதிர்: 316 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 23, புதன் 09.10.2013

# தெரிவுக்குழுவுக்கு வந்தால்தான் தீர்வு

## கூட்டமைப்பின் நல்லிணக்க சமிக்ஞைக்கு மஹிந்த பதில்
## நேற்றைய சந்திப்பில் சல்மான் குர்ஷித்திடம் திட்டவட்டம்

கொழும்பு, ஒக்ரோபர் 9
இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு அரசியல் தீர்வை விரைந்து முன்வைக்குமாறு இலங்கையை இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் நிலையில், இவ்விவகாரம் குறித்து தனது நிலைப்பாட்டை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாற்றவில்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்பதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெறமுடியும் என்று அவர் கூறியுள்ளார். இதனை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம் அவர் திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்றால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வைக் காணலாம்" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குர்ஷித்திடம் நேரடியாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான உத்தியோக பூர்வபயணத்தை மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், நேற்றுக் காலை அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடினார்.



இதன்போது, 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தி அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஊடாக இனப்பிரச்சினைக்கு வெகு விரைவில் தீர்வைக் காணவேண்டும் என்றும், இந்திய அரசு இதில் உறுதியாக இருக்கின்றது என்றும் குர்ஷித் வலியுறுத்தினார். இதற்குப் பதிலளிக்கும்போதே ஜனாதிபதி மஹிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். 21

## ஐ.தே.கவின் அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பு

கொழும்பு, ஒக்.9
அமைக்கப்படவுள்ள புதிய பொறிமுறை அமைப்புக்கு கட்சித் தலைவரின் அதிகாரங்களில் ஒருபகுதி வழங்கப்படும். என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். ஸ்ரீகோத்தாவில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை 21

இறுதிக்கட்டத்தில் துப்பாக்கி மோதல் 06

ஐ.நாவுடன் ஒத்துழைக்கின்றது சிரியா 07

தேசிய மட்டத் தடகளப் போட்டியில் பதக்கம் வென்ற அருணோதய வீரர்கள் 22

## திடீரென அகற்றப்பட்ட வடமாகாணக் கொடி

யாழ்ப்பாணம்.9
வடக்கு மாகாண சபை முதலமைச்சருக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பின்போது வைக்கப்பட்டிருந்த வடக்கு மாகாண சபைக் கொடியை இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் திடீரென அங்கிருந்து அகற்றினர்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் 21

## மீண்டும் ஆயுதங்களுடன் இராணுவ நடமாட்டம்

வலி.தென்மேற்கு ஒக்.9
வடக்கு மாகாண சபைத் தேர்தலையும் ஆனைக்கோட்டையில் பொலிஸார் தாக்கப்பட்ட சம்பவத்தையும் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் மீண்டும் துப்பாக்கிகளுடனும் தொலைத் தொடர்பு சாதனங்க ளுடனும் ரோந்து நட வடிக்கை யில் ஈடுபடத் தொடங் கியுள்ள னர்.

குடாநாட்டில் போர்க் காலத்தில் துப்பாக்கிகளையும் தொலைத் தொடர்பு கருவிகளையும் சுமந்த 21

## யாழ்.நகரில் தீ விபத்து



யாழ்.நகர் மின்சார நிலைய வீதியில் அமைந்திருந்த புடைவைக் கடையில் புடைவைகள் சில திடீரென நேற்றிரவு தீப்பற்றி எரிந்தன. உடனடியாக அருகில் இருந்தவர்கள், அறிவித்ததை அடுத்து யாழ். மாநகர சபை தீயணைப்பு பிரிவினரும் சம்பவ இடத் துக்கு விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும் ஒரு கடை முற்றாக எரிந்து நாசமானது. தீ விபத்துக்கான காணரங்கள் தெரியவரவில்லை. (ந-17)

## வடக்கைக் கூட்டமைப்பு கைப்பற்றியமை இந்திய உதவிக்கு நல்லதொரு ஆரம்பம்

### யாழ்ப்பாணத்தில் கூறினார் குர்ஷித்

யாழ்ப்பாணம், ஒக்.9
வடக்கு மாகாண சபையை கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளமையானது இந்திய அரசின் உதவிகள் வழங்குவதற்கு நல்லெதாரு ஆரம்பம் என்று தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியா தனது முழுப் பங்களிப்பையும் வழங்கு மென்றும் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் 'ரில்கோ' விடுதியில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

நான் யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக வந்துள்ளேன். வடக்கு மாகாண சபையை கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள நிலையில், நான் இங்கு வந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. நாங்கள் மேற்கொண்டு வருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்கொண்டு செல்ல இது நல்லதொரு ஆரம்பம்.

இளைய தலைமுறையின் எதிர்காலத்துக்காக நாங்கள் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும்.

இந்திய அரசு முதன்முறையாக நாட்டுக்கு வெளியில் 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்திருப்பது இலங்கையில்தான். இந்த வீட் 21

## மீனவர் பிரச்சினை குறித்து யாழ். வந்த குர்ஷித் கவனம்

யாழ்ப்பாணம்.9
இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை குறித்து நேற்று யாழ்ப்பாணம் வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் அதிக கவனம் செலுத்தியுள்ளார்.

இருநாள் பயணமாக இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், யாழ். மாவட்டத்துக்கு முதல் தடவையாக நேற்று நண்பகல் வருகை தந்தார்.

நண்பகல் 12 மணிக்கு விமானம் மூலம் அவர் வருவதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் ஒரு மணி நேரம் தாமதமாக பிற்பகல் 1.10 மணிக்கே அவர் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அங்கிருந்து தெல்லிப்பழை சென்ற அவர் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில், தந்தை 21

## தம்பதியரை தாக்கி விட்டு நகை திருட்டு

தென்மராட்சி, ஒக்.09
நள்ளிரவு வேளையில் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த கணவன் மனைவி இருவரையும் தாக்கி விட்டுத் தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சரசாலை தெற்கில் இடம்பெற்றது.

திருடர்களின் தாக்குதலுக்கு இலக்கான கணவன் தலையில் காயத்துடன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே இடத்தைச் சேர்ந்த தாமோதரன் ஆனந்தமூர்த்தி (வயது-46) என்பவரே காயமடைந்தவராவார்.

நள்ளிரவு வேளையில் ஐந்துக்கு மேற்பட்டவர்கள் தம்மைப் புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி குறித்த வீட்டின் கதவைத் திறக்குமாறு கோரியுள்ளனர். கண 21

## மேர்வினின் செயலாளர் நேற்று கடத்தல்

கொழும்பு.9
மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வாவின் இணைப்புச் செயலாளரான ஜே.டி.திலக்கசிறி எனப்படும் 'ஹட்' திலக்கசிறி மற்றும் அவரது பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் நேற்று காலை 5 மணியள 21

## விசுவமடு நூல் நிலையம் தொடர்ந்தும் படைகளிடம்

முல்லைத்தீவு, ஒக்.9
முல்லைத்தீவு விசுவமடு மத்தி சனசமுக நிலைய கட்டடத்தை இராணுவம் தொடர்ந்தும் பயன்படுத்தி வருவதாகவும், இதனால் நூலகச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை உரியமுறையில் செயற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு விசுவமடு மத்தியில் இயங்கி வரும் விசுவமடு மத்தி சனசமுக நிலையம் கடந்த கால இடப்பெயர்வுக்கு முன்னரான காலப்பகுதியில் பல லட்சக்கணக்கான அரிய பல நூல்களைக் கொண்டு இயங்கும் ஒரு நூலகமாகும். 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் காரணமாக குறித்த நூலகம் சேதமடைந்ததுடன் அதன் நூல்களில் ஒரு தொகு 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வலிகாமம் கல்வி வலயத்தில் ஊழியர்கள் சிலர் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், ஒக்.09
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களில் ஒருபகுதியினர் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பணிமனையின் கணக்காளர் பகுதியை அடிக்கடி வேறு அறைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவதாகவும் இதனால் தாம் பணிபுரிய முடியாதுள்ளது என்றும் தெரிவித்தே அவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வலயக் கல்விப் பணிப்பாளரே இவ்வாறு ஒழுங்கு முறைகளைச் செய்கிறார். உயரதிகாரிகளுக்கிடையிலான முரண்பாடே இதற்குக் காரணம் என்றும் பணியாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அலுவலக ஒழுங்கமைப்புகளைச் சீர்ப்படுத்த வேண்டியிருந்ததால் பகுதி இடமாற்றம் செய்யப்பட்டது. இந்த மாற்றத்தை விரும்பாத சிலர் பணிப் புறக்கணிப்புக்குத் தூண்டி நடத்தியுள்ளனர் என்றார்.

இது தொடர்பில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனுடன் தொடர்பு கொண்ட போது,

அதிகாரிகள், ஊழியர்களிடையான பிரச்சினை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு சென்று நிலைமையை அவதானித்தேன். பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தனர். அதனைப் பரிசீலிப்பதாகக் கூறியுள்ளேன் - என்றார். (ஜ-4-86)

## யாழ். பல்கலையில் நேற்று
# ஒப்பந்தப் பணியாளர்களை நிரந்தரமாக்க போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.9
யாழ். பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்த பணியாளர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி துணை வேந்தர் அலுவலகம் முன்பாக நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



தமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகத்தேர்வை நடத்துவதற்கு கடந்த ஜூலை 19 ஆம் திகதிக்கு முன்னர் சுய விவரக் கோவையை அனுப்புமாறு கூறிய நிர்வாகம் கூறியிருந்தது. ஆனால் அதே மாதம் 10ஆம் திகதிக்கு முன்னரே இங்குள்ள அமைச்சர் ஒருவரின் பரிந்துரையுடன் வேறு சிலர் இந்தப் பதவிகளுக்கு நேர்முகம் செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நேற்று முற்பகல் தொடக்கம் பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். "பல்கலை நிர்வாகமே எமது நிலைமைக்கு உரிய தீர்வினை வழங்கு", "எமது வேலையைத் தொடர்ந்து முன்னெடுக்க தகுந்த நடவடிக்கை எடுங்கள்", "திடீர் வேலை நிறுத்தம் செய்யப்பட்டதனால் நிர்க்கதியாகியுள்ள எமக்கு உரிய தீர்வை வழங்குங்கள்", "புதிய ஊழியர் ஆள் சேர்ப்பின் போது எமது பெயர்ப்பட்டியலை சம்பந்தப்பட்ட அமைச்சிடம் வழங்காமல் நிர்வாகம் எம்மை புறக்கணித்தமை நியாயமா ?", " இதுவரை காலமும் இங்கு விசுவாசமாக உழைத்த எம்மை இடைநிறுத்தி வீட்டுக்கு அனுப்பியது தான் நிர்வாகம் எமக்கு வழங்கிய வெகுமதியா?", எனப் பல சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

உயர் கல்வி அமைச்சினால் பரிந்துரை செய்யப்பட்டதாகக் கூறி கடந்த ஜூலை 19 ஆம் திகதிக்கு முன்னர் சுய விபரங்களை அனுப்பி வைக்குமாறு பதிவாளரால் எமக்கு கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அதே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னரே அமைச்சர் ஒருவரால் பரிந்துரை செய்யப்பட்ட பலருக்கு தொலைபேசி மூலமாக அழைப்பு விடுக்கப்பட்டு, ஜூலை 10 ஆம் திகதியே விதிமுறைகளை மீறி பக்கச் சார்பாக நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளது.

ஆனால் பல மாதங்களாக பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் எமக்கு உரிய முறையில் நிரந்தர நியமனம் செய்ய மறுக்கிறார்கள் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டனர்.

2009 ஆம் ஆண்டிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் சிலரும் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் சம்பந்தமே இல்லாத 79 பேர் புதிதாக நியமனம் செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் பணிக்குச் செல்லத் தொடங்கியுள்ள னர். தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரினர். இது தொடர்பில் பல்கலைக்கழக பதிவாளருடன் தொடர்பு கொண்ட போதும் அவரது கருத்தை அறிய முடியவில்லை. (ஜ-4)

## சிற்றுண்டிச்சாலையில் தொடர்கிறது மோசடி
### யாழ்.போதனா வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஒக்.9
யாழ். போதனா வைத்தியசாலை உணவகத்தில் உணவு வகைகள் குறிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும் விடயம் பதில் பணிப்பாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட நிலையிலும் அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

உணவகத்தில் பல மாதங்களாக உணவுப் பொருள்கள் குறிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவது, உணவுப் பொருள்களை நிறை குறைவாகத் தயாரித்து விற்பனை செய்வது உட்பட பல முறைப்பாடுகள் வைத்தியசாலைப் பதில் பணிப்பாளரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினமும் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் அறிவித்திருந்தார்.

எனினும் இந்த அறிவிப்புக்களையும் மீறி உணவுப்பொருள்கள் அதிகரித்த விலையிலேயே விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கொத்து ரொட்டி குறிக்கப்பட்ட விலையை விட 40 ரூபாவும், மதிய சாப்பாடு 15 ரூபாவாலும், பால் தேநீர் 7 ரூபாவினாலும் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை நேற்று பால்தேநீர் 15 ரூபாவிற்கு விற்கப்பட்டது. இது விலைப்பட்டியலை விட இரண்டு ரூபா அதிகமாகும்.

இந்த தொடர் சம்பவம் குறித்து பதில் பணிப்பாளரிடம் கேட்ட போது உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (ஜ-4)



நேற்று யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடினார். (ஜ-21)

## சடலம் மீட்பு

வள்ளிபுனம் பகுதியில் புத்தி சுவாதீனமற்ற இளைஞர் ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. வள்ளிபுனம் உடையார் கட்டு பகுதியைச் சேர்ந்த பாலையா பிரபாகர் (வயது-25) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நான்கு பேர் குறித்த இளைஞரை நேற்று முன்தினம் காட்டுப்பகுதிக்கு அழைத்துச் சென்றதாகவும், இளைஞர் வீடு திரும்பாத நிலையில் தேடிச் சென்ற போது சடலமாக காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் குறித்து கிராம சேவையாளர் ஊடக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஜ-6)

## யாழ்.பிரதம தபாலகத்தில்
# நிரந்தர நியமனம் வழங்கக் அஞ்சல் பணியாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.09
யாழ்ப்பாணம் அஞ்சல் தலைமைச் செயலகத்தில் தற்காலிகமாக பணியாற்றிவரும் பணியாளர்கள் தமக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 10 வருடங்களாக தாம் பணியாற்றி வருவதாகவும் இன்றுவரை தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது குறித்து பாதிக்கப்பட்ட பணியாளர்கள் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச அஞ்சல் தினம் இன்று கொண்டாடப்படும் நிலையில் தாம் நிய மனத்துக்காக வருடக் கணக்கில் காத்திருக்கிறோம்.

யாழ்ப்பாணத்திலுள்ள தபால் தலைமையகத்தில் 12 வெற்றிடங்கள் நிலவின அதில் மூன்று வெற்றிடங்களே நிரப்பப்பட்டுள்ளன. நான்கு பேர் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளனர். அதனால் தற்போது 13 வெற்றிடங்கள் நிலவுகின்றன. அதற்கு உரியவர்களை நியமிக்குமாறு கடந்த 2011ஆம் ஆண்டு கொழும்பு தலைமையகத்திலிருந்து உத்தரவு வந்துள்ளது.

ஆனால் இங்குள்ள அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

இது தொடர்பில் வட மாகாண அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ரட்ணசிங்கத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அவ்வாறு வெற்றிடம் எதுவும் இல்லை. வெற்றிடம் ஏற்படும்போது உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது - என்றார். (ஜ-4)

## பொலிஸ் வாகனத்தின் மீது கல் வீசியவர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக்.09
பொலிஸார் பயணித்த வாகனத்தின் மீது, கல் வீசித் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஐந்துபோரும் முகம் மறைக்கப்பட்ட நிலையில் யாழ்.நீதிமன்றுக்கு நேற்று கொண்டுசெல்லப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ்.மூத்த விநாயகர் கோயிலை அண்மித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் 11 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது. இருவருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு இரு குழுக்களுக்கிடையிலான மோதலாக மாறியது. இதன் போது இரு குழுக்களும் கற்களை வீசித் தாக்குதலில் ஈடுபட்டனர். சம்பவம் அறிந்து வந்த பொலிஸ் வாகனம் மீதும் கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## தமிழ் முஸ்லிம் மக்களிடையே நல்லுறவு பேணுவதே நோக்கம்
### நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தெரிவிப்பு

யாாப்பாணம், ஒக்.09
வடக்கு மாகாணத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் இன நல்லுறவைப் பேணுவதே நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் தலைமையிலான கூட்டின் நோக்கம்என அந்த அமைப்பின் ஊடகச் செயலாளர் நஜா மொஹமட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

[illegible] எமது அமைப்பினர் காத்திருக்கின்றனர். அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்டத்திலும் மன்னாரிலும் மக்கள் சந்திப்பு நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இந்தச் சந்திப்பில் மக்களின் நலன்கள், தேவைகள், குறித்துக் கேட்டறிய உள்ளோம்.

வடக்கு மாகாணத்தின் அமைதிக்காகவும் மீள் குடியேற்றம் தொடர்பாகவும் சிந்திக்கவேண்டிய காலமிது. எமது அமைப்புதமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான புரிந்துணர் [illegible] நாம் மக்களுக்கு உதவத் தயாராகவுள்ளோம் - என்றார். (து-10)

## தமிழ்ப் பண்பாட்டுக்காக கண்ணீர் விட்ட இளம்பெண்



யாழ்ப்பாணம், ஒக்.09
புதுவீட்டு திறப்புவிழாவுக்காக தமிழ்ப் பாரம்பரிய முறைப்படி தான் போட்ட கோலத்தை குழப்பிய ஊடகவியலாளர்களை கடிந்ததோடு கவலையால் அழுது தீர்த்தாள் யாழ்ப்பாணத்து இளம் பெண்.

இந்திய வீட்டுத் திட்டத்தை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று தெல்லிப்பழையில் இடம்பெற்றது.

இதில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் கலந்து கொண்டார். இதன்போது குறித்த பெண்பிள்ளை தனது வீட்டு முன்பாக இந்திய ஜனநாயக குடியரசை சித்திரிக்கும் தாமரை, அன்னம், சக்கரம் என்பவவை அடங்கிய கோலத்தை இட்டிருந்தார். வீட்டை திறப்பதற்காக குர்ஷித் சென்றபோது ஊடகவியலாளர்கள் முண்டியடித்து புகைப்படம் எடுக்கத் திரண்டனர்.

இதனால் கோலத்தை இவர்கள் காலால் மிதித்து குழப்பினர் இதன்போது குறித்த பெண் தான் இட்ட கோலத்தை பாதுகாக்க முற்பட்டும் அது பயனளிக்க வில்லை. கோலம் காலால் மிதிபட்டு அழிந்ததால் ஆத்திரம் அடைந்த அவர் அழுதுகொண்டிருந்ததை அவதானிக்க முடிந் தது. (ஜ.ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வலி வடக்கு.ஒக். 9
யாழ்ப்பாணத்துக்கு இன்று பகல் வருகை தந்த இந்திய வெளி விவகார அமைச்சா சல்மான் குர்ஷித் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தந்தை செல்வாபுரம் பகுதியில் மீளக் குடியேறிய மக்களுக்கான இந்திய அரசின் வீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளைக் கையளித்தார். அமைச்சருடன் வட மாகாணத்துக்கான இந்திய பிரதித்தூதுவர் வி.மகாலிங்கம் மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் எஸ்.சுகிர்தன் வலி. வடக்கு பிரதேச செயலர் எஸ். ஸ்ரீமோகன் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டார்கள். (ஒ-86)

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மாகாண அமைச்சுப் பதவியொன்றை வழங்கவும்

### பொது அமைப்புக்கள் சம்பந்தனுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக்.9
மனிதாபிமான அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சுப் பதவியொன்றை வழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட பொது அமைப்புக்களும், பொது மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மாவட்டம் தோறும் நடைபெற்ற கூட்டமைப்பின் வட மாகாண சபையின் தேர்தல் பிரசார பொதுக் கூட்டங்களில் இறுதிப் போரில் அழிவின் உச்சத்துக்குச் சென்ற முல்லைத்தீவும் முள்ளிவாய்க்காலுமே வாக்குச் சேகரிப்பதற்கு கூட்டமைப்புக்கு உதவின.

இறுதிப் போரினால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு உடுத்த உடையுடன் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து, அதே கையறுநிலையான கோலத்துடன் சொந்த ஊர் திரும்பியிருக்கும் முல்லைத்தீவு மாவட்ட மக்களாகிய நாம், இன்னமும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. எஞ்சியுள்ள எமது வாழ்வையும், நிலத்தையும் பாதுகாப்பதற்காக நாளாந்தம் அரச இயந்திரத்துடன் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

வட மாகாணத்திலேயே கல்வி மற்றும் சுகாதார வசதிகளில் எமது மாவட்டம் மிகவும் பின் தங்கியுள்ளது. எனவே மாகாண அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும்போது, வட மாகாணத்திலேயே போரினாலும் கடல்கோள் அனர்த்தத்தாலும் முழுமையாகப் பாதிக்கப்பட்டதும், நேரடி நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாததுமான முல்லைத்தீவு மாவட்டத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதே தருமமாகும், அதுவே நீதியும் ஆகும்.

> எஞ்சியுள்ள எமது வாழ்வையும், நிலத்தையும் பாதுகாப்பதற்காக நாளாந்தம் அரச இயந்திரத்துடன் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

வட மாகாணத்திலேயே அதிகப்படியான நில அபகரிப்பு நடைபெறும் மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் இருப்பதால், அதன் கரையோர தமிழ் எல்லைப் பிரதேசங்கள் நாளுக்கு நாள் சிங்களக் குடியேற்றங்களாக மாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இதனை இதயசுத்தியுடன் தடுத்து நிறுத்த வேண்டுமாக விரும்பினால், மாகாண அமைச்சுப் பதவி ஒன்றை வழங்கி அதன் அதிகாரத்தினூடாக கரையோர தமிழ் எல்லைக் கிராமங்களில் தமிழ் மக்களைக் குடியேற்றுவதற்கு தேவையான வசதி வாய்ப்புகள் மற்றும் ஒழுங்குகளை மேற்கொள்ள முடியும். கரையோர தமிழ் எல்லைக் கிராமங்களில் அந்த நிலங்களுக்கே உரித்துடைய தமிழ் மக்களைக் குடியமர்த்துவதற்கும் தற்போது நிலங்களுக்கும் மிகச் சொற்ப அளவிலான தமிழ் மக்களைத் தொடர்ந்தும் தத்தமது பூர்வீக நிலங்களில் தங்கியிருக்கச் செய்யவும் வழிவகை செய்வதற்கு மாகாண அமைச்சுப் பதவியானது நம்பிக்கையையும், பாதுகாப்பையும் அந்த மக்களுக்கு நிச்சயம் அளிக்கும்.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மாகாண அமைச்சுப் பதவிகளில் ஒன்றை முன்னுரிமை அடிப்படையிலும், மனிதாபிமான அடிப்படையிலும் வழங்கி முல்லைத்தீவு மாவட்ட மக்களின் எஞ்சியுள்ள இருப்பையும் பாதுகாக்குமாறு தங்களிடம் அன்புரிமையுடன் கோருகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வட மாகாண முதலமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க)

### கிளிநொச்சி - கொழும்பு பயணத்துக்கு

# யாழ். நகரில் ரயில் ஆசனப்பதிவு வசதி



ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பயணிகள் ஆசனப் பதிவுகளை மேற் கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணம், ஒக்.9
கிளிநொச்சி - கொழும்புக்கான ரயில் போக்குவரத்துக்கான ஆசனப்பதிவுகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை ரயில்வே திணைக்களம் மேற்கொண்டுள்ளது என்று திணைக்களத்தின் பிரதான அதிகாரி த.செந்தில்நாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து ரயில் பயணத்தை மேற்கொள்ளவுள்ள பயணிகள் கிளிநொச்சி சென்று அவசரமாக பயணச் சீட்டைகளைப் பெற முண்டியடிக்கின்றனர். இந்தச் சிரமத்தைத் தவிர்ப்பதற்காக 14 நாள்களுக்கு முன்னதாகவே ஆசனப் பதிவுகளை யாழ்.நகரில் மேற்கொள்ளமுடியும்.

யாழ். கே.கே.எஸ் வீதியில் பிரதம தபாலகத்துக்கு அருகில் உள்ள 'மொபிற்றல்' கிளை அலுவலகத்தில் இதற்காக ரயில் நிலைய உத்தியோகத்தர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பயணிகள் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

யாழ். குடாநாட்டை சேர்ந்தவர்கள் இங்குள்ள கருமபீடத்தில் பதிவுகளை செய்து பயணத்தை இலகுபடுத்திக் கொள்ள வசதியாகவே ரயில்வே திணைக்களம் இந்த ஏற்பாட்டைச்செய்துள்ளது என்றார் அவர். (ஒ-14-17)

# இரு நிர்வாக அலகுகள் தென்மராட்சியில் அமைக்குக

### பிரதேச சபை தீர்மானம் ஊடாக வட மாகாண முதலமைச்சருக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.9
தென்மராட்சி பிரதேசத்தின் அபிவிருத்தியை மேம்படுத்த குறித்த பிரதேசத்தில் 2 பிரதேச செயலகங்களும்மற்றும்பிரதேச சபைகளும் அமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை வட மாகாண முதலமைச்சர் க.விக்னேஸ்வரனிடம் கோரிக்கையாக முன்வைப்பது என்று சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் மிகப் பெரிய பிரதேச செயலகமாகவும் 60 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டு செயற்படும் தென்மராட்சி பிரதேச செயலகம் மற்றும் 49 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டு செயற்படும் சாவகச்சேரி பிரதேச சபை என்பன நெருக்கடிக்குள் செயற்பட்டு வருகிறது.

இதன் காரணமாக தென்மராட்சி பிரதேசத்துக்கான அபிவிருத்திகள் குறைக் கப்படுகின்றன.

இதேவேளை, 9 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட காரைநகர் பிரதேச சபையும், 11 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட சாவகச்சேரி நகர சபையும் தனித்து செயற்படுகின்றன. இதனால் அபிவிருத்திப் பணிகள் சுமுகமாக நிறைவேற்றப்படுகின்றன.

இதன் காரணமாக தென்மராட்சி பிரதேசத்தின் அபிவிருத்தியை கட்டியெழுப்ப பிரதேச செயலகம், மற்றும் பிரதேச சபைகள் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டியுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமைக்கு ஏதுவாக சபையின் முதலாவது கோரிக்கையாக இது முன் வைக்கப்பட வுள்ளது. (வ-14-9)

### மிருசுவில் பகுதி சோதனைச் சாவடியால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

மிருசுவில் புனித நீக்கிலார் தேவாலயத்துக்கு முன்பாக நீண்ட காலமாக இயங்கி வரும் பொலிஸ் சோதனைச் சாவடியினால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாக வாகனச் சாரதிகள் தெரிவித்தனர்.

வளைவான பகுதியிலுள்ள இந்தச் சோதனைச் சாவடியில் வாகனங்கள் சோதிக்கப்படுகின்றன. அந்தப் பகுதியில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுவதால் ஏ-9 வீதியில் வேகமாக வரும் வாகனங்கள் திடீரென நிறுத்த முற்படும் வேளையில் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் - தற்போது ஏ-9 வீதியில் பாரிய வாகனங்கள் சேவையில் ஈடுபடுவதால் சோதனைச் சாவடி இருப்பது தெரியாத அளவுக்கு அவை மறைப்பதால் நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தை முந்திச் செல்ல முற்படும் வாகனச் சாரதிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)



யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்யப்பட்ட பி.கணேகம நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதற்கு முன்னர், யாழ்.பொதுநூலகம் முன்பாக அவருக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. (ஜ-4-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல் — தம்பிராசா சிவபாக்கியம் (தங்கோடை, காரைநகர்)

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் 3/3, 10,37ஆவது ஒழுங்கை வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா சிவபாக்கியம் நேற்று (08.10.2013) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் (உணவுக் களஞ்சியம், நாவற்குழி) அன்பு மனைவியும் பாணந்துறை முருகேசுப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் வைத்திலிங்கம் - தெய்வானை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கனகலிங்கம் காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் அன்னலட்சுமி புஸ்பலீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தபோநிதி அம்மா மற்றும் லோகநாதன், மேகநாதன் (ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர், துணுக்காய்), தயாநிதி ஆகியோரின்அன்புத் தாயும் பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற விவசாய ஆராட்சி உத்தியோகத்தர்), தர்மதேவி, கலாவதி, சதாசிவம் ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயகாந்தன், ஜெயரூபன், ஜெயந்தன், காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் கிரிதரன், பகிதரன், ஜெயதரன், ஷர்மிளா, சிவசங்கர், சிவப்பிருந்தன், லக்ஷ்மிப்பிரதா, ராஜீவ், ரகுநாதன், ராகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்சாலையில் இன்று (09.10.2013) புதன்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (10.10.2013) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***3/3, 10,37ஆவது ஒழுங்கை வெள்ளவத்தை. 0112361051***

(சி12681-23-14) தகவல்: குடும்பத்தினர்.

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தவறிவிட்டது

**வேலையா அழகராசா ஆகிய எனது NIC (871254010v) சுன்னாகத்துக்கும் மல்லாகத்துக் கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதபவும்.**
**(சன்மானம் வழங்கப்படும்)**
T.P:- 077 9569623, 077 9413687

**தவணை முறையில் ரூ.4,900/- செலுத்தி கணனியை எடுத்து செல்லுங்கள்.**

**மடிக் கணனிகள்** 55,000/- முதல்
(15.6"/500GB HDD /2GB DDR III)





**கணனிகள்** 46,000/- முதல்
(18.5"/500GB HDD /2GB DDR III)

LED TV 18,000/- முதல்



3 வருட உத்தரவாதத்துடன்

DELL · hp · TOSHIBA · lenovo · SAMSUNG

மேலும் பல விலைக்கழிவுடன்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
நாம் 16 வருட சேவையில்

ஒரே கூரையின் கீழ் எமது சேவைகள்.
* Computer Network & Maintenance, Internet, Router, ADSL Setup
* Computer, Printer, Laptop, UPS, LED & LCD Monitor Repairs.

* Condition Apply

MICRO PC SYSTEMS

வெள்ளவத்தை:-115C, W.A Silva Mw,077-7308417,யாழ்ப்பாணம்:-218,Hospital Rd, 021-2225893, வவுனியா:-73, 2nd Cross St,024-2221969, நெல்லியடி:-Kodikamam Rd, 021-2262929,கிளிநொச்சி:-A9 வீதி கச்சேரி முன்னால் , 021-2285593, திருகோணமலை:- 235, Main St (வசிஷ்ரன் ஹாட்வெயார் முன்னால்) , 026-2226977

## கண்ணீர் அஞ்சலி

எமது மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளராக இருந்து இளைப்பாறிய

### திருமதி இந்திரமலர் லோகநாதன்



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி விநாயகரை வேண்டுகின்றோம்.

(12680-23-14)

***பணிப்பாளர்களும், பணியாளர்களும், மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம்.***

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 26.01.1930 — உதிர்வு 15.09.2013

### சின்னத்தம்பி தெய்வானை

கடந்த 15.09.2013 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி சின்னத்தம்பி தெய்வானை அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து உதவிகள் புரிந்தோருக்கும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09.10.2013) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (11.10.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வன்னியசிங்கம் வீதி,**
**ஆவரங்கால்.** (32490)(10,14)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### முத்துராஜா உஷாந்தன்



ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்து ராஜா உஷாந்தன் நேற்று (08.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற முத்துராஜா மற்றும் மகேந்திரராணி தம்பதியரின் மகனும், மைவிழி, நர்மதன், மஞ்சநாத் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.10.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பிற்பகல் 3மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி, ஒட்டுமடம். — **தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி பவளேஸ்வரி குணம்



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வட்டுக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளேஸ்வரி குணம் நேற்று(08.10.2013) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இராணியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தன்க-ண்ணாத்தை தம்பதியரின் அன்பு மருமகளும், குணத்தின்(உப அதிபர்,வட்டு இந்துக் கல்லூரி) பாசமிகு மனைவியும், சுலக்ஷன், ரமிஷா ஆகியோரின் பாசமிகு தாயாரும், யாகசீலனின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, விக்கிரமசிங்கம், சிவசுப்பிர மணியம், பாலசுந்தரம், அழகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ் சென்றவர்களான இராஜன், இராசையா மற்றும் தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ருக்குமணி, மல்லிகாதேவி, உமாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.10.2013) புதன்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனவைரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வட்டு.வடக்கு,*
*சித்தங்கேணி.* (32552)(5.6.3)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**
021 225 0741

### இளையதம்பி வேலாயுதபிள்ளை



வெள்ளாம்போக்கட்டி,கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி (Burntrub) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வேலாயுதபிள்ளை 07.10.2013 திங்கட் கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிராசா-நாகம்மா தம்பதியரின் அருமை மருமகனும், கணேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயகிருஷ்ணா (றமணன்), அஜந்த் கிருஷ்ணா (றங்கன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வீரகத்தியர் (பேர்லின்),நடராசா (சிவாச்சாரியார் தரவையம்பதி வீரபத்திரர் ஆலயம்,கெற்பேலி),பரமேஸ்வரி, பாலசுந்தரம் (இத்தாலி), மகேஸ்வரி(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்), காலஞ்சென்ற பரமானந்தன் மற்றும் சர்வானந்தன் (இளைப்பாறிய கிராம அலுவலர்), ஞானேஸ்வரி (இளைப்பாறிய கிராம அலுவலர்), மங்களேஸ்வரி, சிவனேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*தொ.பே: 004952638843*
*(ஜேர்மனி)* (29658)(5.6.3)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**
**வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.**

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை கலாநிதி



கச்சாய் வீதி, பெரிய மாவடியைப் பிறப்பிடமாகவும், 1ஆம் கட்டை வீதி, கிராம்புவில் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கலாநிதி (ஆங்கில ஆசிரியர்) கடந்த (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை மாலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் சிதம்பரப்பிள்ளை-அமிர்தாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்(ஓய்வுபெற்ற அதிபர்)- பகவதி தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானரஞ்சிதத்தின் (ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வரா ம.வி) அன்புக் கணவரும், அச்சுதன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சுபாங்கி (சாவ.இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாவதி (அமெரிக்கா), குலதேவி (ஜேர்மனி), குலதேவன்(பிரான்ஸ்), சிவநேசன் (கனடா), சிவகுமரி (அமெரிக்கா) ஆகியோரின் அருமைச் சகோதரனும், ஜெயசிங்கம்(யாழ். இந்து மாமன்றம்), கருணாகரன் (ஜேர்மனி), றஞ்சகாந்தா (பிரான்ஸ்), ஜெயரூபினி (கனடா), நவரத்தினம் (ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத்திணைக்களப் பட வரைஞர் -மிருசுவில் படித்த மகளிர் திட்டம்), கந்தசாமி (லண்டன்), செல்வராசா (முருகன் அரைக்கும் ஆலை), மனோரஞ்சிதம் (முகாமைத்துவ உதவியாளர், தொழித் திணைக்களம்), சிறீகாந்தன்(N.K.S. அரிசி ஆலை), பாலச்சந்திரன், சிவ குமாரன், யோகரஞ்சிதம், சிவநேசன்(லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், புஸ்பராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), வசந்தராணி (லண்டன்), பத்மரஞ்சினி, காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் செல்வமலர், நிர்மலேஸ்வரி, ஜெய ரஞ்சனி, குணசேகரம், சிவசாந்தினி (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோ தரரும், நிவேதன் (பொறியியலாளர்-அமெரிக்கா), சங்கீதா(பொறியியலாளர் -கொழும்பு), வேணுகாணன் (லங்காபெல்), திபாஸ்கர்(யாழ். பல்கலைக்கழகம்), மதுறிஜன், ஜனுஷா, ஜாதவன், ஜதுர்ஷன், ரஜீவன்(லண்டன்), கஜீபன்(லண் டன்), சாருஜன், வேணுஜன் (லண்டன்), வினுஜன்(லண்டன்), வைஷாலி ஆகியோரின் பாசமிகு மாமனும், விமோஷனா, வைதேகன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், கஜல், நதஷா , கீரன் ஆகியோரின் நேசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**1ஆம் கட்டை வீதி, கிராம்புவில்,**
**சாவகச்சேரி.**
T.P:-0777789129

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மது இல்லாத கிராமங்கள் உருவாக்கம்

அச்சுவேலி, ஒக்.9
பிராந்திய மது வரித் திணைக்கள அலுவலகங்களால் சட்ட விரோத மது பாவனை இல்லாத கிராமங்கள் உருவாக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மல்லாகம் மதுவரித் திணைக்கள அலுவலகத்தால் சட்டவிரோத மது பாவனை இல்லாத 21 கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சட்ட விரோத மதுபாவனை தொடர்பாக சமூகத்துக்கும் தனி நபருக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை கருத்தில் கொண்டு சட்ட விரோத மதுபாவனை இல்லாத கிராமங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் யாழ். மாவட்டத்தில் செயற்படும் ஐந்து மதுவரித் திணைக்களங்களாலும் நூறு கிராமங்கள் வரையில் சட்ட விரோத மதுப் பாவனை இல்லாத கிராமங்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் மாவட்ட ஆணையாளர் அலுவலகத்தோடு மல்லாகம், சாவகச்சேரி,பருத்தித்துறை, சங்கானை ஆகிய ஐந்து மது வரித் திணைக்கள அலுவலகங்கள் செயற்படுகின்றன. இவற்றின் ஊடாக சட்ட விரோத மதுபாவனையை இல்லாமல் ஒழிப்பதற்கு விரிவான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையிலேயே சட்ட விரோத மதுபாவனை இல்லாத கிராமங்கள் உருவாக்கப்படுகின்றன.

> சட்ட விரோத மதுபாவனையால் சமூகச் சீரழிவு மற்றும் தீராத நோய் உயிரிழப்பு என்பன ஏற்படுகின்றன. அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதுவாகவே சட்ட விரோத மதுப் பாவனை இல்லாத கிராமங்கள் உருவாக்கப்படுகின்றன.

கசிப்பு உற்பத்தி, அனுமதி இல்லாமல் மதுபானங்களை எடுத்துச் செல்லல், 21 வயதுக்கு உட்பட்ட வயதினருக்கு மதுபான விற்பனை மற்றும் மதுபானங்களை எடுத்துச் செல்ல அவர்களைப் பயன்படுத்தல், போதைப் பொருள் விற்பனை, போதை உள்ள உணவுகள் மற்றும் சிகரெட் வகைகளை விற்பனை செய்தல், சிறுவர்களுக்கு போதை பாக்குகளை விற்பனை செய்தல், எடுத்துச் செல்லல் மாணவர்களின், போதைப் பாவனை, சட்ட விரோத சுருட்டு உற்பத்தி போன்ற செயற்பாடுகள் சட்ட விரோத மதுப்பாவனைகள் என்ற வகையில் தடுக்கப்படுகின்றன.

சட்ட விரோத மதுப்பாவனையில் ஈடுபடுவது அதற்கு உதவி செய்வது அவற்றைப் பயன்படுத்துவது, இடத்துக்கிடம் எடுத்துச் செல்லல் என்பன சட்ட விரோத செயற்பாடாகக் கொள்ளப்படுவதோடு தண்டனைக்குரிய குற்றமாகவும் கொள்ளப்படுகின்றது.

சட்ட விரோத மதுப்பாவனையால் சமூகச் சீரழிவு மற்றும் தீராத நோய், உயிரிழப்பு என்பன ஏற்படுகின்றன. அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதுவாகவே சட்ட விரோத மது பாவனை இல்லாத கிராமங்கள் உருவாக்கப்படுகின்றன.

சட்ட விரோத மதுப் பாவனை இல்லாத கிராமங்கள் உருவாக்கும் செயற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் உப கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு சட்ட விரோத மதுப் பாவனை தொடர்பாக விரிவான கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (வ-11)

## பழ மரக்கன்றுகள் விநியோகம்

வரணி, ஒக்.9
பழ மரங்கள், முருங்கைக் கன்றுகள், மரக்கறி விதைகள் என்பன நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வரணி, மாசேரி கிராம அலுவலர் பிரிவில் வைத்து வழங்கப்படும் என பிரதேச பிரிவுக்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் சமுர்த்தி உதவி பெறும் பொதுமக்கள் சமுர்த்திச் சங்கத்திலும், ஏனையோருக்கு மாசேரி கிராம அலுவலர் அலுவலகத்திலும் வழங்கப்படவுள்ளன.

எனவே, அன்றைய தினம் பயனாளிகள் குறித்த உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-122)

## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஒக்.9
ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை நாளை காலை 8.30 மணிக்கு குறித்த வங்கியின் பசுமைக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (வ)

## தென்மராட்சியில் முதல் மூன்று இடங்கள்





தென்மராட்சி, ஒக்.9
தென்மராட்சிக் கல்வி வலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 80 மாணவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரங்கள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களான இரவிக்குமார் தவினுகன் (190 புள்ளிகள்), கனகலிங்கம் ஐங்கரன்(187 புள்ளிகள்), ஆகிய இருவரும் வலயத்தில் முதலாம், இரண்டாம் இடங்களையும் கைதடி குருசாமி வித்தியாலய மாணவன் பாஸ்கரமூர்த்தி அபிசாந் (186 புள்ளிகள்) மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ஓ-9)

## அஞ்சல் தினத்தில் மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9
உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு காரைநகர் அஞ்சல் அலுவலகத்தில் காரைநகர் பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் 2013 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந)

## வட்டுக்கோட்டை வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர்

யாழ்ப்பாணம்,ஒக்.9
25வருடங்களின் பின்னர் வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் அராலி கிராம மக்கள் அதிகளவு பயன்பெறும் குறித்த வைத்திய சாலையில் தற்காலிக வைத்தியர் கடமையில் இருந்ததால் அவசர தேவையுடையவர்கள் உடனடி சிகிச்சையைப் பெற முடியாத நிலை நிலவியது.

இதன் காரணமாக அவசர நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. சிறுவர்கள், முதியவர்கள் என சிகிச்சைக்காக பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

தற்போது கடந்த முதலாம் திகதி தொடக்கம் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் நன்மையடைந்துள்ளனர். வைத்திய கலாநிதி திருமதி.றதினி காந்தநேசன் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி தற்போது வருடாந்த இடமாற்றத்தின் ஊடாக வட்டுக்கோட்டைப் பிரதேச வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

25வருடங்களின் பின்னர் குறித்த பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பிரதேச மக்கள் வேறு வைத்தியசாலைகளை நாட வேண்டிய நிலை தவிர்க்கப்பட்டுள்ளது. (வ-14)

## சட்டவிரோத மதுவுக்கு எதிராக 240 வழக்குகள் தாக்கல்

அச்சுவேலி, ஒக்.9
மல்லாகம் மது வரி அலுவலகப் பிரிவில் இந்த வருட ஆரம்பம் முதல் ஒக்ரோபர் முதல் வாரம் வரை சட்ட விரோத மது பாவனை தொடர்பான 240 வழக்குகள் மதுவரி அலுவலகத் தால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன்.

அண்மைக்காலத்தில் சட்ட விரோத மதுபாவனை தொடர்பான செயற்பாடுகள் மேல் நிலை அடைந்துள்ளன. இதனைக் கண்காணித்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மது வரித் திணைக்கள அலுவலர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாதாந்தம் சாராசரி 25 வழக்குகள் என்ற வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்கள அலுவலர் தெரிவித்தார். இதில் போதைப் பொருள், சட்ட விரோத மது பான விற்பனை, சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை மது பானங்களை அனுமதி இன்றி எடுத்துச் செல்லல் உள்ளிட்ட குற்றங்கள் உள்ளடங்கியுள்ளதாகத் தெரிவித்தார். (வ-11)

## 'சிறகு' அரையாண்டு சஞ்சிகை வெளியீடு

தென்மராட்சி,ஒக்.9
தென்மராட்சி கல்வி வலயத்தின் 'சிறகு' அரையாண்டு சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை பி.ப. 3 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் இடம்பெறும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 9 பாடசாலைகளின் தலா 25 மாணவர்களுக்கு ரீ-சேர்ட், கொப்பிகளும் 9 முன்பள்ளிகளுக்குத் தளபாடங்களும் நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ள தாக வலயக் கல்விப் பணிப் பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

## ஊரே பாராட்டினாலும் என்முன்னே அம்மாவும் அப்பாவும் இல்லையே

### புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற அஜந்தன்



தென்மராட்சி, ஒக்.9
புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமைக்கு ஊரே பாராட்டுகிறது. ஆனால் என்னைப் பெற்றெடுத்த அம்மா அப்பா இல்லாதது கவலையளிக்கிறது. அதேநேரம் தொடர்ந்தும் நன்றாகப் படித்து பொறியியலாளராக வர வேண்டும் என்ற ஆசை தான். ஆசை இருந்தால் மட்டும் போதுமா? அதற்கு வசதியும் வேண்டுமே.

இவ்வாறு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகள் பெற்ற கைதடி சேதுகாவலர் வித்தியாலய மாணவன் இராஜலிங்கம் அஜந்தன் தெரிவித்தார்.

சிறு வயதில் தாயை இழந்த இந்த மாணவனின் தந்தை யும் இவரைக் கைவிட்டுச் சென்றுள்ளார். மாணவன் அஜந்தன் கூறுகிறார்.

அப்பப்பாவினால் வளர்க்கப்படும் என்னை சித்தப்பா சந்திரலிங்கமும் அத்தை திலகராணியும் ஊக்குவித்து படிப்பித்து வருகின்றனர். சித்தி பெறுவேன் என்ற நம்பிக்கையில் இருந்த போதும் 174 புள்ளிகள் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் அரவணைப்பும் ஊக்குவிப்பும் எனக்கு உதவியாக இருந்தன. பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் அருகில் உள்ள நூல் நிலையத்துக்குச் சென்று பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பதையும் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள் வதையும் பொழுது போக்காகக் கொண்டிருந்தேன். பரீட்சை நேரத்தில் கூட எனது பொழுது போக்கு விடயங் களில் அதிக ஈடுபாடு கொண் டிருந்தேன்.

புலமைச்சுடர் மற்றும் பத்திரிகையில் பிரசுரமான புலமைப் பரிசில் வினா-விடை போன்றவற்றை கரிசனையுடன் படித்து வந்தேன். பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியான பல விடயங்களைப் படித்திருந்ததால் பரீட்சை எழுதும் போது பயப்படாமல் நம்பிக்கையுடன் எழுத முடிந்தது. ஏனைய மாணவர்களைப்போல் தனியார்கல்வி நிறுவனங்களுக்கு செல்வதையும் ஒரே பாடப் புத்தகங்களைப் படிப்பதையும் தவிர்த்து வந்தேன்.

வறுமை நிலையில் வாழும் குடும்பத்தினைச் சேர்ந்தவனாக இருப்பதால் எதிர் காலத்தில் குடாநாட்டில் பிரபல்யமான யாழ்.இந்துக் கல்லூரியில் படித்து பொறியியலாளராக வரவேண்டும் என்பது எனது ஆவல். அதற்கு யாராவது முன்வந்து உதவி செய்வார்களாயின் நிச்சயம் எனது இலக்கை அடைந்தே தீருவேன்- என்றார். (ஓ-9)

## கண்காட்சி

கம்பர்மலை வித்தியாலய ஆரம்பப் பிரிவுக் கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ந-35)

## பெற்றோர், ஆசிரியர்களின் ஊக்கமே எனது சிறந்த பெறுபேறுக்குக் காரணம்

### தீவக வலயத்தில் முதல் நிலை மாணவன் கூறுகிறார்



யாழ்ப்பாணம், ஒக்.9
பெரியவர்கள் எனது கல்வி மீது அக்கறை கொண்டு ஊக்கமளித்ததன் விளைவாக அதிக நேரம் கல்வியில் ஈடுபாடு காட்ட முடிந்தது. இந்த ஈடுபாடே எனது சிறந்த பெறுபேற்றுக்குக் காரணம் என்கிறார் தீவக வலயத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட தோமஸ் அல்வின் யஸ்ரின்.

நெடுந்தீவு சிக்கிரியாம் பள்ளம் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த இந்த மாணவன் 185 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டார். தனது பரீட்சை பெறுபேற்றின் வெற்றி தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது பெற்றோர்கள் எனது கல்வி மீது அக்கறை காட்டி முழு மூச்சாக ஊக்கமளித்து கல்விக்கான சகல வாய்ப்புக்களையும் செய்து தந்துதவினர். தனியார் கல்வி நிலையத்திலும் அதிகளவு தேடலைப் பெற்றுக் கொண்டேன்.

அத்துடன் வீட்டில் எனக்கு பரீட்சையில் சித்தியடைவேன் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி பரீட்சைக்கான பயிற்சிகளை வழங்கினார்கள். எனக்குக் கிடைத்துள்ள இந்த தேர்ச்சியைக் கொண்டு எதிர்காலத்தில் சிறந்ததொரு வைத்தியராக வரவேண்டும் என்பதே இலட்சியமாகும்.

அதற்கான மேலதிக கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்த பெரியவர்கள் துணை இருப்பார் எனவும் தெரிவித்தார். (ஓ-14-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிக்கட்டத்தில் துப்பாக்கி மோதல்

## இந்திய இராணுவத் தளபதி கூறுகின்றார்

புதுடில்லி, ஒக்.9
காஷ்மீரின் எல்லைப் பகுதியில் ஊடுருவிய தீவிரவாதிகளுடன் நடந்துவரும் மோதல்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்று தெரிவித்துள்ளார் இந்திய இராணுவத் தளபதி பிக்ரம் சிங்.

குறித்த பகுதியில் இடம்பெற்று வந்த மோதல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்று சில தினங்களுக்கு முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அவை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்று கூறியுள்ளார் பிக்ரம் சிங்.

காஷ்மீர் மாநிலம் குப்வாரா மாவட்டத்தின் கேரான் செக்டாரில், கடந்த 15 நாள்களுக்கு முன்னர் பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற தீவிரவாதக் குழு ஒன்று ஊடுருவியது. அவர்களைப் பிடிக்கும் நடவடிக்கைகளில் இந்திய இராணுவத்தினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அதனால்இருதரப்புக்கும் இடையே தொடர்ந்து, 15ஆவது நாளாக கடும் துப்பாக்கிச்சண்டை நீடித்து வருகிறது. பயங்கரவாதிகளிடமிருந்து, ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இராணுவ தலைமை தளபதி பிக்ரம் சிங், கேரான் செக்டார் பகுதியில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பயங்கரவாதிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைப் பார்வையிட்ட அவர், தற்போது எல்லைப் பகுதியில் நிலவும் சூழல் குறித்தும் கேட்டறிந்தார். (ற)



## இளைய தலைமுறைக்கு வழிவிடும் நேரமிது

### ப.சிதம்பரம் கருத்து

புதுடில்லி, ஒக்.9
இளைய தலைமுறைக்கு வழிவிட வேண்டிய தரும் இது என்று கருத்துத் தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்.

புதுடில்லியில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவர் ராகுல் காந்திதான். இது இளைய தலைமுறையினருக்கு வழிவிட வேண்டிய தருணம். அடுத்த பிரதமர் குறித்து நான் எதுவும் கூற முடியாது. அது கட்சியின் முடிவு" என்று தெரிவித்தார். (ற)

# தெலுங்கானாவுக்கு வலுக்கிறது எதிர்ப்பு

## போராட்டக்காரர்களுடன் பேச மத்திய அரசு முடிவு

சீமந்திரா, ஒக்.9
தெலுங்கானாவுக்கு எதிராக ஆந்திராவின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் தீவிரமடைந்து வருவதை அடுத்து இந்திய மத்திய அரசு போராட்டத்தில் ஈடுபடும் தரப்பினரோடு பேச்சுக்களை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

தெலுங்கானா தனி மாநிலத்திற்கு கடந்த வியாழக்கிழமை மத்தீய அமைச்சரவை ஒப்புதல் அளித்ததில் இருந்து, அதற்கு எதிரான போராட்டங்கள் ஆந்திராவின் பல்வேறு பகுதிகளிலும் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றன.

அதனால், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது காவல்துறையினருக்கு சவாலான காரியமாக மாறியுள்ளது. தெலுங்கானாவை எதிர்க்கும் சீமாந்திரா பகுதி மக்கள், காங்கிரஸ் கட்சியின் மாநில நிர்வாகிகளைக் கண்டித்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தெலுங்கானாவுக்கு எதிரான போராட்டங்களால் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான சூழல் குறித்து பிரதமரிடம் நேற்று முன்தினம் விளக்கிய மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே, சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க கூடுதல் படைகளை பணியில் ஈடுபடுத்தி இருப்பதாகவும் விளக்கமளித்துள்ளார்.

பிரதமருடனான சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்துள்ள சுஷில் குமார் ஷிண்டே, "தெலுங்கானாவுக்கு எதிரான போராட்டங்களை கைவிடுமாறு போராட்டக்காரர்களை கேட்டுக் கொள்கின்றேன். பிரச்சினை குறித்து பேச்சு நடத்துவதற்கான சூழலை உருவாக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளை, தனித் தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து காங்கிரஸைச் சேர்ந்த 5 மத்திய அமைச்சர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து தமது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளனர். போராட்டத்தில் ஈடுபடுவோரும் தனித் தெலுங்கானா குறித்த தீர்மானத்தை மத்திய அரசு கைவிட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துகின்றனர்.(ற)

## வடமாகாண முதலமைச்சர் பதவியேற்பை தமிழகத்தில் கொண்டாடிய மூதாட்டி





புதுக்கோட்டை, ஒக்.9
தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்த 75 வயது மூதாட்டி ஒருவர் திடீரென சரவெடிகளை வெடிக்கவைத்து உற்சாகக் கொண்டாட்டம் போட்டுள்ளார். கையில் இந்தியத் தேசியக் கொடியை ஏந்திய வண்ணம் "இந்தியா வாழ்க, இலங்கையில் தமிழினம் வாழ்க' என்று கோஷமிட்டு வெடிகளை வெடிக்க வைத்தார்.

அவரை மடக்கி அவரின் உற்சாகத்துக்கு என்ன காரணம் என்று கேட்டபோது, "நான் இலங்கையைச் சேர்ந்தவள். அகதியாக இந்தியா வந்தேன். இன்று இலங்கையின் வடமாகாணத்தின் பொறுப்பை தமிழர் ஒருவர் ஏற்கின்றார். அதைக் கொண்டாடவே வெடிகளை வெடிக்கவைத்தேன். இலங்கையில் உள்ள தமிழர்கள் சுதந்திரம் பெற இந்திய மக்கள் உதவ வேண்டும். அதனாலேயே இந்தியத் தேசியக் கொடியையும்இந்தக் கொண்டாட்டத்தின்போது சேர்த்துக் கொண்டேன்" என்று விளக்கமளித்தார் அந்த மூதாட்டி.

மூதாட்டியின் திடீர் கொண்டாட்டத்தில் அந்தப் பகுதியில் பெருமளவு மக்கள் கூடினர். (ற)

## தியாகு கைதுக்கு நாம் தமிழர் கட்சி கண்டனம்

சென்னை, ஒக்.9
இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக் கூடாது என்று வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகு கைது செய்யப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டமைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது நாம் தமிழர் கட்சி.

இதுகுறித்து அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'7ஆவது நாளாகப் போராட்டம் நடைபெற்று வந்த நிலையில் தமிழக அரசு சார்பில் வந்த மருத்துவர் குழு தோழர் தியாகுவின் உடல் நிலையைப் பரிசோதித்தது. அதன் பின்னர் அவரை மருத்துவ மனையில் அனுமதிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. அதனையடுத்து தோழர் தியாகு கைது செய்யப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் தியாகு "சிறையில் அடைக்கப்பட்டாலும் உண்ணாவிரதப் போராட்டம் தொடரும்" என்று அறிவித்துள்ளார்.

மாநில அரசோ, மத்திய அரசோ உண்ணாவிரதப் போராட்டத்தின் கோரிக்கைக்கு எவ்வித பதிலும் தராமல், அதைப் பற்றிய எவ்வித கருத்தும் கூறாமல் எவ்வித பேச்சையும் நடத்தாமல் கைது செய்திருப்பது உச்சகட்ட அடக்குமுறை.

இவை போராடுபவர்களின் கோரிக்கையைக் காதுகொடுத்து கேட்கக் கூட அரசு தயாரில்லை என்பதையே காட்டுகிறது. ஜனநாயக விழுமியங்களை மீறி அரசுகளே செயல்படுவது மிக வேதனையானது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# தெலுங்கானா பிரச்சினை: மத்திய அரசு அசமந்தம்

## குற்றஞ்சாட்டுகின்றார் சந்திரபாபு நாயுடு



புதுடில்லி, ஒக்.9
தெலுங்கானா பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திய மத்திய அரசு ஆர்வம் காட்டவில்லைஎன்றுதெலுங்குதேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு குற்றம்சாட்டியுள்ளார்.

ஆந்திராவில் இருந்து தெலுங்கானாவை தனி மாநிலமாகப் பிரிப்பதற்கு ராயலசீமா பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். விஜயநகரம் பகுதியில் கலவரம் வெடித்ததால் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆந்திராவை இரண்டாக பிரிக்கும் நடவடிக்கையை கண்டித்து தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு புதுடில்லியில் நேற்று காலவரையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

உண்ணாவிரத போராட்டத்தின்போது செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த சந்திரபாபு நாயுடு, "தெலுங்கானா விவகாரத்தில் மக்களிடம் மத்திய அரசுத் தரப்பில் போதிய கருத்துக் கேட்கப்படவில்லை. எந்த நடைமுறையையும் பின்பற்றாமல் ஆந்திராவை பிரிப்பதாககூறியுள்ளது. தெலுங்கானா பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசு ஆர்வம் காட்டவில்லை.

காங்கிரஸ் ஆதாயம் பெறும் நோக்கத்தில் இந்த முடிவை எடுத்துள்ளது. ஆந்திராவைப் பிரிப்பதன் மூலம் மத்திய அரசு அரசியல் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளது. ஆந்திராவில் நடக்கும் விரும்பத்தகாத சம்பவங்களுக்கு காங்கிரஸ் கட்சி தான் பொறுப்பு ஏற்க வேண்டும். " என்று தெரிவித்தார்.

அதேவேளை, ராயலசீமா பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. தெலுங்கானா பிரிவினையை எதிர்த்து ஆந்திராவில் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி 3ஆவது நாளாகவும் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். (ற)

# இந்தியா - பாகிஸ்தான் பேச்சுக்களில் மூன்றாவது நாடு தேவையில்லை

## இந்தியக் குடியரசுத் தலைவர் கூறுகின்றார்

புதுடில்லி, ஒக்.9
இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பேச்சுக்களின்போது மூன்றாவது நாட்டின் தலையீட்டை ஒருபோதும் இந்தியா அனுமதிக்காது என்று இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

பெல்ஜியம், துருக்கி ஆகிய இரு நாடுகளுக்கும் அரசுமுறைச் சுற்றுபயணம் மேற்கொண்டு இந்தியா திரும்பிய பிரணாப் முகர்ஜி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அதன்போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

"துருக்கி ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசும்போது பயங்கரவாதத்தை எந்த நாடும் அனுமதிக்க கூடாது என்று வலியுறுத்தினேன். பாகிஸ்தான் பிரச்சினையை பொறுத்தவரை சிம்லா ஒப்பந்தம் முதல் இருதரப்பு பிரச்சினைகள் அனைத்திலும் இந்தியாமூன்றாவதுநாடொன்றின் தலையீட்டைஒருபோதும்அனுமதிக்காது" என்று தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவுடன் ஒத்துழைக்கின்றது சிரியா

## பாராட்டுகின்றது அமெரிக்கா

வொஷிங்டன், ஒக்.9
இரசாயன ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கையில் சிரியா ஒத்துழைப்புடன் செயற்படுகின்றது என்று பாராட்டுத் தெரிவித்துள்ளார் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி.
சிரியாவில் இரசாயன ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஐ.நா. நிபுணர் குழு அறிவித்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.
"இரசாயன ஆயுத உடன்படிக்கை தொடர்பில் சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத் அரசு பின்பற்றும் முறைமை குறித்து நாம் பெருமையடைகின்றோம். இந்த நடவடிக்கையில் ஐ.நா. குழுவுக்கு சிரிய அரசு பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றது என்பதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்" என்று தெரிவித்துள்ளார் ஜோன் கெரி.



இந்த நடவடிக்கை யில் ஐ.நா. குழுவுக்கு சிரிய அரசு பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றது என்பதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

சிரியாவில் உள்ள இரசாயன ஆயுதங்கள் தொடர்பான கணக்கெடுப்பை முடித்துள்ள நிபுணர் குழு, அவற்றை அழிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது. இந்தப் பணிகள் அடுத்த ஆண்டின் நடுப்பகுதிக்கும் நிறைவு பெறும் என்றும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (ற)

# தேர்தல் முடிவுகளை உடன் இரத்துச் செய்க

## மாலைதீவு உயர் நீதிமன்றம் உத்தரவு

மாலே, ஒக்.9
அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் முதற்சுற்று முடிவுகளை உடனடியாக இரத்துச் செய்யுமாறு மாலைதீவு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
முதற்சுற்று வாக்கெடுப்பின் போது மோசடிகள் நடைபெற்றுள்ளன என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்த நிலையில், இரண்டாம் சுற்று வாக்கெடுப்பைப் பிற்போடுமாறு உயர்நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில் முதற்சுற்று வாக்கெடுப்பு முடிவுகளையும் இரத்துச் செய்யுமாறு தற்போது உத்தரவிட்டுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலின் முதற்சுற்று வாக்கெடுப்பு முடிவுகளின்படி பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நசீர் 45 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார்.
எனினும் முதற்சுற்று வாக்கெடுப்புகளின்போது மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று வாக்குஎண்ணிக்கையில்மூன்றாவது நிலையில் உள்ள குவாசீம் இப்ராஹீம் குற்றஞ்சாட்டியிருந்தார். இந்தநிலையில் முதற்சுற்று வாக்கெடுப்பு முடிவுகளை இரத்துச் செய்யுமாறு உயர்நீதிமன்றம் தற்போது அறிவித்துள்ளது.
மாலைதீவு அரசியலமைப்பின் பிரகாரம் நவம்பர் 4ஆம் திகதிக்கு முன்னர் இரண்டாம் கட்ட வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதுடன் நவம்பர் 11ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி பதவியேற்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ற)

# நலமாக இருக்கின்றார் மண்டேலா

## அவரது முன்னாள் மனைவி கூறுகின்றார்

ஜொகன்னர்ஸ்பேர்க், ஒக்.9
தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா நலமாக உள்ளார் என்று தெரிவித்துள்ளார் அவரின் முன்னாள் மனைவி வின்னி மடிகிசேலா.
நெல்சன் மண்டேலா கடந்த ஜூன் மாதம் நுரையீரல் பாதிப்புக் காரணமாக பிரிட்டோரியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதன் பின்னர் அவரது உடல்நிலை



மோசமாகப் பாதிக்கப்படைந்தது என்று தகவல்கள் வெளியாகின. இந்தநிலையில் கடந்த செப்ரெம்பர் மாதம் அவர் வீடு திரும்பியிருந்தார்.
தற்போது அவரது உடல் நிலை குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அவரது முன்னாள் மனைவி வின்னி, அவர் நன்றாக இருக்கின்றார். சிறிது நடமாடுகின்றார். ஆபிரிக்க மக்கள் மற்றும் மண்டேலாவின் முன்னோர்களின் ஆன்ம பலத்தால் அவர் நலமோடு உள்ளார்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மலாலா மீது தாக்குதல் நடத்துவோம்

## தலிபான்கள் மிரட்டல்

இஸ்லாமாபாத், ஒக்.9
பெண்களின் கல்விக்காகக் குரல் கொடுத்து வரும் சிறுமி மலாலா மீது மீண்டும் தாக்குதல் நடத்துவோம் என்று எச்சரித்துள்ளது தலிபான் அமைப்பு.
கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் மலாலா மீது தலிபான்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த அவர் தீவிர சிகிச்சைகளின் பின்னர் உடல் நலமடைந்துள்ளார்.
மலாலா தற்போது லண்டனில் தங்கியுள்ள நிலையிலேயே தலிபான்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர். தமக்கு எதிராக மலாலா தொடர்ந்து கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார் என்றும் அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.
அதேவேளை, இந்த வருடத்துக்குக்கான நோபல் பரிசு மலாலாவுக்கு வழங்கப்படலாம் என்று எதிர்பார்ப்புக்கள் எழுந்துள்ளன. (ற)




எகிப்தில் முன்னாள் ஜனாதிபதி முர்சியின் ஆதரவாளர்களுக்கும், அந்நாட்டு இராணுவத்துக்கும் இடையிலான மோதல்கள் மீண்டும் தீவிரமடைந்துள்ளன. கடந்த இரு நாள்களில் மட்டும் 50க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இந்தநிலையில் எகிப்தில் 1973 ஆம் ஆண்டு நடைபெற்ற போரின் நினைவு தின நிகழ்ச்சிகள் பிரமாண்டமாகக் கொண்டாடப்பட்டுள்ளன. இஸ்ரேல் மீது எகிப்து இராணுவம் வெற்றி கொண்டதை நினைவு கூரும் விதமாகவே இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தநிகழ்வுகளில் முன்னாள் ஜனாதிபதி முகமது முர்சி இராணுவத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டமை இராணுவத்துக்குக் கிடைத்த வெற்றியாகப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (ற)

### இத்தாலி படகு விபத்து

# உயிரிழப்பு எண்ணிக்கை 232 ஆக உயர்ந்தது

ரோம், ஒக்.9
இத்தாலியின் லம்பேடுசா தீவில் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 232 ஆக உயர்ந்துள்ளது.
விபத்துக்குள்ளான படகின் உட்பகுதியில் இருந்து சுழியோடிகள் மேலும் 38 பேரின் உடல்களை மீட்டதை அடுத்தே இந்த எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. மீட்புப் பணிகள் இன்னமும்நிறைவடையாத நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் 155 பேர் பாதுகாப்பாகக் காப்பாற்றப்பட்டனர். (ற)



# நேட்டோவால் பயனில்லை

## ஆப்கன் ஜனாதிபதி விசனம்

காபூல், ஒக்.9
ஆப்கனில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் நேட்டோ படைகள் தோல்வி கண்டுள்ளன என்று கூறியுள்ளார் அந்நாட்டு ஜனாதிபதி ஹமிட் கர்சாய்.
நேட்டோ அமைப்பின் செயற்பாடுகள் காரணமாக ஆப்கனில் பெரும் துன்பம் மற்றும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. நாட்டில் பாதுகாப்பு இல்லாத நிலை காணப்படுவதுடன், நேட்டோ படைகளால் வேறு எந்தப் பயனும் இல்லை. தலிபான்கள் பாதுகாப்பாக இருக்கின்ற பாகிஸ்தானை விடுத்து, ஆப்கனில் உள்ள அப்பாவிப் பொதுமக்கள் மீது நேட்டோ படைகள் குறிவைக்கின்றன என்றும் அவர் விமர்சித்துள்ளார். (ற)

# குற்றவாளிகளின் படங்களை நீக்குவதற்கு கூகிள் முடிவு

நியூயோர்க், ஒக்.9
குற்றவாளிகளின் புகைப் படங்களை தேடுபொறியில் இருந்து நீக்குவதற்கு முடிவு செய்துள்ளது கூகிள் நிறுவனம்.
குற்றவாளிகள் தம்மைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய பலகையுடன் இருப்பது போன்ற புகைப்படங்கள் 'மக் சொட்' என்று கூறப்படுகின்றது. அவை தேடுபொறியில் காணப்படுவதால் குற்றவாளிகள் தமது குற்ற நினைவுகளில் இருந்து மீள முடியாது என்று கருதுகின்றது கூகிள் நிறுவனம். அதையடுத்தே அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.
"இது அவர்களை நல்ல பணிகளில் ஈடுபடவோ, குற்ற உணர்வில் இருந்து விடுபடுவதற்கோ சாத்தியம் இல்லாமல் செய்கின்றது. அதனாலேயே அவற்றைத் தேடுபொறியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்' என்று தெரிவித்துள்ளது கூகிள் பொறியிலாளர்கள் குழு.



இதுவரைகாலம் குற்றவாளிகளின் புகைப்படங்களை இவ்வாறு வெளியிடப்படாமல் தவிர்ப்பதற்கு குறிப்பிட்ட தொகை பணத்தைச் செலுத்தவேண்டியிருந்தது. பணத்தைப் பெற்று குற்றவாளிகளின் படங்களை நீக்கும் பணிகளில் சில தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டு வந்தன.
கூகிளின் இந்த முடிவால் எதிர்காலத்தில் குற்றவாளிகளின் 'மக் சொட்' தேடுபொறியில் சிக்காது. (ற)

# நிறைவு பெற்றது சூரிச் 'பியர் திருவிழா'

சூரிச், ஒக்.9
ஜேர்மனி, சூரிச் நகரத்தின் பாரம்பரிய திருவிழாவான 'பியர் திருவிழா' நிறைவு பெற்றுள்ளது. கடந்த 200 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் இந்தத் திருவிழா கடந்த மாதம் 23 ஆம் திகதி ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவடைந்தது.
இந்தத் திருவிழாவுக்கு ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் இருந்து சூரிச் வரும் மக்கள் பல்வேறு வகையான 'பியர்' வகைகளைச் சுவைத்து மகிழ்வர்.
இம்முறை திருவிழாவில் சுமார் 70.5 லட்சம் லீற்றர் 'பியர்' விற்பனையாகியுள்ளதாம். அதேவேளை பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெறும் திருவிழா என்ற சாதனையையும் படைத்திருக்கின்றது 'பியர் திருவிழா'. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களுக்க

**நிதித் தொழில் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதியியல் நிறுவனமான சென்ரல்**
**உடனடுத்து, கடந்த ஒரு சில வாரங்களில் அநேக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதுட**

## குற்றச்சாட்டுக்கள் மற்றும் கோரிக்

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 1: பல தடவைகள் நிதிக் கம்பனிகள் முறிவடைந்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இந்நிலைமையினைக் கையாள்வதற்கு மத்திய வங்கி கையாலாகாததாகக் காணப்படுகின்றது.**

உண்மைநிலை

கடந்த ஏழு ஆண்டுகளில் எந்தவொரு நிதிக் கம்பனியும் முறிவடையவோ அல்லது ஒடுக்கப்பட்டிருக்கவோ இல்லை. சில நிதிக் கம்பனிகள் அழுத்தங்களை எதிர்நோக்கிய போதிலும், அத்தகைய சம்பவங்கள் எப்பொழுது இடம்பெற்றனவோ அப்பொழுதெல்லாம், அக்கம்பனிகள் மீண்டும் நிதியியல் பலத்தினைப் பெறும் விதத்தில் மீளமைப்புச் செய்யப்பட்டன.

மாறாக, பெரும்பாலான முன்னேற்றங்கண்ட சந்தைகளில், வங்கிகளும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களும் அளவற்ற இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியதுடன் சில சமயங்களில் அதாவது அண்மைக் காலத்தில் நூற்றுக்கணக்கில் முறிவடைந்தும் போயின. இலங்கையிலும் கூட 1989இன் இறுதிப்பகுதியிலும் 90களின் தொடக்கத்திலும் 13 நிதிக் கம்பனிகள் முறிவடைந்ததுடன் சில இன்னமும் ஒடுக்குதலின் கீழ் இருக்கின்றன.

கடந்த ஒரு சில ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்துவது மற்றும் வைப்பாளர்களின் நிதிகளைப் பாதுகாப்பது என்பனவற்றிற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறையினை வலுப்படுத்துவதற்காக தொடர்ச்சியான வழிமுறைகளை மேற்கொண்டது. அவை நிதித் தொழில் சட்டம் இயற்றப்பட்டமை, குறைந்தபட்ச மைய மூலதனம் அதிகரிக்கப்பட்டமை, கம்பனி ஆளுகையின் அறிமுகம், நிறைவேற்று அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியின் மதிப்பீடு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இவ்வனைத்து வழிமுறைகளினதும் பெறுபேறாக, இன்று இலங்கை கணிசமானளவு வலுவான நிதியியல் துறையினைக் கொண்டிருக்கிறது. மேலும், கடந்த 7 ஆண்டு காலப்பகுதியில் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைகளிலுள்ள சொத்துக்கள் 2005 திசெம்பர் 31இன் ரூ.1,908 பில்லியனிலிருந்து 2012 திசெம்பர் 31இல் ரூ.5,698 பில்லியனுக்கு ஏறத்தாழ 200 சதவீதம் கொண்ட முக்கியமானதொரு வளர்ச்சியைக் கொண்டிருக்கிறது.

சில பலயீனங்கள் தெரிய வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மத்திய வங்கி சரியான முறையில் செயற்படவில்லை என்ற நியாயமற்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறான காரணங்கள் நிதியியல் துறை தொடர்பான முழுமையான அறியாமையினால் அல்லது வேண்டுமென்றே நிலைமையினை தவறாக விளங்கிக் கொள்வதனால் தெரிவிக்கப்படுவனவாகும். அத்தகையதொரு மனப்பான்மைக்குப் பதிலாக, பக்கம் சாராத நடுநிலையான கருத்தொன்றினை எடுத்திருப்பின், இலங்கையின் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைகளில் அளப்பரிய முன்னேற்றங்களைக் காண்பது சாத்தியமாகியிருந்திருக்கும் என்பதுடன் அத்தகைய முன்னேற்றங்களுக்கான நன்மதிப்பின் பெரும்பங்கு சரியான நேரத்திலான நடவடிக்கை, பொருத்தமான விதிகள், ஆற்றல்வாய்ந்த மேற்பார்வை வழிமுறைகள், சிறந்த ஆளுகை நடைமுறைகள் நலிவடைந்த தன்மைகள் உருவாகின்ற நேரத்தில் தேவையான பணிப்புரைகள், தவறிழைத்த அலுவலர்கள் மற்றும் கம்பனிகளைக் கையாள்வதற்கான சட்டக் கட்டமைப்பு என்பனவற்றை அறிமுகப்படுத்திய மத்திய வங்கியினை சென்றடைய வேண்டும்.

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 2: மத்திய வங்கி சரியான முறையில் ஒழுங்குமுறைப்படுத்தியிருப்பின் நிதிக் கம்பனியெதுவும் எந்தவொரு இடர்ப்பாட்டையும் ஒரு போதும் எதிர்நோக்கியிருக்கமாட்டாது.**

உண்மைநிலை

நிறுவகங்களை ஒழுங்குமுறைப்படுத்தி வருதல் என்பதன் கருத்து பணிப்பாளர் சபைகளும் அலுவலர்களும் குறிப்பிட்ட ஒழுக்கக் கோவைகளுக்கும் நடவடிக்கை முறைகளுக்கும் இணங்கத் தொழிற்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பணிப்புரைகளையும் வழிகாட்டல்களையும் விடுப்பதாகும். இணங்குவிப்புக்களைப் பாதுகாக்கும் விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபை மேற்பார்வைகளையும் மேற்கொண்டது. இவ்வாறிருப்பினும், வியாபாரத்தில் எப்பொழுதும் இடர்நேர்வு மூலம் இருக்குமென்பதுடன் இடர்நேர்வுகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் மிகத் தெளிவாக இருக்கக்கூடும் என்பதுடன் நிறுவகத்தை பாதிக்கச் செய்யக்கூடிய வியாபாரச் சரிவுகளும் ஏற்படலாம். அத்தகைய சூழ்நிலைகளில், ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைக்கு சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறிப்பிட்ட அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய பாதுகாப்பு முறைகள் இருந்தமைக்கிடையிலும் மோசடிகள் வீண்விரயம் அல்லது இழப்புக்கள் ஏற்படுவதற்கான சம்பவங்கள் இருக்கவே செய்கின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களின் முகாமைத்துவத்திற்கு மேலும் பணிப்புரைகளை விடுப்பதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைக்கு, வழமையான அதிகாரங்கள் வழங்கப்படுகின்றதுடன் அத்தகைய அதிகாரங்கள் பொதுவாக சட்டத்தின்படியே வழங்கப்படுகின்றன. அத்தகைய அதிகாரங்களும் நடவடிக்கைகளும் கூட அலுவலர்கள் மீதும் அதேபோன்று ஏனைய பங்குடமையாளர்கள் மீதும் பாதகமான தாக்கத்தினை கொண்டிருக்கக்கூடும்.

இலங்கை மத்திய வங்கி, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்திற்கிணங்க நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தி வருவதனையும் நிச்சயமாக பாராட்டுதல் வேண்டும். அத்தகைய சட்டத்தின் கீழ், குறித்துரைக்கப்பட்ட சட்ட ரீதியான அதிகாரம் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் மத்திய வங்கி அதற்கிணங்க நடக்க வேண்டியுமிருக்கிறது. அதன் அடிப்படையில் நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தல் என்பது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையிலுள்ள ஒவ்வொரு நிறுவனமும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்றது என்ற முழுமையான உத்தரவாதத்தினை மத்திய வங்கி வழங்குவதாக பொருள்கோடலாகாது. அத்தகைய உத்தரவாதமொன்று வழங்கப்படுவது உலகத்தில் எங்கேயுமில்லை. சட்டங்களை வடிவமைக்கும் பொழுது பாராளுமன்றம் கூட மத்திய வங்கியினால் முழுமையான உத்தரவாதம் வழங்கப்படுவது பற்றி ஒரு போதும் கருத்தில் கொள்வதில்லை.

மத்திய வங்கி நிதிக் கம்பனிகளின் வைப்புக்களுக்கு உத்தரவாதங்களை வழங்குவதில்லை என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டு அதற்கு பரந்தளவு விளம்பரமும் வழங்கப்பட்டிருக்கிறது. உண்மையில், மத்திய வங்கியின் ஊடக விளம்பரங்களில் வைப்பாளர்களாகக் கூடிய அனைவருக்கும் மிகத் தெளிவான அறிவித்தலொன்று வழங்கப்பட்டிருக்கிறது. "மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் எந்தவொரு நிறுவனம் ஒரு போதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்ட ரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது...... மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும் போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்."

நிதித் தொழில் சட்டத்தினூடாக, மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டு அதனால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிதிக் கம்பனிகளுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் போது வைப்பாளர்கள் எதனை எதிர்பார்க்க வேண்டும், எதனை எதிர்பார்க்கக்கூடாது என்பது பற்றியும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சட்டத்திற்கப்பால் யாரும் செல்வதற்கோ சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளவற்றிற்கு அப்பால் உத்தரவாதங்களைப் பெறவோ முடியாது. அத்துடன் மத்திய வங்கி அதன் பொறுப்பாண்மைகள் என்ன என்பது பற்றி தெளிவாக அறிவித்திருப்பதுடன் உண்மையில் அதன் அனைத்து விளம்பரங்களிலும் சட்டத்திற்கிணங்க வைப்புக்களுக்கு உத்தரவாதங்களை வழங்கும் நிலையில் அது இல்லை என்பது பற்றியும் தெரிவித்திருக்கிறது.

எனினும், கடந்த பல ஆண்டுகளாக, உலகின் பல பாகங்களிலும் நிதியியல் துறைகளில் பாரிய முறிவுகள் ஏற்பட்ட வேளையிலும் கூட இத்துறை உயர்ந்தளவு உறுதிப்பாட்டினைக் கொண்டிருந்தற்கான அதன் நடவடிக்கைகளின் அடிப்படையில் மத்திய வங்கி, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையில் ஒழுங்கையும், ஒழுக்காறுகளையும் கொண்டு வருவதில் வெற்றிகண்டிருக்கிறது.

பொதுமக்களுக்கான மத்திய வங்கியின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டவாறு, வைப்பாளர்களும் அவர்களின் பணத்தினை முதலீடு செய்த கம்பனிகளின் நடவடிக்கை தொடர்பில் விழிப்புடன் இருப்பது அவசியமானதாகும். எனினும், துரதிஷ்டவசமாக சில சந்தர்ப்பங்களில், மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட உச்சவட்டி வீதங்களுக்கும் மேலாக தமது வைப்புக்களுக்கு உயர்ந்த வட்டி வீதங்களைப் பெற்றுக் கொண்டதன் மூலமாக சில நிதிக் கம்பனிகளினால் எதிர்நோக்கப்பட்ட திரவத்தன்மைத் தடைகளுக்கும் இடர்ப்பாட்டு நிலைமைகளுக்கும் வைப்பாளர்கள் காரணமாகியிருந்திருக்கின்றனர். மத்திய வங்கியினால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்படுகின்றவாறு, முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்னர், தொடர்பான கம்பனியின் நிதியியல் கூற்றுக்கள், கீர்த்தி மிக்க தரமிடல் முகவர்களினால் இக்கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட தரமிடல் போன்றவற்றினை வைப்பாளர்கள் பரிசீலிப்பதன் மூலம் முதலீடு தொடர்பான இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்து கொள்ளுதல் வேண்டும். உரிமம் பெற்ற நிதிக் கம்பனியொன்றில் வைப்பாளர்களும் மற்றைய பங்குதாரர்களும் ஒழுங்குமுறைப்படுத்துநர் நிதிக் கம்பனிகளை எந்தவொரு சூழ்நிலையிலும் இழப்புக்களிலிருந்தும் அவை முறிவடைவதிலிருந்தும் தடுப்பார் என எதிர்பார்ப்பார்களாயின் அது வெளிப்படையான ஒரு தவறான கருதுகோளாகவே இருக்கும் என்பதுடன் அது ஏற்றுக்கொள்ள முடியாத தார்மீகத் தீங்குகளை சமூகத்திற்கு ஏற்படுத்துவதாகவும் அமையும். இத்தகைய பின்னணியில், இழப்புக்கள் ஏற்படும் போதெல்லாம் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையினைக் குற்றஞ்சாட்டும் மக்கள் ஒழுங்குவிதிகள் என்பது பாதுகாப்பு உத்தரவாதமல்ல என்பதனை தெளிவாக விளங்கிக் கொள்வதில்லை.

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 3: மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளில் மாத்திரம் முதலீடு செய்யுங்கள் என மத்திய வங்கி பொதுமக்களுக்கு [illegible] சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட் பதிவு செய்யப்பட்ட கம்பனியாக இருப்பதனாலும் அது தற்பொழுது இடர்ப்பாட்டில் உள்ளதனாலும் மத்திய வங்கி வைப்புக்களுக்கு [illegible] பொறுப்பேற்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைநிலை

மத்திய வங்கியுடன் பதிவு செய்து கொண்டுள்ள கம்பனிகளில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு மத்திய வங்கி பொதுமக்களுக்கு மதியுரை வழங்குகின்றது என்பது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் அவர்களது தொழிற்பாடுகளில் குறிப்பிட்ட நெறிமுறைகளையும் நடைமுறைகளையும் உறுதிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுவதுடன் அதனால் அக்கம்பனிகள் மத்திய வங்கியுடன் பதிவு செய்யாத கம்பனிகளுடன் ஒப்பிடுகையில் தாக்குப்பிடிக்கக்கூடிய பெருமளவு வாய்ப்புக்களைக் கொண்டனவாகவும் சுபீட்சமுடையனவாகவும் இருக்கும். மேலும், ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற கம்பனிகள் உரிய நேரத்தில் குறிப்பிட்ட தரவுகளையும் தகவல்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். இந்நிலைமையானது அவர்களது தொழிற்பாடுகளில் குறிப்பிட்ட ஒழுங்குகளைக் கொண்டுவரும். இருப்பினும் கூட, மத்திய வங்கியினால் தொடர்ச்சியாக தெளிவுபடுத்தப்படுகின்றவாறு, நிதிக் கம்பனியொன்றாக வெறுமனே பதிவு செய்யப்படுகின்றமையின் மூலம் மத்திய வங்கி பாதுகாப்பு உத்தரவாதத்தினை வழங்கும் என்றோ கம்பனி நெருக்கடிகளை அல்லது இடர்ப்பாடுகளை எதிர்கொள்ளுமாயின் மத்திய வங்கி உத்தரவாதியாக விளங்கும் என்றோ பொருள்கோடலாகாது.

எந்தவொரு நேரக்கூடிய சம்பவத்திற்கும் முக்கியமாக முகம்கொடுக்கும் விதத்தில் வைப்புக் காப்புறுதி நிதியம் 2010 ஒத்தோபரில் நிறுவப்பட்டது. வைப்புக் காப்புறுதித் திட்டமானது 2012 சனவரியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வந்திருப்பதுடன் இதன் அடிப்படையில், மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் வங்கி அல்லது நிதிக் கம்பனியொன்று முறிவடையும் சந்தர்ப்பத்தில் ஒரு வைப்பாளர் அவர்களின் வைப்புக்களில் ரூ.200,000 இனைப் பெற உரித்துடையவர்களாக இருப்பர். வைப்புக் காப்புறுதி நிதியத்தின் நியதிகளும் திரவத்தன்மை இடர்ப்பாடுகளை எதிர்நோக்கும் கம்பனிகளுக்கு திரவத்தன்மை உதவிகள் வழங்கப்படுவதனை அனுமதிக்கின்றன. அதன் அடிப்படையில் மத்திய வங்கி, திரவத்தன்மை நெருக்கடிகளை எதிர்நோக்குகின்ற ஏதேனும் நிறுவனம் குறிப்பிட்ட சில நிபந்தனைகளின் கீழ் நிதியிடல் உதவிகளுக்கு விண்ணப்பிப்பதனையும் பெறுவதனையும் இயலச் செய்யும் விதத்தில் தேவையான ஒழுங்குவிதிகளை ஏற்கனவே வடிவமைத்திருக்கின்றது. எனினும், வைப்புக் காப்புறுதி நிதிய நிதியங்கள் பொருத்தமான பாதுகாப்புக்கள் இல்லாமல் முதலீடு செய்யப்பட முடியாது என்பது வரவேற்கத்தக்கதொரு விடயமாக இருக்கும். இதன்படி, நிதியத்தினைப் பெறுவதற்கு பிரச்சனைக்குரிய நிதிக் கம்பனி குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டியது அவசியமானதாக இருக்கும்.

சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட்டினைப் பொறுத்தவரை, அது வைப்புக் காப்புறுதி நிதிய நிதியினைப் பெறுவதற்கு உரித்துடையதாக இருக்குமென்பதுடன், உண்மையில் முகாமைத்துவ முகவர் நியமிக்கப்பட்டிருப்பதுடன் சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட்டினை மீளவமைப்பதற்கான செயன்முறைகள் ஏற்கனவே நடைபெறத் தொடங்கிவிட்டன. முகாமைத்துவ முகவரின் விதந்துரைப்புக்களின் அடிப்படையில், நெருக்கடிகளை கையாள்வதற்குத் தேவையான பணிப்புரைகளை மத்திய வங்கி விடுக்கக்கூடியதாக இருக்குமென்பதுடன் இது புதிய முதலீட்டாளர்கள் இதில் நுழைவதற்கும் பெரும்பாலும் வசதிப்படுத்துவதாக இருக்கும். எனினும், அத்தகைய தொழிற்பாடுகள் வழமையாக சிக்கலானதன்மை கொண்டன என்பதனையும் இவை நியாயமானதொரு காலப்பகுதியை எடுக்கலாம் என்பதனையும் விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகும்.

கோல்டன் கீ நெருக்கடிகளை உடனடுத்து பதிவு செய்யப்பட்ட ஒரு சில நிதிக் கம்பனிகள் மீளமைப்பிற்கு உட்படுத்தப்பட்ட அதே விதத்திலேயே சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட்டும் தற்பொழுது மீளமைப்பு செயன்முறைகளுக்கு உட்பட்டிருக்கின்றது என்பதனைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாக இருக்கும். அத்தகைய மீளமைத்தலை மேற்கொள்ள முடிந்தமைக்கு சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட் பதிவு செய்யப்பட்ட ஒரு நிதிக் கம்பனியாக இருந்தமையே காரணமென்பதனை நினைவூட்டுவது அவசியமானதாகவுள்ளது. இது சரியான இடர்ப்பாட்டு நேரத்தில் மத்திய வங்கி தலையிடுவதற்கான சட்ட அதிகாரத்தினை வழங்கியது.

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 4: இலங்கை மத்திய வங்கியுடன் மட்டுமன்றி கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலும் பட்டியலிடப்பட்டு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட்டில் உருவான அழுத்தம் முழு நிதியியல் முறைமையும் சிதைவடைந்து போவதற்கு வழிவகுக்கும்.**

உண்மைநிலை

பட்டியலிடப்பட்ட பல வங்கிகளும் நிதிக் கம்பனிகளும் இலங்கையில் தொழிற்பட்டு வருவதுடன் மத்திய வங்கியினாலும் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினாலும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றதுடன் அவற்றின் வைப்பாளர்களுக்கும் பங்குடமையாளர்களுக்கும் பயன் மிகுந்த வருவாய்களையும் உறுதியான காசுப்பாய்ச்சல்களையும் வழங்கி வருகின்றன. ஆனால் துரதிஷ்ட வசமாக மக்களால் பேசப்படுகின்ற பல கம்பனிகள் உயர்ந்த இலாபத்துடனும் உறுதியான வளர்ச்சியுடனும் சிறந்த முறையில் தொழிற்பட்டு வருகின்றன. எனினும், வங்கியல்லா நிதியியல் துறையிலுள்ள ஏறத்தாழ 50 கம்பனிகளில் ஒரு கம்பனி ஏதேனும் காரணத்திற்காக பிரச்சனையினை எதிர்நோக்கும் பொழுது மக்கள் அக்கம்பனி பற்றி பேசுவதுடன் எல்லோரையும் குறிப்பாக மத்திய வங்கியை விரல்களினால் சுட்டிக்காட்டும் நிலைமையே காணப்படுகின்றது.

இலங்கையின் மொத்த நிதியியல் துறை 2012 திசெம்பர் 31இல் உள்ளவாறு ரூ.9,035 பில்லியன்களைக் கொண்டிருக்கிறது. அத்துறையில், வங்கித்தொழில் துறை 56 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற வேளையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை 6.6 சதவீதத்திற்கு வகைகூறியது. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையில், குறிப்பிட்ட சில கம்பனிகள் ரூ.20 பில்லியனுக்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்ட பாரிய நிறுவனங்களாகவுள்ள அதேவேளையில் மற்றையவை ரூ.500 மில்லியனிலிருந்து ரூ.20 பில்லியன் வரையிலான வீச்சினைக் கொண்ட சொத்துக்களுடன் சிறியனவாகக் காணப்படுகின்றன.

அதேநேரம், மொத்த நிதித் துறையில் ஏறத்தாழ 6.6 சதவீதமாக இருக்கும் இலங்கையிலுள்ள முழு நிதிக் கம்பனிகளையும் உள்ளடக்கிய தொழிலினை பரிசீலனையில் கொள்ளும் போது சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட்டின் சந்தைப் பங்கு 1 சதவீதத்திற்கும் குறைவானதாகும். அதாவது மொத்த நிதியியல் துறையில் சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட் 0.06 சதவீதத்திற்கும் குறைவான பங்கினையே கொண்டிருக்கிறது. இதன்படி, சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட்டின் பிரச்சனை காரணமாக நிதியியல் துறையில் திரவப் பிரச்சனை ஏற்படவில்லை என்பதுடன் சொத்துக்கள், வைப்புக்கள் மற்றும் இலாபத்தன்மை ஆகிய நியதிகளில் முறைமையும் தொழில் துறையும் தொடர்ச்சியாக வளர்ச்சியுமடைந்துள்ளன. சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட் இப்பிரச்சனைகளை எதிர்நோக்கியமைக்கு அதன் சொந்த தவறான முகாமைத்துவமே முக்கிய காரணமாக அமைவதனால் சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட்டின் திரவப் பிரச்சனை பொதுவாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையினை பாதிக்கமாட்டாது.

தனியொரு கம்பனியில் காணப்படும் இடர்ப்பாடுகளினால் முழுத்துறையும் பாதிக்கப்படமாட்டாது என்பதனைப் புரிந்து கொள்வதில் மக்கள் போதியளவிற்கு முதிர்ச்சி பெற்றிருக்கின்றார்கள். கடந்த காலத்திலும் இத்தகைய சூழ்நிலைகள் தோன்றிய வேளையில் அதனைக் கையாள்வதற்கு மத்திய வங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அவர்கள் அறிவர்.

இறுதியாக, சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட் முறிவடையவில்லை என்பதும் அது மீளமைப்பிற்கே உட்பட்டு வருகின்றது என்பதும் இங்கு வலியுறுத்தப்பட வேண்டும். சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட் முகாமைத்துவ முகவரின் மதியுரையினை அடுத்து மத்திய வங்கியினால் விபரிக்கப்பட்ட பாதையில் சிரத்தையுடன் பயணிக்குமாயின் அது மீண்டும் ஆரோக்கியமான தன்மையொன்றினை அடைவதற்கு வாய்ப்புண்டு.

அதேநேரம், அனைத்து நிதிக் கம்பனிகளும் ஆற்றல் வாய்ந்ததும் முன்மதியுடையதுமான நிதியியல் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகளை தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும் என்றும் நிதித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன் கீழ் விடுக்கப்பட்ட முன்மதியுடைய பணிப்புரைகளையும் ஒழுங்குகளையும் பின்பற்ற வேண்டும் என்றும் மத்திய வங்கி வலியுறுத்த விரும்புகின்றது. அவை பங்குதாரர்களுக்குச் சரியான வெளிப்படுத்துகைகளை மேற்கொள்வதில் ஒழிவுமறைவற்றதன்மையுடன் தொடர்ந்தும் இருத்தல் வேண்டும்.

சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட்டினைப் பொறுத்தவரையில் பணிப்பாளர் சபையும் கம்பனியின் மூத்த முகாமைத்துவத்திலுள்ள உறுப்பினர்களும் மிகவும் அனுபவம் மிக்கவர்களாக இருந்த வேளையில், கல்விமான்களாகவும் தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகளைக் கொண்டவர்களாகவும் விளங்கினர். எனினும், துரதிஷ்ட வசமாக, வைப்பாளர்களின் பணத்தினை பாதுகாக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ள பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவமும் அவர்களின் பொறுப்புக்களைச் சரிவர ஆற்றவில்லை. இதற்குப் பதிலிறுத்தும் விதத்தில், மத்திய வங்கி ஏற்கனவே முகாமைத்துவ முகவரை நியமித்துள்ளதுடன் முகாமைத்துவ முகவர் இடர்ப்பாட்டிற்கான காரணங்களை கண்டறியும் பொருட்டு சட்ட ரீதியான கணக்காய்வினை மேற்கொள்வதற்காக கணக்காய்வு நிறுவனமொன்றின் பணிகளைப் பெறுவதில் ஈடுபட்டிருந்தது. இப்புலனாய்வுகள் முடிவடைந்ததும் கம்பனியின் தற்போதைய முறிவிற்கான காரணம் தொடர்பான தெளிவான விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 5: மத்திய வங்கி மிகக் கூடுதலான நிதிக் கம்பனிகளுக்கு உரிமங்களை வழங்கியிருப்பதுடன், 2013இல் மத்திய வங்கி எந்தவொரு உரிமத்தினையும் வழங்கப்போவதில்லை எனக் குறிப்பிட்ட போதும் அது இந்திரா பினான்ஸ்சிற்கு உரிமத்தினை வழங்கியிருந்தது.**

உண்மைநிலை

எந்த நேரத்திலும் நிதிக் கம்பனிகளுக்கு உரிமம் வழங்குவதற்கு மத்திய வங்கிக்கு [illegible]ளிக்கப்பட்டுள்ளதெனினும், 2012இன் இறுதிப்பகுதியில், 2013இலும் 2014இலும் புதிய உரிமம் எதனையும் வழங்குவதில்லை என்ற கொள்கைத் தீர்மானத்தினை எடுத்திருந்தது. [illegible] நடவடிக்கையானது இரு கம்பனிகளுக்கிடையிலான இணைப்புக்களையும் கையேற்புக்களையும் ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டதொன்றாகும். அக்கொள்கைத் தீர்மானம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

# தென்மராட்சி வலய ஆசிரியர் தின விழா



தென்மராட்சி, ஒக். 9
தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர் தின விழா நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற விழாவில் வலயத்தின் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி. பீ.முத்துலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலயத்தின் கடந்த வருட ஆசிரியர் தின விழாவின் பின்னர் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், பகுதித் தலைவர்கள் , ஆசிரியர்கள் எனப் 17 பேர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (வ-9)

# வடமாகாண ஆட்சி நிலைக்க நற்சேவை செய்வது அவசியம்

■ பாக்கியஜோதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9
பெரும் சவால்கள்.இடர்களுக்கு மத்தியில் தமிழர்கள் ஒன்றிணைந்து வாக்குப் பலத்தின் மூலம் ஒற்றுமையான ஆட்சியை நிலைநிறுத்தியுள்ளனர்.

இந்த ஆட்சி நீடித்து நிலைக்க ஒன்றாக இருந்து வடமாகாண மக்களுக்கான நற்சேவை செய்ய வேண்டிய நிலை கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. -இவ்வாறு மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியஜோதி சரவணமுத்து தெரிவித்தார்.

நல்லாட்சி செயலமர்வும், நூல் வெளியீடும் அண்மையில் நல்லாட்சிக் குழுவின் இணைப்பாளர் ச.மணிமாறன் தலைமையில் தியாகி அறக்கொடை நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நிறைவேற்றுப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபை மூலம் தெரிவு செய்யப்பட்ட தவிசாளர்கள், உறுப்பினர்கள் மக்களுக்கு என்ன சேவை செய்தீர்கள் என எண்ணிப் பாருங்கள்.

சட்டங்களையும், சுற்றறிக்கைகளையும் மற்றும் ஆவணங்களையும் பயன்படுத்தி, அனுபவப் பகிர்வுகளை ஒருகணம் சிந்தித்து சேவை செய்து மக்களின் நன்மதிப்பைப் பெறுங்கள்.

நல்லாட்சித் தத்துவங்களின் அடிப்படை நோக்கங்களை பின்பற்றுவீர்களானால் உங்கள் பிரதேசம் வளர்ச்சியடையும் என்றார்.

இந்த நிகழ்வில் மாற்றுக் கொள்கைக்கான நல்லாட்சிப் பிரிவின் அதிகாரி சிரியானி விஜயசுந்தர, முன்னாள் மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, முன்னாள் மேல் மாகாண பிரதி ஆணையாளர் என்.ஏ.தர்மசிறி, பேராசிரியர் எஸ்.சிவசந்திரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

மேலும், மாற்றுக் கொள்கைக்கான நிறுவனமும், யு.எஸ்.எயிட் நிறுவனமும் இணைந்த வகையில் தொகுக்கப்பட்ட மூன்று நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. (எ-50)

# சிக்கன கடன் வழங்கு சங்கங்களை மேலும் விருத்தி செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.9
யாழ்.குடாநாட்டில் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் செயற்படுவதோடு அவற்றை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடந்த அங்கத்தவர்களுக்கான கடன் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் தற்போது 163 சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்தச் சங்கங்கள் ஊடாக கிராமப்புற மக்கள் குறைந்த வட்டியுடன் கடன் வசதிகளைப் பெற்று தமது சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கான திட்டங்கள், செயற்பாடுகளை திணைக்களம் மேற்கொண்டு வருகிறது -என்றார். (எ-17)

## பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு மணிவிழா

தென்மராட்சி கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி இளைப்பாறிய ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்திக்கு பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பழைய மாணவர்களால் மணி விழா நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி மு.ப.9 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் விழா நடைபெறவுள்ளது.

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலையில் விரிவுரையாளராகவும், கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் அதிபராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# சிறுவர்களின் வயதிற்கேற்றவாறு அவர்களை நல்வழிப்படுத்துங்கள்

***மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு***



யாழ்ப்பாணம், ஒக்.9
சிறுவர்களின் வயதிற்கேற்றவாறு அவர்களை நல்வழிப்படுத்த முனைய வேண்டும் என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தினம், வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேலதிக அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

எது தவறானது, எது சரியானது என்பது இளம்பராய சிறுவர்களுக்குத் தெரியாது. இவற்றை முதலில் பெற்றோரும் ஆசிரியர்களும் தெளிவான முறையில் அவர்களுக்குப் புகட்ட வேண்டும்.

சிறுவர்களின் வயதிற்கேற்றவாறு அவர்களுக்கு அறிவியல், ஒழுக்கப் பண்புகள்,போன்றவற்றையும், உடல் ரீதியாக ஏற்படும் மாற்றங்கள் பிரச்சினைகளையும் அறிந்துகொள்ளச் செய்து அவர்களை நல்வழிப்படுத்த முனைய வேண்டும்.

கவனிப்பும், அவதானமும் சிறுவர்கள் விடயத்தில் இன்றியமையாதது. இவற்றைப் பெற்றோரும் ஆசிரியர்களும் வழிகாட்டிகளாகச் செயற்பட்டு, செயற்படுத்த வேண்டும். பண்பு, பாசம், உணவுத் தேவை, கல்வித் தேவை என்பனவற்றை சிறுவர்களுக்குவழங்க வேண்டும்.

பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் மட்டுமல்ல சமூகமட்ட நிறுவனங்களுக்கும் இப் பொறுப்பு உண்டு.

முதியோரை, மாற்றுவலுவுடையோரைக் கனம் பண்ண வேண்டும். இவர்களுக்கான உதவிகளை மனமுவந்து செய்து அவர்களின் நலன்களைப் பேண வேண்டும் என்றார். (எ-29)

# விபத்தில் மாணவன் காயம்

தென்மராட்சி, ஒக்.9
சைக்கிளில் வீதியைக் கடந்த மாணவனை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் கச்சாய் வீதியில் இடம் பெற்றது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவனான சிவபாலன் றஜீவன் (வயது-13) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

## கண்காட்சி

தென்மராட்சி, ஒக்.9
தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி இந்துக் கல்லூரி நூலகத்தின் கண்காட்சி நாளை நூலக மண்டபத்தில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் அ. கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (வ-9)

## மானிய உரம் இன்று விநியோகம்

தென்மராட்சி,ஒக்.9
சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பின் நெற் செய்கையாளர்களுக்கு மானிய உர வகைகள் இன்று மீசாலை புத்தூர் சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து விநியோகிக்கப்படும்.

நெற் செய்கையாளர்கள் உர வகைகள் பெற்றுக் கொள்வதற்கான ஆயத்தங்களுடன் வருகை தருமாறு அமைப்பின் தலைவர் வீ.கே.வேதநாயகம் அறிவித்துள்ளார். (வ-9)

## முதியோர் சங்கம் ஆரம்பம்

வரணி, ஒக்.9
கிராமிய முதியோர் சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாசேரி கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டோரை கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. முதியவர்களுக்கு தேவையான உதவிகள், முதியோர் அடையாள அட்டை பெறுதல் மற்றும் ஏனைய உதவிகள் வழங்கும் நோக்கில் இந்த சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-122)

# எங்கள் வீதியையும் கவனிப்பார்களா?



டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் யாழ்.மாநகர எல்லைக்கு உட்பட்ட காதி அபூபக்கர் வீதியையும் கவனத்தில் கொள்ளுமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் கூறுகையில்:

"அபூபக்கர் வீதியிலுள்ள கால்வாயில் கழிவு நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் டெங்கு நோய் பரவும் அபாயங்கள் தென்படுகின்றன. சுகாதாரத் திணைக்களம் டெங்கு ஒழிப்பு வாரத்தில் இது குறித்துக் கவனம் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' -என்றனர். (ஒ-10)

# சுகாதார மேம்பாட்டு செயற்றிட்ட கூட்டம்

தென்மராட்சி.ஒக்.9
தென்மராட்சி கல்வி வலயத்தின் பாடசாலை சுகாதார மேம்பாட்டு செயற்றிட்டம் தொடர்பான கூட்டம் இன்று பி.ப. 3 மணிக்கு வலய கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்தச் செயற்றிட்டத்துக்கு தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பத்து பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை சுகாதார கழக பொறுப்பாசிரியர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வடமாகாண கோட்ட ரீதியிலான பாடசாலை சுகாதார மேம்பாட்டு செயற்றிட்ட நிகழ்வுகள் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்த இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் அனல் மின் திட்டத்தின் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்து

## 2018 இல் பணிகள் பூர்த்தி



திருகோணமலை, ஒக்.9

500 மெகா வோல்ட் மின் சாரம் உற்பத்தி செய்யும் சம்பூர் அனல்மின் நிலைய திட்டம் தொடர்பான கூட்டு ஒப்பந்தம் திங்கட்கிழமை மாலை ஜனாதிபதி செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கை சார்பாக இலங்கை மின்சார சபையும் இந்தியா சார்பாக இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனமும் கைச்சாத்திட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், பஸில் ராஜபக்ஷ, பவித்ரா வன்னியாரச்சி, லக்ஷ்மன் யாப்பா, இந்திய வெளிவிவகார அமைச்சர் சல் மான் குர்ஷித் ஆகியோர் கலந்து கொண்டனர். இரு தரப்பினருக்குமிடையில் 5 ஒப்பந் தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

512 மில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள சம்பூர் அனல் மின் நிலையப் பணிகள் 2018ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

இருநாட்டு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னி யாரச்சி:-

இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள் ளது. காலம் கடந்தாவது இந்தத் திட்டத்தை ஆரம்பித்த தன் மூலம் 2018 இல் ஏற்பட இருக்கும் மின்சார நெருக்கடி தவிர்க்கப்படும்.

2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட இந்தியப் பயணத்தையடுத்தே சம்பூரில் அனல்மின்நிலையம்அமைக்க முடிவு செய்யப்பட்டது.

சர்வதேச தரத்திலான நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய அனல் மின் நிலையமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள் ளது.

> சர்வதேச தரத்திலான நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய அனல் மின்நிலையமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஜே.ஆர். ஜெயவர்தனவும், ஆர்.பிரேமதாஸவும் ஜனாதிபதிகளாக பதவி வகித்த போது, அனல் மின் நிலையம் அமைக்கும் முயற்சிகளை பிற்போட்டு வந்தனர். இதனால் கூடுதல் செலவில் எரிபொருள் மூலம் மின் உற்பத்தி செய்ய நேரிட்டது.

காலம் கடந்தாவது நாம் சம்பூர் அனல் மின் நிலையத்தை ஆரம்பித்திருக்காவிட்டால், எரிபொருள் மூலம் மின் உற்பத்திக்கு பெருந்தொகை நிதியைச் செலவிடக் கோரும்.- என்றார். (ச)

# பொத்துவில் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்திகள்



மட்டக்களப்பு, ஒக்.9

பொத்துவில் பிரதேசத்தில் 350 மில்லியன் ரூபா செலவில் வீதிகளும், நீர்ப்பாசனத் திட்டங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அவை விரைவில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கும் கூட்டம் திங்கட்கிழமை பொத்துவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். விரைவில் செம்மணிக்குளம் அபிவிருத்தி, நாவலாறு அணைக் கட்டு, பாலம் அமைத்தல் உட்பட பல அபிவிருத்தித்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (ச)

# வீட்டுத் தோட்டத்துக்கான உள்ளீடுகள் விநியோகம்



ஏறாவூர் ஒக்.9

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு முஸ்லிம் எய்ட் நிறுவனத்தினால் வீட்டுத் தோட்டத்துக்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தநிகழ்வு ஏறாவூர் சதாஹுஸைன் கிராமத்தில் இடம் பெற்றது.

ஏறாவூர்,மீராகேணி, மிச் நகர், ஐயங்கேணி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 21 குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்டத்துக்குத் தேவையான பயிர்ச் செய்கை உபகரணங்கள், பயிர் விதைகள், பழக் கன்றுகள் ஆகியன வழங்கப்பட்டன. (ச)

# பாணமவில் நிலநடுக்கம்



அம்பாறை, ஒக்.9

அம்பாறை, பாணமவில் 4.5 ரிச்டர் அளவில் நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது என்று புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

கடலுக்கடியில் 400 கிலோ மீற்றர் தூரத்திலேயே இந்த நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது என்று அந்தப் பணியகம் அறிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் திங்கட்கிழமை உணரப்பட்டுள்ளது. இலங்கையில் நில நடுக்க அபாயம் உள்ளது என்று புவியியல் வல்லுநர் திசாநாயக்க ஞாயிற்றுக்கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தார். இலங்கையில் கடலுக்கு அடியில் மிகப் பெரிய வெடிப்பு ஏற்பட்டிருப்பதால் நிலநடுக்க அபாயம் உள்ளது என்று அவர் கூறினார்.

இலங்கையின் தெற்கு மற்றும் தென்மேற்கு திசையில் புதிய புவி அடுக்கு உருவாகி வருவதால் இந்த வெடிப்பு ஏற்பட்டு வருகிறது என்று அவர் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கடிதம் தமிழில் எழுதுவதால் பட்டதாரி நியமனம் தாமதம்

## இப்படிச் சொல்கிறார் மட்டு. அரச அதிபர்



மட்டக்களப்பு,ஒக்.9

பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் விரைவில் வழங்கப்படவுள்ளது. நியமனக் கடிதங்களை தமிழில் தயாரிப்பதாலேயே காலதாமதம் ஏற்பட்டு வருகின்றது என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

தமிழ் பேசும் அதிகாரிகளுக்கு அவர்களது நியமனக் கடிதங்களை தமிழில் வழங்க வேண்டும் என்பது நியதி. அதனால், அவர்களது நியமனக் கடிதங்களை தமிழில் தயாரிக்க வேண்டிய கடப்பாடு அமைச்சுக்கு உள்ளது என்று அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் தமது நிரந்தர நியமனம் குறித்து மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.சாள்ஸை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சில் போதிய தமிழ் மொழி மூல அதிகாரிகள் இல்லாததால் நியமனக் கடிதங்களை தமிழில் தயாரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

அதனால் அமைச்சின் வேண்டுகோளுக்கமைய மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இருந்து நான்கு தமிழ் அதிகாரிகளை மடிக் கணினிகளுடன் அமைச்சுக்கு அனுப்பி வைக்கவுள்ளேன்.

அங்கு நியமனக் கடிதங்களை தமிழில் தயாரிப்பதற்கு துரிதமாக வேவைகள் இடம்பெறுகின்றன. நியமனக் கடிதங்கள் தயாரிக்கப்பட்ட தும் விரைவில் மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்.- என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் தமது நிரந்தர நியமனம் குறித்து மாவட்ட அரச அதிபரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 2500 பேர் பட்டதாரி பயிலுநர்களாக இணைக்கப்பட்டுள்ளனர். ஆறு மாதத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது; பின்னர் ஒரு வருடம் எனக் கூறப்பட்டது. தற்போது ஒரு வருடமும் மூன்று மாதத்தையும் தாண்டியுள்ள நிலையில் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

தற்போது வழங்கப்படும் கொடுப்பனவு போதாமையால் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளை பட்டதாரிப் பயிலுநர்கள் எதிர்நோக்கி வருகின்றனர். எனவே நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தென்கிழக்குப் பல்கலை மாணவர்கள் விடுவிப்பு

## 4 பேர் தொடர்ந்து சிறையில்

மட்டக்களப்பு,ஒக்.9

விளக்கமறியலில் வைக்கப்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களில் 49 பேர் நேற்று செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழத்தின் மாணவ குழுக்கள் இரண்டுக்கிடையில் இடையில் கடந்த வியாழக்கிழமை கைகலப்பு இடம்பெற்றது. அதனையடுத்து 53 மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த மாணவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலை செய்யப்பட்டனர். அதன்போதே நான்குபேர் தவிர்ந்த ஏனைய மாணவர்களை பிணையில் விடுவிக்குமாறு சம்மாந்துறை நீதிவான் உத்தரவிட்டார்.

தலா 50,000 ரூபா சரீரப் பிணையில் அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டதுடன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஏழாம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

> தவறான தகவல்களை வழங்கியமையாலேயே அவர்கள் நான்கு பேரும் தொடர்ந்து விளக்கமறியலில்வைக் கப்பட் டுள்ளனர்.

ஏனைய நான்கு மாணவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

தவறான தகவல்களை வழங்கியமையாலேயே அவர்கள் நான்கு பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். (ச)

# 32 ஊழியர்களுக்கு நியமனக் கடிதங்கள்



மட்டக்களப்பு,ஒக்.9

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் இதுவரை காலமும் தற்காலிக அடிப்படையில் கடமையாற்றி வந்த ஊழியர்களுக்கு கிழக்கு மாகாண கால்நடை மீன்பிடி அமைச்சினால் நிரந்தர.நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

32 ஊழியர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு ,சத்துருக்கொண்டான் விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது இந்த நியமனக் கடிதங்களை கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் நஸீர் அஹமட் வழங்கி வைத்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களுக்கு மரணத்தை கொடுத்தோரிடமே வடக்கு ஆட்சி

## சாடுகிறார் பஸில்

கடந்த காலங்களில் இளைஞர்களுக்கு மரணத்தைக் கொடுத்தவர்கள் வடக்கின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பல்லேவல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரசு வடக்கின் வசந்தம் திட்டத்தை அமுல்படுத்தியது அரசியல்நோக்கத்திற்காக அல்ல. மக்களுக்கு நன்மைகளை வழங்குவதற்காகவே. வடக்கு மக்களின் தீர்மானத்தை மதிக்கின்றோம். வடக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்ட கிட்டியமை அரசு அடைந்த வெற்றியாகும்.

அன்று இளைஞர் யுவதிகளுக்கு மரணத்தையும் குண்டுகளையும் வழங்கியவர்கள் இன்று வடக்கில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர். வடக்கில் நிலவி வந்த பதற்றமான சூழ்நிலையைத் தீர்த்து மக்களுக்கு ஜனாதிபதியே சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட தினம் முதல் இராணுவத்தினரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடுமையாகச் சாடியிருந்தனர். வடக்கு மக்கள் நீண்ட காலமாக பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியிருந்தார்கள் என்பதை தெற்கு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் வன் முறைகள் வெடிக்கக் கூடும்" என்று பஸில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# நாட்டில் நம்பிக்கையற்றோரே ஆஸ்திரேலியாவுக்குப் பயணம்

## நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க சாடல்

நாட்டின் மீது நம்பிக்கையில்லாதவர்கள் உயிரைப் பணயம் வைத்து ஆஸ்திரேலியா செல்கின்றனர் என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

"சரியானதைச் சரியெனச் சொல்ல முடியாத அளவிற்கு எமது சீரழிந்துள்ளோம். நாம் நம் நாட்டின் மீது எவ்வளவு தூரம் பற்று வைத்திருக்கிறோம். தூதரகங்கள், கடவுச்சீட்டு அலுவலகங்களில் மக்கள் குவிந்து வெளிநாடு செல்ல முயற்சிக்கின்றனர்.

ஆஸ்திரேலியா செல்ல வேண்டாம் என அடிக்கடி விளம்பரம் செய்யப்படும் நிலையில் மக்கள் உயிரைப் பணயம் வைத்து ஆஸ்திரேலியா செல்கின்றனர். இந்த நாடு வீழ்ச்சியடைந்துள்ளது. நாட்டின் மீது நம்பிக்கையில்லை.

பணத்தையே வாழ்க்கையின் அளவு கோலாகக் கருதுகின்றனர்.

சிங்களத்தன்மை, எமது அடையாளத்தை வெளிப்படுத்திக் கொள்ள பலர் விரும்புவதில்லை. குழந்தை யொன்றின் விலை 5ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகின்றது. இவ்வாறு சமூகம் சீரழிந்துள்ளது" என்றும் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவின் மகன் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

# பாணந்துறையில் புதிய எறும்பினம்

பாணந்துறையில் ஒரு வகை எறும்பு இனம் இனங்காணப்பட்டுள்ளமை தொடர்பில் குடம்பிகள் ஆய்வு குழு விசாரணைகளை ஆரம்பித் துள்ளது என பொரளை மருத்துவ ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதிகளில் இருந்து குறித்த எறும்புகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட் டுள்ளன என நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் அனில் சமரநாயக்க கூறியுள்ளார்.

இந்த எறும்புகள் விஷத்தன்மை கொண்டவை என்பதும், இதனால் சிலருக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாகவும் முதற் கட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது என டாக்டர் அனில் சமரநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.



கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் நவராத்திரி விழாவின் நான்காவது நாள் செல்வங்களை வாரி வழங்கும் லக்சுமி கொலுவுடன் வசந்த மண்டபத்தில் ஆரோகணித்திருப்பதைக் காணலாம். (கு)

# மைத்திரி குணரத்னவின் தந்தைக்கு மறியல் நீடிப்பு

ஐக்கிய தேசியக்கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்னவின் தந்தையான மாலிங்க ஹர்மத் குணரத்ன (வயது - 65) என்பவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் கிர்ஷாந்த புஷ்குமார (ரத்னம்) உள்ளிட்ட ஐவரை துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு கொலை செய்வதற்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை மாத்தறை பிரதான நீதிவான் ருவான் சிசிர குமார, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# விளையாட்டுத்துறையும் ராஜபக்ஷ மயமாகியது

## சோஷலிஸ இளைஞர் சங்கம் குற்றச்சாட்டு

நாட்டின் விளையாட்டுத்துறையும் ராஜபக்ஷ மயப்படுத்தப்பட்டுள்ளது என்று சோஷலிஸ இளைஞர் சங்கம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

சோஷலிஸ இளைஞர் சங்கத்தின் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன் தினம் பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய சோஷலிஸ இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தவை வருமாறு:

"எமது நாட்டின் விளையாட்டுத்துறையும் ராஜபக்ஷ மயப்படுத்தப்பட்டுள்ளதால் விளையாட்டுத்துறைக்கு வீரர்கள் தெரிவு செய்யப்படும் போது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

எல்லே சம்மேளனத்தின் தலைவராக ரோஹித்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளதுடன் ரகர் துறையின் தலைவராக நாமல் உள்ளார். இவ்வாறு கிரிக்கெட் குழுவிற்கும் ராஜபக்ஷ குடும்ப அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. விளையாட்டை ஒளிபரப்பும் உரிமையும் நாமல் ராஜபக்ஷவின் சி.என்.ஏ. தொலைக்காட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ராஜபக்ஷவின் அமைச்சர்களும் விளையாட்டுத்துறைக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர்.

கடந்த ஆண்டு விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே விளையாட்டுத்துறை சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி அதில் 56 சரத்துக்களைப் புதிதாக உட்புகுத்தினார். புகுத்தப்பட்ட சரத்துக்களுக்குள் அமைச்சர் நினைத்ததை செய்து முடிக்கலாம் என்ற சரத்தும் புகுத்தப்பட்டது.

இதனை அடிப்படையாகக் கொண்டு குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களுக்கும் தேர்தலில் தோற்றவர்களுக்கும் தேர்தல் தொடர்பில் இதனை மையமாகக் கொண்டு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன'' என்றார்.

# ஏ.டி.எம்.இல் பண மோசடி இருவருக்கு எதிராக வழக்கு

## சட்டமா அதிபரிடம் ஆலோசனை



மோசடியான வழியில் தன்னியக்க பணபரிவர்த்தனை இயந்திரத்திலிருந்து 7 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெற்றுக் கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுகொள்ளப்படவிருக்கின்றது.

சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ள இரண்டு சந்தேகநபர்கள் மீதும் பணச்சலவை சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்வது பற்றி சட்டமா அதிபரிடம் ஆலோசனையைக் கோரியுள்ளனர் என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதான நீதிவானுக்கு நேற்று திங்கட்கிழமை தெரியப்படுத்தினர்.

இந்த வழக்கில் லோகேஷ்வரன் மணிமாலன், ஆனந்த குலதீபம், பாலசுப்பரமணியம் உதயன் ஆகிய மூன்று சந்தேகநபர்கள் மீது தன்னியக்க இயந்திரங்களிலிருந்து பணத்தைக் கையாடியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

தற்போது இலண்டனிலுள்ள சந்தேகநபரான மணிமாலனை கைது செய்து இலங்கைக்கு நாடுகடத்துவது தொடர்பாக இலண்டன் பொலிஸாருடன் பேசி வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிறப்பு உறுப்பைப் பொருத்திச் சாதனை

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உலக சாதனையொன்று நிகழ்த்தப்பட்டுள்ளது என சிங்கள ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள் ளது.

விபத்தொன்றின்போது உடலிலிருந்து துண்டிக்கப்பட்ட ஆண் ஒருவரின் பிறப்பு உறுப்பு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை மூலம் மீளப் பொருத்தப்பட்டுள்ளது.

புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதான ஒரு குழந்தையின் தந்தை ஒருவரின் ஆணுறுப்பு துண்டிக்கப்பட்டது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைப் பிரிவு வைத்தியர்களும் ஏனைய வைத்தியர்களும் கூட்டாக இணைந்து துண்டிக்கப்பட்ட ஆணுறுப்பை மீளப் பொருத்தியுள்ளனர். 12 மணித்தியாலங்கள் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துண்டிக்கப்பட்ட ஆணுறுப்பு ஒன்றை மீளவும் பொருத்தி வழமை நிலைமைக்குக் கொண்டு வந்த முதல் சந்தர்ப்பமாக இது கருதப்பட வேண்டுமென கொழும்பு தேசிய வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் குறித்த நபர் இயல்பு வாழ்க்கையைத் தொடர முடியும் எனவும் வைத்தியர்கள் தெரி வித்துள்ளனர்.

சிறுநீர் கழித்தல், தாம்பத்திய உறவை தொடருதல்போன்ற சகல செயற்பாடுகளையும் தடையின்றி மேற்கொள்ளக் கூடிய வகையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த நபரே ஆணுறுப்பை துண்டித்துக் கொண்டார்என அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலம் அளித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதொச தலைவருக்கு எதிரான பிடிவிறாந்து மீளப் பெறப்பட்டது

சதொச தலைமைக்காரியாலய தீ விபத்து தொடர்பான விளக்கங்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகாமை தொடர்பில் சதொசவின் தலைவர் எரான் பெர்னாண்டோவிற்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணை மீளப்பெறப்பட்டுள் ளது.

சதொசவின் தலைவர், நீதிமன்றத்திற்கு மனு ஒன்றைச் சமர்ப்பித்துள் ளமையாலேயே இந்த மனு மீளப்பெறப்பட்டுள்ளது.

சதொச தலைமைக் காரியாலயத்தில் ஏற்பட்ட தீவிபத்து பற்றிய சி.சி. டி.வி. விடியோக்களை கொம்பனித் தெரு பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கு மாறு நீதிமன்றத்தால் முன்னர் உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும், நீதிமன்ற உத்தரவிற்கு அமைய செயற்படாத காரணத்தால், அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நிரந்தர அரசியல் தீர்வுக்கு தடம் பதிக்க உதவ வேண்டும்

● வடக்கு மாகாண சபைத் தேர்தலில், இப்பகுதி வாழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெற்றுக் கொடுத்துள்ள வெற்றி இந்தியாவுக்கு (இந்திய அரசுக்கு) பல்வேறு அழுத்தங்களை நல்கும் விதத்தில் அமைந்துள்ளது.

● தற்போது இடம்பெற்றிருப்பது முதலாவது படி மட்டுமே: இத்தோடு எல்லாம் முடிந்துவிட்டதாகக் கருதமுடியாது; எண்ணக்கூடாது.

● இலங்கைத் தமிழ் மக்களின் விவகாரத்தில், முழுமையான அக்கறையைச் செலுத்துவதோடு, பங்களிப்பையும் வழங்குவதற்கு இந்தியா தயாராகவே உள்ளது.

இவ்வாறு கனதியான கருத்துக்களை.வெளியிட்டுள்ளார் இலங்கை வந்திருந்த இந்திய வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்.

அவற்றோடு தரிக்காமல், தமிழ் மக்களுக்கு உரிய அரசியல் உரிமைகளை வழங்குவதற்கு முதற்படியாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு அவசியம் என்றும் இந்திய அமைச்சர் வலியுறுத்தி உள்ளார்.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்வுக்குச் செல்ல உள்ளதாக இந்தியாவுக்கு மட்டுமன்றி, பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அனைத்துலக சமூகத்துக்கும் நாடுகளுக்கும் இலங்கை அரசு வாக்குறுதி அளித்திருந்தது. அதற்கு மதிப்பளித்து பேச்சு வார்த்தைகள், கலந்துரையாடல்களை இலங்கை அரசு விரைவில் ஆரம்பிக்கும் என்று இந்திய அரசு எதிர்பார்ப்பதாகவும் குர்ஷித் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின் ஊடாக, அரசியல் தீர்வும் நல்லிணக்கமும் விரைந்து காணப்பட வேண்டும். அவை தொடர்பில் இந்தியா தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறது. அத்துடன் மட்டும் நின்று விடாமல், தேவையான உதவிகளை வழங்கவும் தமது நாடு தயாராகி வருவதாகவும் அமைச்சர் குர்ஷித் கொழும்பில் வைத்து அறிவித்திருக்கிறார்.

புதுடில்லியில் இருந்து வருகை தந்த வெளிவிவகார அமைச்சர் அத்தோடு நிறுத்தவில்லை. வடக்கு மக்களால் அமோக ஆதரவுடன் தோற்றுவிக்கப்பட்ட புதிய மாகாண சபைக்கும் ஒரு கிள்ளல் போட்டிருக்கிறார்!

இலங்கைக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை உருவாக்குவதற்கு, உண்டாக்குவதற்கு, ஒருமித்த குறிக்கோளை அடைவதற்கு-

புதிய வடக்கு மாகாண சபை இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டும், பணியாற்றும் என்று நம்பிக்கை வெளியிட்டுச் சென்றுள்ளார்.

ஆனால் இதே வகையில், அதிகாரப் பரவல் குறித்து ஆராய்வதற்கு உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சோர்வடைந்து போனதற்கான காரணத்தை, உத்தி யோக பூர்வமாக கேட்டறிவதற்கு அமைச்சர் சல்மான் குர்ஷித் முயற்சித்தாரா என்பது வெளிப்படுத்தப்படவில்லை.

இதேவேளை-

வடக்கு மக்களைப் பொறுத்த வரையில், அவர்கள் அரசியல் ரீதியில் மட்டுமன்றி, மற்றெல்லா வகைகளிலும், வழிகளிலும் முழு அளவில் அநாதைகள் ஆக்கப்பட்டிருப்பதனை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் விலாவாரியாக எடுத்துக் கூறியிருந்தார்.

எமது மக்களின் அரசியல் சுதந்திரத்தையும் அவர்களது உரிமைகளையும் பாதுகாப்பதற்கு நாம் முயற்சித்து வருகிறோம். அது ஈடேறுவதற்கு இந்தியா வழிவகுக்க வேண்டும்-

தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைப்பதற்கு இந்தியாவின் பங்களிப்புத் தொடர வேண்டும்- என்றும் அவர் வலியுறுத்தி இருந்தார்.

இவற்றின் மத்தியில் மிக ஆழமாகக் கூர்ந்து நோக்கப்பட வேண்டிய மிகப் பிரதான அம்சத்தை மறந்துவிடலாகாது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்புக்குக் கிடைத்த வெற்றி, தமிழ் மக்களின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகாது.

இதனை இந்திய அரசு மட்டுமன்றி, அனைத்துலக நாடுகளும் கூர்ந்து ஆழமாக நோக்க வேண்டும்.

தமிழ் மக்களின் பிரிக்கவொண்ணா அரசியல் உரிமைகளையும், அவர்களின் பொருளியல், தொழிலியல், கல்வியியல் சுய வளர்ச்சியையும் ஓங்கச் செய்வதற்கான தனித்துவமான கட்டமைப்பும் ஆட்சிமுறையும் தவிர்க்க முடியாதவை. காலத்தின் அத்தியாவசிய தேவையும் எனலாம்.

இவற்றை உள்வாங்க வல்ல அரசியல் தீர்வே தேவை என்பதனை இந்தியா உட்பட அனைத்துலக நாடுகளும் கருத்தில் கொள்ள வேண்டிய வேளை இது.

# கிழக்கில் வேரூன்றும் ஆயுதக் கலாசாரம்



பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் சகோதரர், ஷபாஸ் ஷெரீப்பின் ஆதரவுபெற்ற, லஷ்கர் இ தொய்பா அமைப்பின், பாதுகாப்பான பிரதேசமாக இலங்கை வேகமாக மாறி வருகிறது என்று, அனைத்துலக தீவிரவாத அமைப்புகளின் வளர்ச்சியைக் கண்காணித்து வரும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தம்மை அடையாளம் காட்டிக்கொள்ள விரும்பாத மூவர், இலங்கையில் லஷ்கர் இ தொய்பா - குறிப்பாக, பின்தங்கிய பகுதிகள் மற்றும் கிழக்குக் கரையோரப் பகுதிகளில், ஒரு தளத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான தகவல்களை வழங்கினர்.

பாகிஸ்தான் உளவுப் பிரிவான ஐ எஸ்ஐயுடன் தொடர்புடைய, பாகிஸ்தான் இராணுவத்தினர், இந்த இடங்களுக்கு, சுற்றுலா என்ற போர்வையில் அடிக்கடி பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையில் ஒரு பாதுகாப்பு வலயத்தை உருவாக்குவதற்கான லஷ்கர் இ தொய்பாவின் முயற்சிகளுக்கு, பாகிஸ்தான் இராணுவம் உதவி வருகிறது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்று இந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது, இவர்கள் இலங்கையில் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளும் திட்டங்களைக் கொண்டிருக்கவில்லை என்று கூறும் ஆய்வாளர்கள், இந்தியாவிலும், ஐரோப்பாவிலும், தாக்குதலைகளை நடத்துவதற்கான ஒன்று கூடும் இடமாகவும், திட்டமிடும் இடமாகவும், அவர்கள் இலங்கையைப் பயன்படுத்துகின்றனர் என்றும் குறிப்பிடுகின்றனர்.



"பௌத்த கலவரம் வெடிக்கலாம் என்ற கவலை உள்ளதாக, மூத்த உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். புத்தகயாவில் றொகிங்யா குழுக்களின் தீவிரவாத தாக்குதல், தேரோவாத பௌத்தத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள இலங்கை யையும் பாதித்துள்ளது.

இலங்கை உணவில் பன்றி இறைச்சியைப் பயன்படுத்துவதும், தாராளமாக மதுசாரம் கிடைக்கும் நாடாக இருப்பதும், மேலைத்தேய பாணி உடைகளை அணியும் பழக்கத்தைக் கொண்டிருந்த போதிலும், இங்கு ஆண்களும் பெண்களுமான, வஹாபி விருந்தினர்களின் வருகை அதிகரித்துள்ளது.

அந்த விருந்தினர்கள், விடுமுறைக்காக வரவில்லை, ஏனைய நாடுகளில் தாக்குதல்களை மேற்கொள்வதற்கான திட்டங்களை ஏனையோருடன் இணைந்து வகுப்பதற்காகவே வருகிறார்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

லஷ்கர் இ தொய்பா, தனது பெரும்பாலான நடவடிக்கைகளுக்கு, போலி நாணயம் ஊடாக, மும்பை, லக்னோ நகரங்களில் செயற்படும், தீவிரவாதக் குழுக்களின் மூலம் நிதி வழங்குகிறது. எனவே, இந்தியாவுக்குள் போலி நாணயத்தாள்களைக் கடத்துவதில், நேபாளத்துடன் இலங்கையும் இணைந்திருப்பது ஆச்சரியமானது அல்ல.

இலங்கையில் இருந்து போலி நாணயத்தாள்களை விநியோகிப்பது இடைமறிக்கப்பட்டுள்ளதாக, இந்தியத் தூதரக மூத்த அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

குறிப்பாக லஷ்கர் இ தொய்பா, இந்தியாவில் விநியோகங்களுக்கான உள்ளூர் ஆதரவுத் தளம் ஒன்றை உருவாக்குவதற்காக, சுமார் இரண்டு டசின் இலங்கைக் குடிமக்களை வளைகுடா ஒத்துழைப்பு நாடுகளில் இருந்து ஆள்சேர்ப்புச் செய்துள்ளதாகவும், தீவிரவாத குழுக்களைக் கண்காணிப் பவர்கள் தெரிவித்துள்ளனர்.

வளைகுடா ஒத்துழைப்பு நாடுகளில், பெருமளவு புலம்பெயர் இலங்கையர்கள் உள்ளனர்.

கிழக்குக் கரையோரத்தில், சித்தாண்டிக் [illegible] பயமாகி விட்டது.

குறிப்பாக, 2008இல் மும்பையில் நிகழ்ந்த 26/11 தீவிரவாதத் தாக்கு தலை அடுத்து, இந்தியாவின் சுற்றுப் புறத்தில் உள்ள லஷ்கர் இ தொய்பாவின் முதன்மை வலயமான, நேபாளத்தில், புலனாய்வு மற்றும் தீவிரவாத முறியடிப்புச் செயற்பாடுகள் தீவிரமடைந்ததை அடுத்து, வஹாபி மதகுருக்கள், பல்கிப் பெருகியுள்ளனர்.

அடிப்படைவாத சக்திகளுடன் உள்ளூர் மக்கள் உறுதியாக உள்ளதால், மியன்மாரைப் போன்று இலங்கையில் வஹாபி - பௌத்த கலவரம் வெடிக்கலாம் என்ற கவலை உள்ளதாக, மூத்த உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். புத்தகயாவில் றொகிங்யா குழுக்களின் தீவிரவாத தாக்குதல், தேரோவாத பௌத்தத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ள இலங்கையையும் பாதித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் எச்சங்களுக்கு எதிரான இறுதிப்போரில், இந்திய, இலங்கைத் ஆயுதகலாசார முறியடிப்பு செயற்பாட்டாளர்கள் கவனம் செலுத்திக் கொண்டிருக்க, லஷ்கர் இ தொய்பா, மற்றும் அதன் கிளைகள் மூலம், வஹாபி ஆயுததாரிகள் புதிய முனை ஒன்றைத் திறந்துள்ளது என்று மூத்த அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, வளர்ந்து வரும் அச்சுறுத்தலை நன்கு அறிவார், எதிர்நடவடிக்கைகளை எடுக்கும்படி அவர் பணித்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மிதவாத இஸ்லாமியர்களையும், இந்துக்களையும் மட்டுமன்றி, பௌத்தர்களையும் கூட வஹாபி ஆயுததாரிகள் இலக்கு வைப்பதை, இலங்கை அவதானித்துக் கொண்டிருப்பதாக, இன்னொரு அதிகாரி சொல்கிறார்.

இலங்கையில் அரசியலில் தீவிரமாகச் செயற்படும் தமிழ்த் தலைவர்கள் கூட, ஆலயங்கள், தேவாலயங்கள் மீது அவர்கள் தாக்குதல் நடத்தலாம் என்று கவலை கொண்டுள்ளனர்.

எனினும், இதுவரை லஷ்கர் இ தொய்பாவும் அதன் உள்ளூர், மூலவளங்களும், எதிர்காலத்தில் இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தே கவனம் செலுத்தி வருகின்றன.

லஷ்கர் இ தொய்பா, சிரியாவில் உள்ள சில ஆயுதக்குழுக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது.

நாசகாரச் செயற்பாடுகளில் ஈடுபடுவது தொடர்பாக அவர்களுக்கு பயிற்சிகளை வழங்க உதவியுள்ளது என்கிறார் ஆய்வாளர் ஒருவர்.

மேலும், லிபிய மற்றும் சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் கிடைக்கவும், உதவியுள்ளது என்கிறார் அவர்.

அமெரிக்காவும், பிரித்தானியாவும், இந்த இரண்டு நாடுகளிலும் உள்ள குழுக்களுக்கு வழங்கும் ஆயுதங்கள் கடைசியில் லஷ்கர் இ தொய்பாவிடம் சென்று சேரும் என்று அவரும், அவரது நண்பர்களுக்கும், கருதுகிறார்கள்.

13 ஆண்டுகளுக்கு முன்னர், கந்தகாரில் இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் கடத்தப்பட்ட சம்பவம், ஆயுதக் குழுக்கள் நேபாளத்தை ஒரு தளமாகப் பயன்படுத்துவது குறித்து இந்திய அதிகாரிகளை எச்சரிக்கை கொள்ளச் செய்தது. இலங்கையில் உள்ள பாதுகாப்பு இல்லங்களில் இருந்து லஷ்கர் இ தொய்பா தாக்குதலுக்குத் திட்டமிடுவதற்கு முன்னர், இந்தியப் பெருங்கடலின், சமீபத்திய ஆயுதகலாசாரத்துக்கான தளம் குறித்து, இந்திய அரசு விழித்துக் கொள்ளும் என்று நம்பப்படு கிறது.

**நன்றி: புதினப்பலகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன யுகத்தில் அஞ்சல்




ச.கமலேஸ்வரி
அஞ்சலகம், சங்கானை

அஞ்சல் திணைக்களமானது இருநூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த பழம்பெரும் திணைக்களமாகும். உலகளாவிய ரீதியில் மூலை முடுக்குகளில் உள்ளவர்களை ஒன்றிணைப்பது அஞ்சல் சேவையாகும். இந்த அஞ்சல் சேவையை மேற்கொள்ளும் ஒரேயொரு தனித்துவமான பிரிவாக அஞ்சல் திணைக்களம் விளங்குகிறது.

1796 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிரித்தானியர் எமது நாட்டில் மேற்கொண்ட அபிவிருத்திகளில் பிரதானமானது அஞ்சல் சேவையில் செய்த அபிவிருத்தியாகும்.

1815 ஆம் ஆண்டில் இலங்கையில் முதல் 6 அஞ்சலகங்கள் (கொழும்பு, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார்) நிறுவப்பட்டன. 1798 இல் இருந்து ஏதோ ஒரு வகையான அஞ்சல்சேவை இலங்கைத் தீவில் நடைபெற்று வந்தாலும் 1815 ஆம் ஆண்டிலே ஓர் ஒழுங்கமைத்த தபால் சேவைக்கு அத்திபாரமிடப்பட்டது.

1913 இலிருந்து 1923 வரை எல்.ஜே.சிமித் என்பவர் அஞ்சலதிபதியாகப் பதவி வகித்தார். இவரது காலப் பகுதியில் 1921 ஆம் ஆண்டிலேயே இலங்கையில் முதல் ஆறு உப அஞ்சலகங்கள் (திவலுப்பிட்டிய, அக்மீமன, ஆனமடுவ, கிரியெல்ல, மூதூர், சிலாபத்துறை) திறக்கப்பட்டன.

இவ்வாறு காலத்துக்குக் காலம் வளர்ச்சிபெற்ற அஞ்சல்துறை தற்போது நவீன யுகத்தில் பல்வேறு நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

நவீன யுகமானது தொழில் நுட்பங்களைக் கையாண்டு அவசர அவசரமாகவும் வேகமாகவும் இயங்கி வருகிறது. இந்த நவீன யுகத்தில் அஞ்சல்சேவை பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதன் காரணமாக அஞ்சலகங்களில் கருமபீட உத்தியோகத்தரின் தோற்றம், நடத்தை, மனப்பாங்கு என்பவற்றை மாற்றியமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கருமபீட அலுவலரின் தோற்றம் கம்பீரமாகவும், நேர்த்தியான உடை அணிந்தும், இன்முகத்துடனும், உற்சாகமாக இருக்க வேண்டும்.

இதற்கேற்ப கருமபீடத்துக்குள் நுழைந்த உடனேயே வாடிக்கையாளருக்கு கருமபீட உத்தியோகத்தர் மேல் ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்படக்கூடிய விதத்தில் தோற்றம் இருக்க வேண்டும். அலுவலர் தமது நடத்தையில் சுறுசுறுப்பானவராகவும், வினைத்திறனாக செயலாற்றக் கூடியவராகவும், வாடிக்கையாளரின் தேவைகளை முன்கூட்டியே உணர்ந்து சேவையாற்றக்கூடிய வராகவும், வாடிக்கையாளருடன் நல்லுறவைப் பேணக்கூடிய வராகவும் இருக்க வேண்டும்.

கருமபீட உத்தியோகத்தரின் மனப்பாங்கு வாடிக்கையாளருடன் சிநேகபூர்வமாகவும், புதிய நடைமுறைகளையும், புதிய சேவைகளைப் பற்றிய விவரங்களை வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்துபவராகவும், கௌரவப்படுத்தும் மனப் பாங்கையும், எதனையும் இல்லை என்று சொல்லாது சந்தர்ப்பத்துக்கு ஏற்ப செயற்படக்கூடியவராகவும் தமது கடமை சம்பந்தமான சுய அறிவு விருத்தியிலும் தேடலிலும் ஈடுபடக் கூடியராகவும் இருக்க வேண்டும்.

**நவீன மாற்றங்களுடன் இலங்கை அஞ்சல் சேவை**

♦ இலத்திரனியல் காசுக்கட்டளை = Emo ( கணினி ஊடாக நாட்டின் எந்தப் பாகத்துக்கும் உடன் அனுப்ப, பெற முடியும்.)

♦ உள்ளூர் விரைவு தபால் சேவை = Four our Express Couriel Service) (உங்கள் ஆவணங்கள் பொதிகள் பாரம் எடுக்கப்பட்ட அன்றே விநியோகம் செய்யப்படும்.)

♦ வெளிநாட்டு விரைவு தபால் சேவை = EMS Service (குறைந்த கட்டணம், குறைந்த நாள்களில் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு)

♦ முத்திரைப் பணியக செயற்பாடு = Phillatelic Bereura (முத்திரை சேகரிப்போருக்கான முத்திரைகள் , அதனோடிணைந்த மற்றைய சேவைகள்)

♦ ஊழியர் சேமலாபநிதிய, ஊழியர் நம்பிக்கை நிதிய கட்டணங்கள் செலுத்தலாம். = (EPF, ETF பெறுகைகள்)

♦ தேசிய சேமிப்பு வங்கிச் சேவை (NSB Service) (கணினி மயப்படுத்தப்பட்டது) சேமிப்பு வைப்புக்கள், நிரந்தர வைப்புக்கள், சிறுவர்களுக்கான (விருப்பன்) வைப்புக்கள், மகளிர்களுக்கான (ஸ்திரி) வைப்புக்கள், மைல் சேமிப்புக் கணக்குகள்

♦ மின்சாரப் பட்டியல் (CEB Collection) (கணினி மயப்படுத்தப்பட்டது) மேலதிக கட்டணமின்றி உடன் கணக்கில் வரவு வைக்கப்படும்.

♦ வெஸ்டன் யூனியன் (WESTE RN UNION) ஊடாக வெளிநாட்டு உறவுகள் அனுப்பும் பணத்தை உடன் பெறுவதற்கு

♦ மொபிடெல் கட்டணம் (Mobitel Telephone Bill) கணினியூடாக உடன் வரவு வைக்கப்படும்.

♦ தண்டப் பணம் செலுத்துதல். (On the spot fine) வாகனச் சாரதிகளால் இழைக்கப்படும் குற்றங்களுக்கு தண்டனைகளுக்குரிய பணம் செலுத்துதல்.

♦ பரீட்சைப் பற்றுச்சீட்டுக்கள் (Exam Receipt) க.பொ.த.சாதாரணம், க.பொ.த உயர்தரம் போன்றவற்றுக்கான பரீட்சைக் கட்டணம் செலுத்துதல், மீளாய்வுக் கட்டணம் செலுத்துதல், ஏனைய காலத்துக்கு காலம் சுற்றுநிருபத்தில் உள்ளவாறு பணம் செலுத்துகை

மேலும் தற்போது நாட்டின் பெரும்பாலான அஞ்சலகங்களில் தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் (Information Technology Officer) கடமையாற்றுகின்றனர்.

எங்கேயோ வெளிநாட்டு உறவுகளின் கடிதங்கள், பார்சல்கள் போன்றவற்றை உங்கள் வீட்டு வாசலுக்குக் கொண்டு வந்து தருபவர்கள் தபால்காரர்கள். மணியோசை கேட்கிறதா? தபால்காரர் வருகிறாரா? என்ற ஆவலுடன் வாசலை எட்டிப் பார்த்த காலத்தை மறந்து விட்டீர்களா?

நீங்கள் அங்கும் இங்கும் எங்கும் அலையாது உங்களுக்கு அண்மையில் உள்ள அஞ்சலகத்துக்குச் சென்று நீங்களும் இன்றே வாடிக்கையாளராகச் சேருங்கள்.

மேற்குறிப்பிட்ட தகவல்களை கவனத்தில் எடுத்து இன்றே கடைப்பிடித்து உங்கள் நேர அலைச்சலைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

---

வந்தியத்தேவர்

# நயினாதீவுக்கு 'கடற் பாதை' ஓடுமா?

குறிகாட்டுவான்-நயினாதீவுக் கடல் போக்குவரத்துக்கென கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் தருவிக்கப்பட்ட கடற்பாதை (FERRY) கடந்த 17.09.2013 ஆம் திகதி சேவைக்கென வெள்ளோட்டம் விடப்பட்டது.

சேவையை ஆரம்பிக்க சம்பந்தப்பட்டவர்கள் திட்டமிட்டிருந்த நிலையில் எதிர்பார்த்தபடி பாதைச் சேவையைத் தொடரமுடியாமல் போயுள்ளது.

வெள்ளோட்டம் விடப்பட்ட கையுடன்- அந்த நாளே-சேவை நின்றுவிட்டது; தடைப்பட்டு விட்டது. அதற்கு உண்மையான காரணம் தான் என்ன?

அந்தப் புதிய 'பாதை'யில் பொருத்தப்பட்ட 'மிதவை'கள் திடீரென கழன்று வெவ்வேறாக கடலில் மிதந்தன. இந்த நிலையில் 'கடற்பாதை' எப்படி ஓடும்?

அந்த உண்மையான காரணத்தை மறைத்து சீரற்ற காலநிலை காரணமாக கடல் கொந்தளிப்பாக இருப்பதால் பாதைச் சேவையைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாகவும், இந்த மாதம் 2 அல்லது 3 ஆம் திகதிகளில் சேவை வழமைக்குத் திரும்பும் என்றும் அப்போது கூறப்பட்டது. ஆனால் அறிவிக்கப்பட்டவாறு 'பாதைச்' சேவை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கான அறிகுறியையும் காணோம்.

சீரற்ற காலநிலை என்று கூறியது எல்லாம் முழுப் பொய். பாதை பொருத்துவதில் ஏற்பட்ட தவறுகளும், முழுமையாக வேலைகள் பூர்த்தியடைய முன்னர் தேர்தலுக்காக அவசரப்பட்டு பாதையை வெள்ளோட்டம் விட்டதும் தான் தடைகளுக்குக் காரணம் என்பது வெட்ட வெளிச்சம்.

காலநிலை சீரற்ற வேளைகளில்-கடலில் அலைகள் காணப்படும் போது-பயணிகள் நீரில் நனைய வேண்டும் என்பதால் இந்தச் சேவை நிறுத்தப்படும் என்று எவரும் கூறினால் நயினாதீவுக்கான இந்தப் பாதைச் சேவை கூடுதலான நாள்களுக்கு நிறுத்தி வைக்கப்பட வேண்டியதாகவே இருக்கும். இப்படியும் ஒரு 'பாதை'ச் சேவை வேண்டுமா?

அபிவிருத்தியில் மேலும் ஒருபடி முன்னேறிவிட்டோம் எனக் காட்டி தமக்குச் சாதகமாக வாக்குகளைப் பெறலாம் என்ற எண்ணத்தில் அவசர அவசரமாக வெள்ளோட்டம் விடப்பட்டதே தவிர அதற்கு வேறு எந்தக் காரணத்தையும் சொல்லமுடியாதென்பதே உண்மை.



அபிவிருத்தியில் மேலும் ஒருபடி முன் னேறிவிட்டோம் எனக் காட்டி தமக்குச் சாதகமாக வாக்கு களைப் பெறலாம் என்ற எண்ணத்தில் அவசர அவசரமாக வெள்ளோட்டம் விடப்பட்டதே தவிர அதற்கு வேறு எந்தக் காரணத்தையும் சொல்லமுடியா தென்பதே உண்மை.

பாதையின் வேலைகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை. தொடர்ந்தும் வேலைகள் நடந்த வண்ணமே உள்ளன. வெள்ளோட்டத்தின்போது கழன்ற உதிரிப்பாகங்கள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இருக்கைகள் கழற்றி வைக்கப்பட்டுள்ளன. இவை எல்லாம் நிறைவாகப் பூர்த்தி செய்யப்பட்டு சேவையை ஆரம்பிக்க மேலும் ஒரு சில மாதங்கள் தாமதிக்க வேண்டி வரும். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

திருகோணமலைப் பகுதியில் ஒடித் துருப்பிடித்துப்போன ஒரு பாதையின் உதிரிப்பாகங்களைத் கொண்டு வந்து குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் மேலும் இரண்டு வருடம் துருப்பிடிக்கப் போட்டபின், தற்போது மைபூசி புதிய வடிவமைப்புடன் மீண்டும் நயினாதீவு மக்கள் மீதான ஏமாற்று நடவடிக்கை அரங்கேற்றப்பட்டுள்ளது. சுளையாக 61 கோடி ரூபா இதற்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகைக்கு குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்குமிடை யில் பாலம் ஒன்றையே அமைத்திருக்க முடியும் என்கிறார்கள் நயி னாதீவு மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
09/10/2013

## தேசிய சேமிப்பு வங்கியின் 'ஹப்பன்' புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், ஒக்.9
வடமாகாண தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் 'ஹப்பன்' சிறுவர் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் மாணவர்கள் தரம் 5 இல் சித்தியடைந் திருப்பின் அந்தந்தக் கிளைகளுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு வங்கியின் பிராந்திய முகாமையாளர் அறி வித்துள்ளார். (ஓ)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



05.10.2013 அன்று தேசிய கல்வி நிறுவகத்தில் 'பிரதீபா பிரபா' விருதினைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியை
திருமதி மோகனலட்சுமி முருகானந்தன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
Congratulation
(32485)(5.6.3)

உ

### சிவபூமி முதியோர் இல்லம்

தொல்புரம்

**முதியோர் விழாவும்,**
**அமரர் K. பத்மநாதன்**
**மண்டபத் திறப்பு விழாவும்**

காலம்: இன்று (09.10.2013) புதன்கிழமை நேரம் : முற்பகல் 10.00 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- சிவபூமி வைரவர் ஆலய வழிபாடு
- திருமுறை
- புதிய மண்டபம் திறந்து வைத்தல்
  உயர்திரு. ஸ்ரீதர் பத்மநாதன்
- நினைவுருவப்படம் திரைநீக்கம்
  உயர்திரு. T. பேரின்பநாயகம் (இளைப்பாறிய DIG)
- மாலை அணிந்து மரியாதை செய்தல்
  திருமதி சிவபத்மராணி பத்மநாதன்
- தலைமையுரை - கலாநிதி ஆறு. திருமுருகன்
  (தலைவர், சிவபூமி அறக்கட்டளை)
- வரவேற்புரை - ம. தயாகரன் (இணைச்செயலாளர், சிவபூமி அறக்கட்டளை)
- ஆசியுரை - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரியார்
  (நல்லை குருமுதல்வர், நல்லை ஆதீனம்)
  - சிவஸ்ரீ சு. சுந்தரராஜக்குருக்கள்
  (வழக்கம்பராய் அம்மன் கோயில்)
- பிரதம விருந்தினர் உரை - வி. மகாலிங்கம்
  (துணைத் தூதுவர், இந்திய தூதுவராலயம்)
- நிறைவு உரை - ஸ்ரீ விக்கினேஸ்வரன்
  (இணைச் செயலாளர்-சிவபூமி அறக்கட்டளை)
- மதிய உணவு

நிறைவு

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்
நிர்வாக சபை, சிவபூமி முதியோர் இல்லம்,
தொல்புரம்-சுழிபுரம்.
(32481)(10.6)

### மலேசியா நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு(Six B work permit)

கீழ்க்காணும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.
* Advertising Company
* BHL Coral Service
* Net work Cable company
* Proton car company
* Transport Service
* Chocolate Company
* IDS ware house

போன்ற நிறுவனங்களில் உடனடி வேலை வாய்ப்பு, இரண்டு வருடம் (அதிஉயர் சம்பளம்), தங்குமிடம், மருத்துவம் இலவசம், இரண்டே வாரத்தில் பயணம், மலேசியா நாட்டு முகவர்களால் நேரடியாகவே உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எதிர்வரும் 12.10.2013 சனிக்கிழமை காலை 9.00 - 4.00 மணிவரை இல. 33, ஆசிர்வாதம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதியில் உள்ள Green Grass Hotel இல் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(32546) (10,6.3) தொடர்புகளுக்கு: 077 294 7954

### இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் வட பிராந்திய நிலையத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் ஒன்று கூடலும்

இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகத்தின் வட பிராந்திய நிலையத்தின் (IESL,Northern Provincial Centre) ஆண்டுப் பொதுக்கூட்டமும் ஒன்று கூடலும், இன்று (09.10.2013) புதன்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு யாழ்ப்பாணம், காரைநகரில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விற்கு வட பிராந்தியத்தில் வசிக்கும் சகல பொறியியலாளர் களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இந்த நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் யாழ்.கச்சேரிக்கு முன்பாகவுள்ள நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை அலுவலகத்திலிருந்து மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் எந்திரி.ரி.பாரதிதாசன், செயலாளர் (தொ.பே.- 0777871235, 0773537939) அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

Eng.N.Suthakaran,
for Chairman, IESL-NPC
(32460)(5.6.3)

## யோகா பயிற்சிப் பட்டறை

'யாழ்.யோகா அரங்கம்' நடத்தும் யோகாசனப் பயிற்சிப்பட்டறை அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் (நல்லூர்த் தேரடி அருகே) நடைபெறவுள்ளது. நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரை பயிற்சிப்பட்டறை நடைபெறவுள் ளது. அனுபவமுள்ள யோகா போதனாசிரியர் களால் இந்தப் பயிற்சிப்பட்டறை நடத்தப்படுகின் றது. ஆர்வமுடைய அனைவரும் இணைந்து பயன்பெறலாம் என யாழ். யோகா அரங்கத் தினர் தெரிவித்துள்ளனர். (ந)

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9
யாழ்.பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வின் அங்கீகாரத்துடன் தகவல் தொழில்நுட்ப பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கான விண் ணப்பத் திகதி பிற்போடப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பை மேற் கொள்ள 2013 ஆம் ஆண்டு உயர் தரப் பரீட் சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப் பிக்கலாம்.
விண்ணப்பப் படிவங்களை, இல :53, பருத்தித் துறை வீதியில் அமைந்துள்ள தகவல் தொழில் நுட்ப நிறுவகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ந)

## சைவ வினாவிடைப் போட்டியில் பரிசு பெறுவோர்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சைவசமய வினாவிடைப் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம் வெளியாகியுள்ளது.
1 ஆம் இடம்- முருகையா நித்தியமலர் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), 2 ஆம் இடம் - திருசாங்கினி சிவனேஸ்வரன் (யா/இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்- செல்வகுமார் நிஷாளினி (கிளி/மத்திய கல்லூரி), 4 ஆம் இடம் - ஜெனுசியா ஜெகதீஸ்வரன் (யா/இந்து மகளிர் கல்லூரி), 5ஆம் இடம் - தியாகராசா மதுசா (கிளி/மத்திய கல்லூரி) இவர்களுக்குரிய பரிசுகள் நல்லை ஆதீனத் தில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் சைவப் புலவர் பட்டமளிப்பு விழாவில் வைத்து வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### கார் விற்பனைக்கு

KO-xxxx தொடரிலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள Nanu Car விற்பனைக் உண்டு.
Air Condition
தொடர்பு:- 077 763 5926 (32487) (3.6.4)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் 2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
சுதந்திரன் ஆரபியை
வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்:
உற்றார், உறவினர்.
Congratulation

### தவறிவிட்டது

கொக்குவில் கிழக்கு,நந்தாவில் வீதியைச் சேர்ந்த கணேஸ்வரன் சதீஸ் என்பவருடைய அடையாள அட்டைகள், சாரதிய அனுமதிப்பத்திரம்,ATM அட்டை ஆகியவை அடங்கிய பேர்ஸ், கடந்த முதலாம் திகதி மருதனார் மடத்திலிருந்து உப்புமடம் சந்தி நந்தாவில் அம்மன் கோயில் வீதி ஊடாக செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:077 691 3464 (சி/2757)(5.6.3)

### வீடு விற்பனைக்கு உண்டு

சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணியில் புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட 3 அறையும், 2 ஹோல் உடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:075 040 6139 (32479)(5.6.3)

### வேலையாள்கள் தேவை

எமது மின் ஒட்டு தொழிலகத்திற்கு கேற் கிறில், சுருக்குகேற், சில்வர் பிற்றிங் வேலைகள் தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை.
தொடர்புக்கு: நிமல் வெல்டிங் சொப் (சி/12662) (4.6.3)
A9-வீதி, ஐயா கடையடி, சாவகச்சேரி.
தொ.பே.077 279 2811, 021 490 3188

### நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் வயதுடைய Lion German Shepherd நாய்க்குட்டிகளும் 2 வயதுடைய Rottweiler ஆண் நாயும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 818 5543 (30206) (4.6.3)

### வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் வருடாந்த மகோற்சவம் - 2013





**ஆறாம் நாள் கஜேந்திர சேவை**

ருக்மணி சத்தியபாமாவுடன்
காட்சிதரும் மாயவனே!
சிக்கல் எல்லாம் தீர்ந்து - இனி
நல்வாழ்வு நாம் வாழ
நெக்குருகி உனைப் பணிந்தோம்
நேர்த்திகளும் செய்தோம்
இக்கணமே எழுந்தருளி வந்து
திருவருள் தரவேண்டும்! ஐயா!!

மாலை 7.30 தெய்வீகப் பேருரை
விடயம் : பகவத்கீதை
பேருரை ஆற்றுபவர்: சொல்லின் செல்வன் இரா. செல்வவடிவேல்



விளம்பர அனுசரணை:
**சானுகா நகைமாடம்**
200 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3700.
**சானுகா ஜுவெல்ஸ்**
64 D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4687.
(சி/10979)(10.6.3)

### Wanted

For Immediate Employment in a Modern Multispecialty Hospital

1. Medical Officer with MBBS qualification (Local or Foreign qualification)
2. Qualified and Experienced Nurses, Pharmacists preferably with SLMC registration from govt. or private sector on Part Time/ Full Time basis

**Attractive Salary offered.**

Director, Human Resources
Northern Central Hospitals (Pvt) Ltd,
342, Palaly Road, Jaffna.
(சி/12633) (10,6,3)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/ஆனையிறவு அரசினர் சிங்கள தமிழ்கலவன் பாடசாலையில் 2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
செல்வன் இராசேந்திரகுமார் ராகவன்
159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டுவதோடு, மற்றும் செல்வி கணேஸ் மயூரி - 142 புள்ளிகள், செல்வி சுரேஸ்குமார் அனுசியா- 126 புள்ளிகள், செல்வன் சர்வேஸ்வரன் பிரகாஸ்ராஜ் - 125 புள்ளிகள் பெற்றதையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களுக்கு கற்பித்த ஆசிரியை பத்மினி சயந்தன் அவர்களையும் மற்றும் அதிபர்,ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்
பாடசாலைச் சமூகம்.
Congratulation
(37552)(5.6.3)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி சுரேஷ்குமார் வேதவித்தகி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி
செல்வி சுரேஷ்குமார் வேதவித்தகி
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் கல்வியில் மேலும் பல சித்திகளைப் பெற்று விளங்க எல்லாம் வல்ல அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.
வாழ்த்துவோர்: சி.கதிரவேலு குடும்பம்
மாவை கலட்டி, தெல்லிப்பழை.
Congratulation
(32484)(5.6.3)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/ புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் கல்வி கற்று 2013 தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் 179 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது செல்வப் புதல்வி
**சசிகரன் சுகிர்தா**
அவர்கள் மேன்மேலும் கல்வியில் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பப்பா -வயிரமுத்து
அப்பம்மா-கண்மணி
பெரியப்பாமார்கள்-வினோகரன் குடும்பம் (லண்டன்)
பாஸ்கரன் குடும்பம்-(பிரான்ஸ்)
மாமா-சுஜீவரூபன், அத்தை-றசிதாசினி
அப்பா-சசிகரன், அம்மா-சுபலக்சுமி(புதுக்குடியிருப்பு)
சித்தப்பா-சதீஸ்
மிருசுவில் வடக்கு, மிருசுவில்.
Best Wishes
(32480)(3.6.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால்வாய்களை புனரமைக்கும் பணி ஆரம்பம்



வவுனியா.ஒக்.9
வவுனியா பஸ் நிலையம் அருகே உள்ள கால்வாய்களைப் புனரமைக்கும் பணிகளில் வவுனியா நகர சபையினர் ஈடுபட்டுள்ளனர்.
பஸ் நிலையத்தில் கிழக்குப் புறமாகவுள்ள கால்வாய்கள் உடைக்கப்பட்டு கழிவுநீர், மழைநீர் தடையின்றி வெளியேறுவதற்கு ஏற்ற வகையில் நவீன முறையில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே இருந்த கால்வாய்களைவிட தற்போது புதிதாக அமைக்கப்படும் கால்வாய்கள் விசாலமாகவும் சுத்திகரிப்பதற்கு இலகுவாகவும் இருக்கத்தக்க வகையில் அமைக்கப்பட்டு வருவதைப் பலரும் பாராட்டுகின்றனர்.
இதனைப் போன்று வவுனியா நகரின் பிரதான வீதிகளுக்கு அண்மையில் இருமருங்கிலும் உள்ள கால்வாய்களையும் புனரமைத்துத் தருமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

# வீடு அமைப்பதற்கு வழங்கப்படும் உதவு தொகையை அதிகரியுங்கள்

## ■ வீட்டுத்திட்டப் பயனாளிகள் கோரிக்கை

முல்லைத்தீவு.ஒக்.9
முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் நிரந்தர வீடுகளுக்கான உதவு தொகையை அதிகரிக்குமாறு வீட்டுப் பயனாளிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நிரந்தர வீட்டுத் திட்டங்கள் பல்வேறு காரணங்களால் இழுபறி நிலையில் காணப்படுகின்றன.
குறிப்பாக இந்த வீடுகளை அமைப்பதற்கு வழங்கப்படும் உதவுதொகை போதாமல் இருப்பது இதற்கான முக்கியமான காரணமாகும். மேலும் மணலைப் பொறுத்தவரை மணல் அனுமதி கிடைத்த போதிலும் தேவையான அளவு ஏற்றுவதற்கு முடியவில்லை எனவும், ஆறுகளில் மணல் குறைந்துள்ள நிலையில் வெகு தூரத்திலிருந்து அதனை ஏற்றிவர வேண்டியுள்ளதாகவும் வீட்டுப் பயனாளிகள் தெரிவிக்கின்றனர். தனியாரிடம் அதிக விலை கொடுத்து மணலைப் பெற வேண்டிய நிலையும் இங்கு காணப்படுகின்றது. வீடுகளுக்குத் தேவையான மரங்களை வெட்டுவதற்கு இங்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் தென்பகுதியிலிருந்து எடுத்துவரப்படும் மரங்களை அதிக விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் அவை தரமான வையாக இருப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கூலியாள்களுக்கும் அதிக சம்பளம் வழங்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் வீடு கட்டுவதற்கென வழங்கப்படும் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் வீட்டைக் கட்டி முடிக்கப் போதுமானதாக இல்லை. இதனால் அரை குறையான நிலையில் வீடுகள் காணப்படுகின்றன. பலர் கடன் பெற்றும் நகைகளை அடைவு வைத்தும் வீடுகளை அமைத்து வருகின்றனர்.

மேலும், கூலியாள்களுக்கும் அதிக சம்பளம் வழங்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் வீடு கட்டுவதற்கென வழங்கப்படும் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் வீட்டைக் கட்டி முடிக்கப் போதுமானதாக இல்லை. இதனால் அரைகுறையான நிலையில் வீடுகள் காணப்படுகின்றன. பலர் கடன் பெற்றும், நகைகளை அடைவு வைத்தும் வீடுகளை அமைத்து வருகின்றனர்.
எனவே, வீடுகளை அமைப்பதற்கு வழங்கப்படும் பணத்தின் தொகையை அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. இல்லையேல் மக்கள் கடனாளிகளாகவே இருப்பதுடன் வீடுகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையும் ஏற்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-500)



நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு ஜலீட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கற்சிலைமடு பாடசாலை மாணவர்கள் பாடசாலை வளாகத்தில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (க-500)

## நவராத்திரி பூசை

முல்லைத்தீவு.ஒக்.9
ஒட்டுசுட்டானில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நவராத்திரி பூசைகள் இடம்பெற்று வருகின்றன.
அனைத்துப் பாடசாலைகளும் மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு கும்பங்கள் வைக்கப்பட்டு வகுப்புக்கள் வாரியாக பூசைகள் நடைபெற்று வருகின்றன.
மேலும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.
இறுதி நாளான விஜயதசமி அன்று ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## அடிக்கடி பழுதாகும் நொச்சிமோட்டை பாலம்

வவுனியா. ஒக்.9
வவுனியா நொச்சிமோட்டைப் பாலத்தில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் போக்குவரத்தின்போது விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வவுனியா ஏ -9 வீதியில் அமைந்துள்ள இந்த நொச்சிமோட்டைப் பாலம் போக்குவரத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றது -
கடந்த ஆண்டு மழை வெள்ளம் இந்தப் பாலத்தை மேவிப் பாய்ந்ததால் சில மணி நேரம் போக்குவரத்தில் தடைகள் எற்பட்டன.
மேலும் இந்தப் பாலத்தில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் இதனூடாகச் செல்லும் பயணிகளை அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.
இரவு வேளைகளிலேயே விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாக வாகனச் சாரதிகள் தெரிவிக்கின்றனர். எனவே மழைக் காலத்துக்கு முன்னர் இந்தப் பாலத்தை நிரந்தரமாகப் புனரமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-402)

## புனரமைக்கப்பட்டு வருகின்றது மல்லாவி வயல் வீதி

துணுக்காய், ஒக்.9
பாண்டியன்குளத்தையும் மல்லாவியையும் இணைக்கும் பிரதான வயல் வீதி, வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.
மல்லாவியில் இருந்து சுமார் 6 கிலோ மீற்றர் நீளமான இந்த வயல் வீதியூடாக பாண்டியன்குளம் பிரதேசத்துக்கு மக்கள் இலகுவாகப் பயணிக்கக் கூடியதாக உள்ளது.
தற்போது இந்த வீதி கிரவல் மண் கொண்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.
தற்போது சுமார் 3 கிலோ மீற்றர் நீளமான பகுதி புனரமைக்கப்பட்டுள்ளது. மழைக்காலம் ஆரம்பிக்கும் போது இந்த வீதி சேறும் சகதியுமாக மாறுவதற்கான வாய்ப்புக்களும் உண்டு. இருந்தாலும், இவ் வீதியை முழுமையாக புனரமைத்து மழைக்கு முன்னர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-415)



# தமிழர்களின் உணர்வுகளை எவராலும் அழிக்க முடியாது

## கூறுகிறார் விநோ. எம்.பி.

வவுனியா,ஒக்.9
எமது உரிமைகளுக்கான உணர்வுகளை எவராலும் அழிக்க முடியாது என்பதை நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான வினோ நோகராதலிங்கம்.
வன்னி பார்வையற்றோர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;
எம்மை அழித்தவர்களுக்கு நடைபெற்று முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் பொதுமக்கள் நல்ல பதிலடி கொடுத்துள்ளனர். எமது உணர்வுகளை எவராலும் சாகடிக்க முடியாது. நாம் வீழ்ந்தவர்களாக இருந்த போதிலும் இப்போது எழுந்து நிற்கின்றோம். எங்களுடைய மண்ணை நாங்களே ஆளுகின்ற உரிமை நிரூபிக்கப்பட்டுள்ளது.
கடந்த போர் எம்மை வறுமைக்குள் தள்ளியுள்ளது. ஆனால் பார்வையற்றோர், அங்கவீனர்கள் எனப் பலர் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு உதவுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

எம்மை அழித்தவர்களுக்கு நடைபெற்று முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் பொது மக்கள் நல்ல பதிலடி கொடுத்துள்ளனர்.

# வவுனியா நகர சபையில் உள்ளூராட்சி வாரம்

வவுனியா, ஒக். 9
வவுனியா நகர சபையினரால் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் திட்டமிடப்பட்ட விதத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
எதிர்வரும் 21 ஆம் திகதி கோயில் குளம் பகுதியில் நடமாடும் சேவையும், 22, மற்றும் 23 ஆம் திகதிகளில் நடமாடும் வருமான சேகரிப்பு நடவடிக்கையும் மற்றும் 23 ஆம் திகதி பொது இடங்களில் சிரமதானப் பணிகள் சுத்தமான, தரமான உணவுகளை வழங்கும் சிற்றுண்டிச் சாலைகளுக்கு பரிசில் வழங்குதல், எலிக்காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன இடம்பெறவுள்ளன. 24 ஆம் திகதி பல்வேறு வீதிகளில் தெரு விளக்குகள் பொருத்துதல், 25 ஆம் திகதி சுற்றாடல், மர நடுகை நிகழ்வுகள், குடிதண்ணீர் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் என்பனவும், 27 ஆம் திகதி புதிய நூல்களைக் காட்சிப்படுத்தல், வாசகர்களுக்கிடையே போட்டிகளை நடத்தல், பார்வை அற்றவர்களுக்கு பாடல் போட்டி நடத்தல் என்பனவும், 28 ஆம் திகதி விளையாட்டுப் போட்டிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.
மேலும் கிராமங்கள் சிலவற்றில் இடம்பெறும் நடமாடும் சேவையின் மூலமாக ஆதன வரி, பெயர் மாற்றம், சைக்கிள்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கல், ஆட்டோக்களைப் பதிவு செய்தல், தொற்று நோய் விழிப்புணர்வுச் செயற்பாடுகள், நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றுதல், புதிய கட்டடங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் உட்பட பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

இந்த ஆண்டுக்கான உள் ளூராட்சி வாரத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** ஆடம்பரமான செலவுகளைக் குறைப்பீர்கள். மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**இடபம்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். பிராத்தனைகளை நிறைவேற்றுங்கள்.

**மிதுனம்:** நண்பர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.

**கடகம்** : வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**சிங்கம்:** மனசாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிராத்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** பதறாமல் பக்குவமாக செயற்படுங்கள். நண்பர். உறவினர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உங்கள் திறமையை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**நாளை**

புரட்டாதி-24 வியாழக்கிழமை 10.10.2013
திதி: ஷஷ்டி மு.இ.09.15 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.ப.12.49 வரை
சுபநேரம்: 07.32 - 09.02 வரை
இராகுகாலம்: 01.32 - 03.02 வரை

**துலாம்:** தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். தாழ்வுமனப்பான்மை தலைதூக்கும். உறவுகளால் பிரச்சினைகள் வரக்கூடும். யாரையும் எடுத்தெறிந்து பேசாதீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**விருச்சிகம்:** உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வாகனத்தைச் சீர்செய்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**மகரம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பம்:** நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**மீனம்:** பழைய கடன் தீரும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 5 | | | 4 | | 6 | |
| 4 | | | 7 | 6 | | | | |
| | 2 | 6 | 5 | 9 | | 8 | 7 | |
| | 4 | | | 2 | | 3 | | |
| 6 | | 2 | | | | 4 | | 5 |
| | | 9 | | 4 | | | 8 | |
| | 1 | 4 | | 5 | 6 | 7 | 2 | |
| | | | | 1 | 2 | | | 3 |
| | 6 | | | | | 9 | 5 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 9 | 8 | 5 | 1 | 3 | 6 | 4 |
| 1 | 5 | 8 | 4 | 6 | 3 | 2 | 7 | 9 |
| 4 | 6 | 3 | 2 | 9 | 7 | 8 | 1 | 5 |
| 2 | 9 | 1 | 6 | 7 | 5 | 4 | 3 | 8 |
| 8 | 3 | 7 | 9 | 1 | 4 | 6 | 5 | 2 |
| 6 | 4 | 5 | 3 | 8 | 2 | 1 | 9 | 7 |
| 9 | 1 | 2 | 7 | 4 | 6 | 5 | 8 | 3 |
| 3 | 7 | 6 | 5 | 2 | 8 | 9 | 4 | 1 |
| 5 | 8 | 4 | 1 | 3 | 9 | 7 | 2 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**வீடு வாடகைக்குத் தேவை**

5 பேர் கொண்ட உத்தியோகம் பார்க்கும் குடும்பத்திற்கு கந்தர்மடம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், கொக்குவில் ஆகிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
(32460)(3.6.4) தொடர்பு:077 759 0496

## ஜோர்தான் செல்லும் கிளிநொச்சி மாணவனுக்கு நிதி உதவி

செலான் வங்கியின் மணிக் கிராம் மூலம் வெளிநாட்டில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்பவர் களுக்கான போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பணப் பரிசில் வழங்கும் நிகழ்வும் ஜோர்தான் நாட்டில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து மாணவனுக்கான நிதி வழங்கும் நிகழ்வும் அண்மையில் செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளையில் நடைபெற்றுள்ளது.
செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளையின் அனுசரணையில் அன்பளிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள செலான் வங்கிக் கிளையில் கிளை முகாமையாளர் இ.சதாகரன் தலைமையில் நடைபெற்றது.
இதில் கிளி நொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.ஈ.மகேந் திரா மற்றும் மாவட்ட மக்கள் தொடர் பாடல் பொலிஸ் பொறுப்பதிகாரி எம். எல்.அரிப்டீன் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-6)

**SRI SARANIYA CIVIL ENGINEERING CONSTRUCTION**

**புளக் கற்கள் விற்பனைக்கு**

(ஆறு பக்கமும் அழுத்தமான கற்கள்)

01. கண்டாவளை மணல் கலந்தது-Rs.40/-
02. கண்டாவளை மணல் +½"கல்-Rs.45/-
03. கண்டாவளை மணல் +5/8"கல்-Rs.48/-
04. கண்டாவளை மணல் கருங்கல்-Rs.52/-

மேற்குறிக்கப்பட்டுள்ள விலைகளில் கற்கள் வட மாகாணத்திற்கு விநியோகம்

அத்துடன்
01. சுற்று மதில் கட்டுதல்
02.பழைய, உடைத்த வீடு திருத்துதல்
03.புதிய வீடு கட்டுதல் தொடர்பு கொள்ள

077 344 9916, 071 704 1492

சிறி சரணியா

**மெழுகுவர்த்தி விற்பனைக்கு**

★பல தரப்பட்ட அளவில் மெழுகுவர்த்தி விற்பனைக் குண்டு.
★தேவாலய ஓடர், தேவாலயத்தினுள் விற்பனை அனுமதி வரவேற்கப்படுகிறது.

(32383) (3.6.4) தொடர்பு: 077 344 9916, 071 704 1492

## வவுனியா பாடசாலையில் வாசிப்பு மாத நிகழ்வு

வவுனியா. ஒக்.9
வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியாவில் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் இடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் கலை நிகழ்வுகளும் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டும் பதாகைகளும் எழுதியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.
இந்த வகையில் முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் வாசிப்புப் பழக்கத்தை மாணவர்கள் மத்தியில் மேம்படுத்தும் முகமாக பாடசாலை ... நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. (வ-421)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்**




யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்திலிருந்து 2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியெய்திய மாணவர்களையும் அண்மித்த புள்ளியைப் பெற்ற மாணவனுடன் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள்**

| | | |
|---|---|---|
| தே.தனுராஜ் -149 | வ.சுவேத்தா - 138 | [illegible] - 132 |
| பு. பிரவீனா -131 | ஜெ.கபித்பிரியன் - 130 | [illegible] - 118 |
| ச.டயானா 114 | ப.பிரசாந் -111 | [illegible] |
| ச.சாமினி - 103 | சு.திசானினி - 103 | ம.விபோசினி - 101 |

[32468][5.6.3] வாழ்த்துவோர்:பாடசாலைச் சமூகம்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



கடந்த ஆவணி மாதம் நடைபெற்ற 2013 தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையைச் சேர்ந்த
**தோமஸ் அல்வின் யஸ்ரின் ராஜ்**
185 புள்ளிகளைப் பெற்று தீவகக் கல்வி வலயத்தில் முதலாம் நிலையில் தேர்ச்சி பெற்றுள்ளார். அவர் மேலும் பல சாதனைகளைப் புரிந்து வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யா/நெடுந்தீவு சிக்கிரியாம் பள்ளம் அ.த.க வித்தியாலயம்
(32459)(6.3.4)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/ வரணி வடக்கு அ.த. பாடசாலை
யா/ வரணி வடக்கு அ.த. பாடசாலை
செல்வன் வரதராஜன் நிறோஜன்
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப்பெற்று எமது பாடசாலைக்கும் வரணிப் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற பின்வரும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



செல்வி ந.சிவர்ணா-143
செல்வன் த.சங்கீதன்-139
செல்வி ர.லக்சிகா-112
செல்வன் த.ததுஸ்ரன்-105
செல்வன் பி.நிருபன்-101

பாராட்டி வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/ வரணி வடக்கு அ.த.க. பாடசாலை
(45663)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




**திருமதி யோகேஸ்வரி கணேசமூர்த்தி**

உலக அஞ்சல் தினமான இன்று அகில இலங்கை ரீதியாக தேசிய சேமிப்பு வங்கி மூலம் ஆகக் கூடிய சேமிப்பு வைப்பினைச் சேகரித்த உப அஞ்சல் அலுவலகங்களுக்குள் முதலாவது இடத்தினைப் பெற்றமைக்காக அஞ்சல் சேவைகள் அமைச்சிடமிருந்து விருதினையும் சான்றிதழையும் பெறும் சோவாவத்தை (வேலணை) உபதபாலதிபர் திருமதி யோகேஸ்வரி கணேசமூர்த்தியை அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

திருமதி கனகேந்திரன் குடும்பத்தினர்.
கை. கணபதிப்பிள்ளை குடும்பத்தினர்
திருமதி தேவி நடராசா குடும்பத்தினர்.
கை.விக்னேஸ்வரன் குடும்பத்தினர்.
(32476)(5-6-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...க்கான அறிவித்தல்

**...ல் இன்வெஸ்ட்மன்ட் அன்ட் பினான்ஸ் லிமிடெட்டினால் எதிர்நோக்கப்பட்ட இடர்ப்பாடுகளை ...துடன் கோரிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.**

# ...ரிக்கைகள் எதிர் உண்மை நிலை

இந்திரா பினான்ஸ் லிமிடெட் 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் கீழ் ஒரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியாக ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்தது. கொள்கை ரீதியாக மத்திய வங்கியும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளை மிகக் கடுமையான ஒழுங்குவிதிகளின் கீழ் இயங்கும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளாக தரமுயர்த்துவதற்கு ஊக்குவித்து வருகின்றது. இதன்படி, இந்திரா பினான்ஸ் லிமிடெட் 2013 மேயில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனி என்ற அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டது. இதேபோன்று சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியான சம்பத் லீசிங் அன்ட் பக்டறிங் லிமிடெட்டும் வரும் காலத்தில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியாக தரமுயர்த்தப்படவுள்ளது. இருப்பினும் கூட வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை அவை தரமுயர்த்தப்பட்ட பின்னரும் கூட மாற்றமின்றியே காணப்படும்.

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 6: நிதித் தொழில் துறையில் இணைப்புக்களுக்கு மத்திய வங்கி ஊக்குவிப்பதில்லை.**

**உண்மைநிலை**

மத்திய வங்கி, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இணைக்கப்படுவதற்கும் கூட்டிணைக்கப்படுவதற்கும் தொடர்ச்சியாக ஊக்குவிப்புக்களை வழங்கி வருகின்றது. இத்துறையிலுள்ள பங்குதாரர்களுடன் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு கூட்டங்களிலும் இது அறிவிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் பீபிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி மற்றும் சீ லீஸ் லிமிடெட் ஆகிய இரண்டு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களும் முறையே பீபிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி உடனும் எம்சிஎஸ்எல் பினான்சியல் சேர்விசஸ் லிமிடெட்டுடனும் இணைக்கப்பட்டன. சிறிய மற்றும் நடுத்தரளவு உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளை இணைப்பதன் மூலமும் ஒன்றுசேர்ப்பதன் மூலமும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறையினை கூட்டிணைப்பதற்காக கொள்கைகள் கடந்த பல மாதங்களாக கலந்துரையாடப்பட்டு வருகின்றன. இவ்வுபாயத்தின் பெறுபேறு யாதெனில், நிதியியல் உறுதிப்பாட்டினை மேலும் முன்னேற்றுவதற்குமான பாரிய, முறையியல் சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளைக் கொண்டிருப்பதேயாகும். மேலும், இது பொருளாதார வளர்ச்சியுடன் இசைந்து செல்லத்தக்க உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் வியாபார மாதிரிகளை விரிவாக்குவதனை இயலச் செய்யுமென்பதுடன் ஏதேனும் எதிர்கால இடர்நேர்வுகளை உள்வாங்கிக் கொள்வதற்கும் வசதியளிக்கும். மேலும், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் ஐந்தொகையினைப் பலப்படுத்துவதற்காக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகளை தற்போதைய மட்டத்திலிருந்து கணிசமானளவிற்கு அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

பல தடவைகள் குறிப்பிடப்பட்டவாறு, மத்திய வங்கியும் இத்தொழில் துறையிலுள்ள கூடியளவான கையேற்புக்களை எதிர்பார்க்கிறது. இதற்கமைய ஏதேனும் வங்கிகள் முன்வந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் சிலவற்றை பொறுப்பேற்று அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வருமிடத்து இதனை மத்திய வங்கி வரவேற்கும். உண்மையில், இதனைப் பொறுத்தவரையில் யூனியன் வங்கி ஒரு காலத்தில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கிய நிதிக் கம்பனியான எவ் அன்ட் ஜி நிதிக் கம்பனியினை பொறுப்பேற்றுக் கொண்டது. தற்பொழுது சில நிதியியல் கம்பனிகளை பொறுப்பேற்பதற்கு தனியார் துறையிலும் அரச துறைகளிலுமுள்ள வலுவானதும் பெரியதுமான நிதி நிறுவனங்களுக்கு சில புதிய வாய்ப்புக்கள் தோன்றியிருப்பதுடன் இப்பின்னணியில் இவ்வலுவான நிறுவனங்கள் தற்பொழுது முன்வந்து இனிவரும் காலத்தில் சில கையேற்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது.

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 7: வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தில் அலுவலர் பற்றாக்குறையாகக் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையான கம்பனிகளை கண்காணிக்க/ ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அவர்களுக்குப் போதுமானளவு சாதனங்கள் வழங்கப்படவில்லை அல்லது போதுமானளவு அலுவலர்களை கொண்டிருக்கவில்லை.**

**உண்மைநிலை**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையிலுள்ள நிறுவனங்களின் அளவு பரந்தளவிற்கு வேறுபடுவதுடன் அத்தகைய நிறுவனங்களைக் கண்காணிக்கின்ற மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துகின்ற வகையும் அளவும் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடும் என்பதனை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். உண்மையில், மிகச் சிறந்த முறையில் முகாமைப்படுத்தப்பட்டு மிகக் குறைந்த ஒரு சில மேற்பார்வைக் கரிசனையைக் கொண்டிருக்கின்ற கம்பனியொன்று மிகக் கூடியளவு மேற்பார்வைக் கரிசனைகளைக் கொண்ட கம்பனியினைவிட வேறுபட்ட வகையிலான மேற்பார்வைக்கு உட்படக்கூடும்.

மத்திய வங்கியின் மேற்பார்வையானது, பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து செல்கின்ற விதத்தில் தொழில்சார் நிபுணத்துவ அடிப்படையில், இத்துறையில் பயிற்சியளிக்கப்பட்ட, தேவையான அறிவினைக் கொண்டுள்ள நிபுணத்துவமும் விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் கொண்ட உயர் தகைமை வாய்ந்த ஆட்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. மத்திய வங்கியும் கூட தற்பொழுது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள கம்பனிகளை கண்காணிக்கவும் ஒழுங்குபடுத்தவும் போதுமான மூலவளங்களைக் கொண்டிருப்பதுடன், சிறந்த ஆரோக்கியத்துடனும் நன்கு செயற்படுகின்றதுமான பெரும் எண்ணிக்கையான கம்பனிகள் மேற்பார்வை போதுமானளவில் உள்ளமையையும் தேவையான தரத்தில் காணப்படுவதனையும் உறுதிப்படுத்துவனவாகவுள்ளன.

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 8: இலங்கை அளவுக்கதிகமான நிதிக் கம்பனிகளைக் கொண்டிருக்கிறது**

**உண்மைநிலை**

இலங்கையின் பொருளாதாரம் வளர்ந்து வரும் பொருளாதாரமாகவும் இயக்கவாற்றல் வாய்ந்ததொன்றாகவும் காணப்படுகின்றது. அதேநேரம் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் நாட்டின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரே நாளில் உடனடியாக ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய நிறுவனங்களுமல்ல. குறிப்பாக நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானளவிற்கு நிதியியல் உட்படுத்தல்களை வழங்கும் பொருட்டு மத்திய வங்கி எதிர்காலத்திற்காகவும் நாட்டிற்குத் தேவையான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை உறுதிப்படுத்துவதற்காகவும் திட்டமிடவிருக்கிறது. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கியமான பங்கொன்றினை ஆற்றுவதுடன் மக்களினதும் நாட்டினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பும் கட்டுக்கோப்பும் கிடைக்கக்கூயதாக இருப்பதனை உறுதிப்படுத்துவது அதன் பொறுப்பும் கடமையாகும் என மத்திய வங்கி நம்புகிறது. அத்தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் தற்போதைய எண்ணிக்கையும் தொழிற்பாடுகளின் ஒன்றுசேர்ந்த அளவும் அடிப்படையில் போதுமானதாக இருந்ததெனினும் நாடு முழுவதும் அவை பரந்து அமைவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு இன்னமும் மிகக் கூடியளவு தொழில்சார் நிபுணத்துவமும் பரந்த அடிப்படையினையும் கொண்ட விதத்தில் தொழில் துறையினை ஆக்குவதற்கு இன்னமும் காலம் தேவைப்படுகிறது.

இத்தகையதொரு பின்னணியில், எதனை முக்கியமானதாக கருதவேண்டுமென்றால், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் எண்ணிக்கையையன்றி, அத்துறையினால் தற்பொழுதும் எதிர்காலத்திலும் ஆற்றப்பட வேண்டிய பணிகளையேயாகும். அடுத்த ஒரு சில ஆண்டுகளில் இலங்கை ஐ.அ.டொலர் 100 பில்லியன் பொருளாதாரத்தினை நோக்கி நகரும் வேளையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மிகக் கூடுதலான இன்றியமையாததொரு பங்கினை வகிக்கும். மிகப் பெருமளவான நிதியியல் உட்படுத்தல்களை ஊக்குவிக்க வேண்டியிருக்கின்ற வேளையில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள தொழில் முயற்சியாளர்கள் உரிய நேரத்திலும் வசதியான முறையிலும் நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்த வேண்டியிருக்கும். அத்தகைய இலக்கொன்றினை நிறைவேற்றுவதற்குப் பரந்தளவிலான நிதியினை அவையாகவே பெறக்கூடியதாகவும் வழங்கக்கூடியதாகவுமுள்ள வலுவான வங்கியல்லா நிதி நிறுவனங்கள் தேவைப்படும். எனவே, அத்தகைய கம்பனிகள் அத்தகைய நிதிகள் தேவைப்படும் துறைகளுக்குத் தேவையான நிதியினை வழங்கக்கூடியதாக இருக்கும். இத்துறைகள் கிராமிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள், வேளாண்மைத் துறை மற்றும் தனிப்பட்டவர்களை உள்ளடக்கியிருக்கும். உரிய நேரம் வரும் பொழுது, இத்தொழில் துறை மேலும் முதிர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன், அத்தகையதொரு பயணத்தில், பயன்மிக்கதொரு பங்கினை ஆற்றுகின்ற விதத்தில் கம்பனிகள் இணைக்கப்பட்டும் பாரிய வலுவினைக் கொண்டனவாகவும் கட்டியெழுப்பப்பட்டிருக்கும்.

அத்தகைய பின்னணியில், ஏற்கனவேயுள்ள கம்பனிகள் ஒரு சில இணைப்புக்களுடனோ அல்லது இணைப்புக்களின்றியோ அத்தகையதொரு பங்கினை ஆற்றமுடியும். இது உண்மையில் பொருத்தமானதாக அமையும். எனினும், நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதியியல் கட்டமைப்பினை வழங்குவதற்கு தற்போதுள்ள கம்பனிகளினால் முடியாமல் போகும் காரணத்தினால் எதிர்காலத்தில் இடைவெளி ஏதும் உருவாகுமானால் புதிய வங்கியல்லா நிதி நிறுவனங்களை 2015 இலிருந்து பதிவு செய்ய வேண்டிய தேவையேற்படும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், மத்திய வங்கி புதிய கம்பனிகளை மிகப் பெரிய மூலதனத் தளத்தினைக் கொண்டிருக்குமாறு கோரலாம் என்பதுடன் அத்தகைய புதிய கம்பனிகள் வலுவானதொரு நிறுவனங்களாகத் தொழிற்படத் தொடங்குவதுடன் வளர்ந்து வரும் பொருளாதாரத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியனவாகவிருக்கும்.

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 9: நிதிக் கம்பனிகளினால் எதிர்நோக்கப்படும் இடர்ப்பாடுகள், அக்கம்பனிகளை, மத்திய வங்கி பொருத்தமான விதத்தில் அல்லது காத்திரமான முறையில் ஒழுங்குமுறைப்படுத்துவதனை இயலாமல் செய்திருக்கின்றன. மேலும், நிதிக் கம்பனிகளின் சில பணிப்பாளர்கள் நிதியங்களை உறிஞ்சிக் கொள்கிறார்கள். ஆனால் மத்திய வங்கியினால் எதிர்நோக்கப்படும் இடர்ப்பாடுகளின் காரணமாக அவற்றை அதனால் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது.**

**உண்மைநிலை**

நாட்டிலுள்ள மிக நம்பகத்தன்மை வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு பணியாற்றும் வங்கிகளைக் போலன்றி பெரும்பாலான நிதிக் கம்பனிகள் உயர்மட்ட வாடிக்கையாளர்களிலும் பார்க்க இடர்நேர்வுகளை பெருமளவில் கொண்ட அடுத்தகட்ட வாடிக்கையாளர்களுடனேயே வியாபாரங்களை மேற்கொள்கின்றன. இத்தகையதொரு நிலையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் அதேபோன்று கடன் வழங்கல் ஆகிய இரண்டிற்குமான வட்டி மட்டங்கள் உயர்வாகக் காணப்படுகின்றன. இதற்கு, வங்கிகளின் இடர்நேர்வுகளிலும் பார்க்க இவற்றின் இடர்நேர்வுகள் உயர்வாக இருப்பதும் வங்கிகளின் வாடிக்கையாளர்களை விட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள் கடன்களை திருப்பச் செலுத்தத் தவறுவதற்கான சாத்தியங்கள் கூடுதலாக இருப்பதும் காரணங்களாக அமைகின்றன. அத்தகைய பொதுவான நிலைமைகள் காணப்படுகின்றமைக்கிடையிலும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் பல உயர் இடர்நேர்வுகளைக் கையாளும் விதத்தில் காத்திரமான வியாபார மாதிரிகளை உருவாக்கியுள்ள வேளையில், உயர்ந்த வருவாய்களின் மூலம் நன்மைகளையும் பெற்றுள்ளன. ஆகவே, அக்கம்பனிகள் தொடர்ந்தும் சிறந்த முறையில் செயலாற்றுவதுடன் தமது வைப்பாளர்களுக்கும் அதேபோன்று அவற்றின் வாடிக்கையாளர்களுக்கும் அலுவலர்கள் மற்றும் பங்குடமையாளர்களுக்கும் நல்ல வருமானத்தினையும் வழங்கியுள்ளன.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிலுள்ள பெரும் எண்ணிக்கையான வைப்பாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குடமையாளர்கள் இன்று திருப்திகரமான வருமானத்தினைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை நிச்சயமாக பாராட்டுதல் வேண்டுமென்பதுடன் அந்த உண்மையினை புறந்தள்ளிவிடவும் கூடாது. இருப்பினும், வங்கியல்லா நிதி நிறுவனமொன்று ஒரு சில இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் அத்தகைய சூழ்நிலையினைக் கையாள்வதற்காக மத்திய வங்கி சில சமயங்களில் பெருமளவான தொழில்சார் நிபுணத்துவ நேரங்களையும் மத்திய வங்கியின் அனைத்து மட்டங்களிலுமுள்ள வளங்களையும் செலவிட வேண்டியிருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில், மேற்பார்வையாளர்களினால் செலவிடப்பட்ட நிபுணத்துவ நேரமும் சக்தியும் உண்மையில் வங்கியல்லா நிதி நிறுவனத்தின் அளவிற்கு விகித சமமாக அமைந்திருப்பதில்லை என்பதுடன் இத்தகையதொரு சிக்கலான செயல்முறையின் போது மத்திய வங்கி எதிர்நோக்கும் முக்கியமான இடர்ப்பாடுகளில் ஒன்றாகவும் இது காணப்படுகின்றது.

அதேநேரம், மத்திய வங்கி பொதுவான அடிப்படையில் மேற்பார்வையினை மேற்கொள்வதுடன் ஒவ்வொரு நிதிக் கம்பனியினதும் ஒவ்வொரு சொத்துக்களினதும் பெறுமதியினையும் மதிப்பிடவும் முடிவதில்லை. இது கடன்பாடுகள், கடன் வழங்கல், சம்பளம் வழங்கல், பிணைகளைப் பெற்றுக் கொள்ளுதல், அறவிடல்களின் பொருட்டு வழக்குகளைத் தொடுத்தல், நிலையான சொத்துக்களின் கொள்வனவு, மூலதனங்களைத் திரட்டுதல் போன்ற முகாமைத்துவத் தீர்மானங்களிலும் தலையிடுவதில்லை. இவ்விடயங்களில் பணிப்பாளர்கள் அவர்களது சொந்த வியாபார மாதிரிகளுக்கிணங்க நடந்து கொள்ள வேண்டுமெனவும் அதேபோன்று சட்டங்களையும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த பணிப்புரைகளையும் அவர்களது சொந்த உள்ளக வழிகாட்டல்கள் மற்றும் கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

உணர்வுள்ள எவரும் மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் திணைக்களம் தனிப்பட்ட கம்பனிகளினது சொத்துக்களை பௌதீக ரீதியாக பரிசோதிப்பதோ அல்லது அவற்றின் பெறுமதியினைத் தீர்மானிப்பதோ முடியாத விடயம் என்பதனை ஏற்றுக்கொள்வர். உலகிலுள்ள எந்தவொரு மத்திய வங்கியும் அல்லது மேற்பார்வைச் சபையும் அவ்வாறு ஒருபோதும் செய்யமுடியாது என்பதுடன் கம்பனியின் கணக்காய்வாளர்கள் கூட நிறுவனங்களின் உள்ளகக் கட்டுப்பாடுகள் அதேபோன்று வியாபார நடைமுறைகள் மற்றும் மதிப்பீட்டுத் தீர்மானங்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் தீர்ப்பின் மீதே முக்கியமாக தங்கியிருக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே நேர்மையற்ற காசாளர் பணத்துடன் ஓடிவிடுவது அல்லது கவனமற்ற கணக்காளர் நிரம்பலருக்குக் கூடுதலாக பணத்தினைச் செலுத்திவிடுவது அல்லது சிரத்தையற்ற கொள்வனவு அலுவலர் அதிக விலையில் சொத்தொன்றினைக் கொள்வனவு செய்தல் போன்ற எல்லா நேரங்களிலும் மத்திய வங்கி அத்தகைய நடவடிக்கைகளை கண்டுபிடிக்க வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. கம்பனியின் பணிப்பாளர்கள் சதிவேலைகள், மோசடியான நடவடிக்கைகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அத்தகைய நிலைமைகளைக் கையாள்வதற்கு அவர்களது உள்ளக கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டியிருக்கும். மோசடிகள் அடிக்கடி கண்டுபிடிக்கப்படுகின்றன. அத்தகைய சம்பவங்களின் பின்னர், சில சமயங்களில் கண்டுபிடிக்கப்படுவதேயில்லை. அநேகமான சந்தர்ப்பங்களில் கம்பனி திரவத்தன்மைப் பிரச்சனைகளை எதிர்கொள்கின்ற வேளையிலும் சட்ட ரீதியான ஆரம்ப ஆய்வுகளை மேற்கொள்ளும் போதும் நிதியங்கள் உறிஞ்சப்பட்டிருக்கக்கூடும் என்ற பொதுவான சந்தேகங்கள் எழக்கூடும். எனவேதான் யார் பொறுப்பு என்பதனைக் கண்டுபிடிப்பதற்காகவும் இந்த விதத்தில் எவ்வளவு பணம் உறிஞ்சப்பட்டிருக்கிறது என்பதனை கண்டு கொள்வதற்காகவும் வழமையாக சட்ட ரீதியான கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 10: தவறிழைத்த நிதிக் கம்பனிகளையும் பணிப்பாளர்களையும் கட்டுப்படுத்துவதற்கு தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லை.**

**உண்மைநிலை**

தற்போதைய சட்டங்கள் தவறிழைத்தோருக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கான அதிகாரங்களை வழங்குவதுடன் எவ்வளவு பணம் உறிஞ்சப்பட்டதோ அப்பணத்தினை தவறிழைத்த பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்குத் தேவையான வழிமுறைகளை எடுப்பதற்கும் அதேபோன்று பொறுப்பான ஆட்களைக் கையாள்வதற்கு சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மத்திய வங்கி தீர்மானித்தது.

உண்மையில், நிதித் தொழில் சட்டம் தவறிழைத்த அல்லது நிதியினைத் தவறாகக் கையாண்ட நிதிக் கம்பனிகளின் அலுவலர்களுக்கு சிறைத்தண்டனைகளையும் தண்டத்தினையும் வழங்குவதற்கு பரிந்துரைக்கும் குறிப்பிட்ட தண்டனைக்குரிய குற்றங்கள் பற்றி குறித்துரைக்கின்றது. கடந்த 7 ஆண்டுகளில் ஒரு நிதிக் கம்பனியாவது உண்மையில் முறிவடையவில்லை. ஆனால் சில அழுத்தங்களுக்குட்பட்டிருந்ததுடன் சிறந்த ஆரோக்கியத்தினை மீண்டும் பேண வேண்டியிருந்தது. எனினும், அதிகரித்து வருகின்ற சான்றுகளின்படி தற்பொழுது குறிப்பிட்ட பணிப்பாளர்களும் மற்றையவர்களும் தவறிழைக்கின்றனர் என சந்தேகிக்கப்படுவதுடன் புலனாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறைத் தண்டனைக்குரிய குற்றங்களுக்கு அவர்கள் துணை போனமையினை சான்றுகள் எடுத்துக்காட்டுமாயின் சட்டம் அதன் வேலையைச் செய்யும் என்பதுடன் தேவையான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இதன் மூலம் சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்ட தண்டங்கள் குற்றவாளியாகக் காணப்பட்டவர்களிடமிருந்து அறவிடப்படும்.

**குற்றச்சாட்டு/ கோரிக்கை 11: வங்கியல்லா நிதி நிறுவனங்கள் துறைக்கான குறுங்கால மதிப்பீடுகள் மிகவும் தெளிவற்றவையாக இருக்கின்றன.**

**உண்மைநிலை**

வங்கியல்லா நிதி நிறுவனங்கள் துறை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கினையாற்றுவதுடன் எதிர்காலத்திலும் அவை தொடர்ந்தும் அவ்வாறே விளங்கும் என்பதனை அனைத்துக் குறியீடுகளும் எடுத்துக்காட்டுவனவாகவுள்ளன. நாடு வலுவான வளர்ச்சியைக் கொண்டிருப்பதுடன் வளர்ச்சியடைந்து வரும் இப்பொருளாதார சூழலில் மேலும் மேலும் வாய்ப்புக்கள் அபிவிருத்தியடைந்து வருகின்றன. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையானது நாட்டின் குறுங்கால, மத்திய மற்றும் நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கினை தொடர்ந்தும் ஆற்றியதுடன் இத்துறை தொடர்ந்தும் உறுதியாகக் காணப்படுகின்ற அதேவேளையில், வைப்பாளர்களுக்கு பங்குடமையாளர்களுக்கும் அதன் வருமானத்தினை பகிர்ந்தளித்தன் மூலம் திருப்திகரமான முறையில் செயலாற்றிய வேளையில் அவர்களின் பணியின் காரணமாக ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களும் இத்துறையில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்களும் நன்மையடைந்தனர்.

அதேநேரம், குறிப்பிட்ட அரசியல் மூலங்கள் அனைத்து நிதிக் கம்பனிகள் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு பயமூட்டுவதற்காக சென்றல் இன்வெஸ்ட்மன்ட் பினான்ஸ் லிமிடெட்டினைப் பயன்படுத்த முயற்சிக்கின்றன என்பது தெளிவாகும். கடந்த காலத்திலும் கூட, ஒரு சில அரசியல்வாதிகள் இதேபோன்ற முயற்சிகளை குறிப்பாக கோல்டன் கீ நெருக்கடியினை உடனடுத்து மேற்கொண்டதுடன் சில அரசியல் நோக்கங்களைக் கொண்ட பொருளாதாரத்தை பின்தள்ளுபவர்கள் பயங்கரமான ஊக சூழலொன்றினை ஏற்படுத்துவதன் மூலம் உறுதியற்ற தன்மையொன்றை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். அவர்களில் சிலர் பெரும் எண்ணிக்கையான நிதிக் கம்பனிகள் அதிகளவில் முறிவடைந்து போகும் என்று கூட எச்சரித்தார்கள். இன்னும் சிலர் அதற்கும் மேலே சென்று, முழுப் பொருளாதாரமும் முறிவடைந்து போகுமென்று தீர்க்கதரிசனம் சொன்னவர்களும் உண்டு. எல்லோருக்கும் தெரிந்தவாறு அத்தகைய தீர்ப்பு நாட்கள் ஒரு போதும் நேரிடாமையினால் அத்தகைய பொருளாதாரத்தை பின்தள்ளும் மனிதர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்திருக்கின்றனர். இருப்பினும் கூட, இம்மூலங்கள் தொடர்ந்தும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் அதிர்ஷ்டவசமாக பொதுமக்களுக்கு இத்தகைய நடவடிக்கைகள் பழகிப்போய்விட்டதுடன் இப்பொருளியலாளர்களின் நடவடிக்கை பற்றி விழிப்படைந்திருக்கின்றனர். இப்பின்னணியில், நிதியியல் துறையில் பொதுமக்களின் நம்பிக்கை மிகப் பலமாக இருப்பதனை மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளதுடன் குறிப்பாக வங்கியல்லா நிதி நிறுவனங்கள் அவற்றின் சொந்தப் பலத்தையும் உறுதிப்பாட்டினையும் உறுதிப்படுத்தும் பொருட்டு, பொதுமக்களுக்கு அவர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் அவர்களது பலத்தினைக்காட்ட பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

## இலங்கை மத்திய வங்கி

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 2477500, 2477504 தொலைநகல்: 2477738 மின்னஞ்சல் : secdsnbfi@cbsl.lk

(C/12709)(10,6,3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28.08.1940

மறைவு
20.09.2012

## அமரர் வேலும்மயிலும் கதிரவேலு

இணுவில் (கனடா)

வாழ்வு நிலையில்லை உலகில்
வாழ்ந்த உங்கள் நினைவுகளுக்கு அழிவில்லை
காந்தம்போல் சகலரையும் ஈர்த்தீர்கள்
நீங்கள் வருவீர்கள் என விழிகளில் நீரோடு
காத்திருக்கின்றோம்........

**பிள்ளைகள்:**
கணேசமூர்த்தி – (கனடா),
பகீரதன் – (ஜேர்மனி),
பகீரதி – (கனடா),
முரளிதரன் – (கனடா),
விஜிதரன் – (கனடா),
விஜிதா – (கனடா),
கலைச்செல்வி – (கனடா),
இராசதுரை இரத்தினகாசன்

**மருமக்கள்:**
நிசானி – (கனடா),
அலெக்சான்ரா – (ஜேர்மனி),
விஜயநாதன் – (கனடா),
பாலசரஸ்வதி – (கனடா),
கிருபாலினி – (கனடா),
பாலபாஸ்கரன் – (கனடா),
பாலகிருஸ்ணன் – (கனடா),

**பேரப்பிள்ளைகள்:**
பிரசாத், பிறிமியா, றசாத்,
டானியல், அனிக்கா, லூக்காஸ்,
சாறா, ரபியா,
அனிக்கா (MB.B.S) , அஜன்,
கோகுல், றாகுல்,
அனோஜ், வினோஜ், அனுஸ்கா,
கஸ்மியா, அர்ஜீன், அறேன், ஏடன்.

பருத்தித்துறை, தும்பளை.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் நுட்பப் பாட இருநாள் கருத்தரங்கு



தென்மராட்சி, ஒக்.9
சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர் தர வகுப்புகளில் தொழில் நுட்பப் பாடத்தைக் கற்கும் மாண வர்களுக்கான இரு நாள் பயிற்சிக் கருத் தரங்கு நேற்று ஆரம் பிக்கப்பட்டது.

வேள்ட் விஷன் நிறு வன அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலய தொழில் வழி காட்டல் பிரிவினரால் இக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப் பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமை யில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் இவ்வருடம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் நுட்பப் பாடநெறி கற்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 104 மாணவர்கள் பங்குபற்றினர். (ந-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் இராசையா சிவகுமார்
அவர்களின் பாசமிகு தந்தையார்
**சுப்பிரமணியம் இராசையா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிசங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம். (C/12668) (3.6.4)

வலயக்கல்விப்பணிப்பாளரும்,
நலன்புரிசங்க அலுவலர்களும்.

## 5 ஆம் ஆண்டின் நினைவலைகள்

மலராய்
14.04.1976

சருகாய்
03.10.2008

அமரர் சரவணையூர்
**சபாரத்தினம் சசிகுமார்(B.com)**
(திதி:பஞ்சமி 9.10.2013)



ஆற முடியாத ஆழ வடுக்களாய்
ஆண்டைந்து சென்றதுவே
மாறாத நினைவுகளால் மனம்
வெந்து மாய்கின்றோம்
வேரோடு உனையழித்த அரக்கன்
வீழ்ந்து மண்ணாகிப் போக
நேராத தெய்வமில்லை-நீ மீள
எழுந்துவா புதிய சம்ஹாரம் செய்ய

அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(32472)(3.6.4)

இந்நாளில் உன் ஆன்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

# சித்திரப் போட்டியில் இரண்டாம் இடம்



யாழ்ப்பாணம், ஒக்.9
யாழ்.ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை மாணவர்கள் இருவர் புலமைப் பரிசில் பரீட் சையில் சித்தி பெற் றுள்ளனர். எஸ்.சசி குமார்- 166 புள்ளி களையும், ஆ.அஸ் வினி-165 புள்ளிகளை யும் பெற்றுள்ளனர்.
இந்த இருவரில் ஆ.அஸ்வினி மாகாண மட்ட ஆரம்பப் பிரிவுச் சித்திரப் போட்டியில் இரண் டாம் இடத்தைப் பெற்றிருந் தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஓ)

# நிறுவுநர் தினம்

யாழ்ப்பாணம். ஒக்.9
நவாலி மகாவித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் இரா.வசந்த குமார் தலை மையில் இடம்பெறும்.
நிறுவுநர் நினைவு பேரு ரையை வடபிராந்திய வர்த்தன வங்கி முகாமையாளர் ச.இரவீந் திராவும், சிறப்பு ரையை சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜாவும் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும் வழங்குவர்.
பிரதம அதிதியாக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்வார். (ஓ-50)

# பொதுக் கூட்டம்

தென்மராட்சி, ஒக். 9
தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை .9.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத் தில் இடம்பெறும்.
சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமை யில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந் தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாத னும், சிறப்பு விருந்தினராக ஐக்கிய நாடுகள் அபி விருத்தி நிகழ்ச்சித் திட்ட (UNDP ) பிராந்திய திட்ட இணைப்பாளர் செ.ஞானகணேசனும் கலந்து கொள்வர். (ந-9)

# பெயர்களை பதிவு செய்க

முல்லைத்தீவு. ஒக்.9
ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்துக் குட்பட்ட சகல கமக்கார அமைப்புக்களையும் சேர்ந்த விவசாயிகள் தமது பெயர்களை உடன டியாகப் பதிவு செய்யுமாறு கமநல சேவை பெரும் பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.
காலபோக நெற்செய்கையில் ஈடுபடுவோருக் கான மானிய உரத்தை தடையின்றி வழங்கும் பொருட்டு. காணி உரிமையற்ற மற்றும் குத் தகைச் செய்கையாளர்கள் தமது பெயர் விவரங்களை கமக்கார அமைப்புக்களிடம் பதிவு செய்து கொள்ள வேண்டுமென கம நல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் ரி. அமிர்தலிங்கம் கேட்டுள்ளார். (க-500)

## கண்ணீர் அஞ்சலி

எமது கணித ஆசிரியர் பொ.அதீசன்
அவர்களின் பாசமிகு தந்தை
**அரியக்குட்டி பொன்னம்பலம்**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி
(A/L - 2012- ஆங்கில மொழிமூல மாணவர்கள்) (32476)(45.3.6)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் இராசையா

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)



காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப் பிடமாகவும் குப்பிளானை சொந்த வசிப் பிடமாகவும் உடுவில் தெற்கு, மானிப்பாயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சு.இராசையா நேற்று (08.10.2013) செவ் வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் முத்துப்பிள்ளை தம்பதிய ரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான வைத்திலிங்கம் செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராசம்மா வின் அன்புக் கணவரும், வதனி, சிவகுமார்(வலயக்கல்வி அலுவலகம்,யாழ்ப்பாணம்) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், முருகதாசன்,மதிரஜனி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற வர்களான நல்லையா, நாகராஜா ஆகியோரின் சகோதரனும், சிவானுஜன்,சிவானுஜா, வினுஸன், வினுசியா, சினேகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.10.2013) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய். (32477)(5.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே.:077 844 7928

### திருமதி மனோன்மணி வன்னியசிங்கம்



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட லாலா சோப் உரிமையாளரின் மனைவி மனோன்மணி வண்ணியசிங்கம் 07.10.2013 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.
அன்னாரின் இறுதிக்கிரி யைகள் நாளை (10.10.2013) வியாழக் கிழமை மு.ப 10.30 மணிக்கு அவரது இல்லத் தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
லாலா சோப் உரிமையாளர்
பொ. வன்னியசிங்கம் குடும்பத்தினர்
பிள்ளைகள்: விஜயபாலா-குமாரினி
விஜயராஜ்-லசோதா, விஜயதர்சினி-சுபதாஸ், விஜயபாரதி
பெறாமக்கள்:
சகிதரன்-மனோஜா, ஈஸ்வரன்-கஜேந்தினி, கஜேத்திரன்
(32474) (3.6.4) T.P:077 188 0017

### Dr.V.சற்குணநாயகம்

(ஓய்வுபெற்ற மனநோய் வைத்திய நிபுணர், அங்கொடை)



இளவாலை வடக்கைப் பிறப்பிடமாக வும், புன்னாலைக்கட்டுவனைப் புகுந்த இடமாகவும், லண்டனை வதிவிடமா கவும் கொண்ட Dr.v.சற்குணநாயகம் (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை லண் டனில் காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன் (முன்னாள் கணித ஆசிரியர், புனித கென்றீஸ் கல்லூரி, இளவாலை) - செல்வநாயகி தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் (முன்னாள் தபால் அதிபர்) -விசாலாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜலக்ஷ் மியின் அன்புக் கணவரும், Dr. குகனின் பாசமிகு தந்தையும், Dr. கிறிஸ்ரீனின் அன்பு மாமனும், பியோவின் அருமைப் பேரனும், மகேஸ்வரி, ஞானேஸ்வரி, பரமேஸ்வரி, பத்மாதேவி, நாகேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (13.10.2013) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்
Dr.S.குகன் (Kuhan)
10, Kerdor Avenue, EPSOM, U.K. Post code KT 198 RH.
T.P. 0044 137 281 3265 (32483)(3.6.45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் பசுபதி நகுலேஸ்வரன்

மலர்வு - 27.08.1963 உதிர்வு - 20.09.2012

திதி: பூர்வபக்க பஞ்சமி



ஆண்டு ஒன்று ஆனதப்பா – ஆனாலும்
ஆறவில்லை நம் துயரம்
ஆயிரம் உறவுகள் உடனிருந்தும்
அவர்களெல்லாம் உங்கள் அன்புக்கு ஈடாகுமா?
கல்வி தந்து உங்கள் செல்வமெல்லாம் தந்து
வல்லவராய் நல்லவராய் நமை வாழ வைத்த
அன்புத் தெய்வமே உங்கள் நினைவுகள்
இன்றல்ல என்றென்றும்
பசுமையாய் நிழலாடுமப்பா......

தேவாலய வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (32473(5.6.3.)

பார்க்கும் பொருளெல்லாம் உங்கள் முகம் கண்டு வாடிநிற்கும்
மனைவி, பிள்ளைகள்/குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

05.10.2013 அன்று மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் சிறந்த ஆசிரியருக்கான பிரதீபா பிரபா விருதைப் பெற்ற காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி ஆசிரியை

**செல்வி.சுமந்திராதேவி இராஜசிங்கம்**

அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர். கல்லூரி சமூகம்.


### SALE - PULSAR 180

DOCTOR USED - ONE OWNERED NP VR XXXX MILEAGE - 50KM/ LITRE 29000Km ஓடியது. Price 245000 (Negotiable) Colour: Black Contact:0775456126

### தாதியர் தேவை

தாயகம் மருத்துவ சிகிச்சை நிலையம்

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலில் புதிதாக திறக்கப்படவுள்ள மருத்துவ சிகிச்சை நிலையத்துக்கு அனுபவம் வாய்ந்த 25முதல் 35வயதுக்கு இடைப்பட்ட பெண் தாதியர்கள் தேவைப்படுகின்றனர்.

நேர்முகப்பரீட்சைக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:-
077 6631 021 /077 2316608
DR. பாலன்/பா. நிரஞ்சன்

### விற்பனைக்கு

* 10KV லேடன் ஜெனரேட்டர் இந்திய ன், சைனா டைனமோ கப்புள் செய்தது . விலை (120, 000/=)
* ஐஸ்கிறீம் பாத் கொம்ரேசர் இங்லண்ட் பழையமொடல்., விலை (160, 000/=)
* டீப்பிரீசர் 5அடி. விலை (35, 000/=)

தொடர்புகளுக்கு:- 077 1573997, 0235689137

### வேலையாள் தேவை

பாம் வேலைக்கு ஆள்கள் உடன் தேவை.
தொடர்பு- 021 7912997

(32492)(14.17)


## வலி. கிழக்குப் பகுதியில் டெங்கு ஒழிப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 09

வலி. கிழக்குப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு இந்தப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் இந்த டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் புத்தூர் பிரதேசத்திலும் நேற்று செவ்வாய்க்கிழமை அச்சுவேலி பிரதேசத்திலும் இந்த டெங்குநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ந்து இன்று புதன்கிழமை ஆவரங்கால் பிரதேசத்திலும் நாளை வியாழக்கிழமை சிறுப்பிட்டி, புத்தூர், அச்செழு பிரதேசங்களிலும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஊரெழு, நீர்வேலி, கரந்தன் பிரதேசங்களிலும் 12 ஆம் திகதி சனிக் கிழமை கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, கட்டைப்பிராய் பிரதேசங்களிலும், 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய், யோகபுரம், ஸெல்வபுரம் ஆகிய இடங்களிலும் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த ஒரு வார காலம் இடம்பெறும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் பொது இடங்கள், ஆலயங்கள் வீட்டுச் சுற்றாடல்கள், தொழில் நிறுவனங்கள் போன்ற இடங்களில் டெங்கு ஒழிப்பு முன்னெடுக்கப்படும். (த-17)

## கர்ப்பிணிகளுக்கு திரிபோஷா பிஸ்கற்றுகள்

கர்ப்பிணித் தாய்மாருக்கு அடுத்த ஆண்டு திரிபோஷா பிஸ்கற்றுக்களை விநியோகிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறு குழந்தைகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் திரிபோஷா மாப் பைக்கற்றுக்களுக்கு மேலதிகமாக திரிபோஷா வால் தயாரிக்கப்பட்ட பிஸ்கற் பைக்கற்றுக்களும் வழங்கப்படவுள்ளன என்று திரிபோஷா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய பிஸ்கற் தயாரிப்புக்கு 15 கோடி ரூபா செலவில் புதிய இயந்திர சாதனத்தை நிறுவுவதற்குதிரிபோஷா நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது.

இந்தத் திரிபோஷா நிறுவனம் சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச -22)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது

**செல்வப் புதல்வன் மு.கவிசாந்**

அவர்களையும் இவரின் கற்றலுக்கு அயராது உழைத்த ஆசிரியை

**திருமதி யசோதினி சுதாஸ்கரன்**

அவர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.



Conguralation

அம்மா–சோசினி,
அப்பா–முத்துக்குமார்,
சகோதரர்கள்,
தாத்தா–குணரட்ணம்(வற்றாப்பளை),
பாட்டி குடும்பம், அப்பம்மா,
தாசன் மாமா(பிரான்ஸ்),
செல்லமாமா குடும்பம்,
தனம் அத்தை குடும்பம்,
செல்வி அத்தை குடும்பம், சித்தப்பா.

(37553)(5.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

நல்லூர் நாதஸ்வர வித்துவான் S. பாலமுருகனின் மகள்

**பாலமுருகன் தரங்கினி**

2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். அவர் கல்வியில் மேலும் பல சித்திகளைப் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
நாதஸ்வர வித்துவான் V.K.கானமூர்த்தி குடும்பத்தினர்
பெரியப்பா M. ராம்குமார் குடும்பத்தினர்
கோண்டாவில்.

(அ/12673)(10.14)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



**சின்னத்தம்பி சுப்பிரமணியேஸ்வரன்**
அதிபர்,மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.



**சதாசிவம் தயாபரன்**
ஆசிரியர்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

தேசிய கல்வி நிறுவனத்தில் இலங்கை ஜனநாயக சோசலிச் குடியரசின் பிரதம மந்திரி கௌரவ டி.எம்.ஜெயரத்தின தலைமையில் நடைபெற்ற பிரதீபா பிரபா விருது வழங்கல் நிகழ்வில் எமது கல்லூரி அதிபர் திரு.சி.சுப்பிரமணியேஸ்வரன் சிறந்த அதிபர்களுக்கான பிரதீபா பிரபா விருது பெற்றதையிட்டும் நல் ஆசிரியர் விருதினைப் பெற்ற தயாபரன் பொருளியல் ஆசிரியர் அவர்களையும் எமது பாடசாலைச் சமூகம் ...

Congratulations Congratulations

பாடசாலைச் சமூகம், மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



05.10.2013 அன்று தேசிய கல்வி நிறுவனத்தில் பிரதமர் கௌரவ டி.எம். ஜயரத்ன அவர்களால் "பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட யா/செம்பியன் பற்று அ.த.க. பாடசாலை ஆசிரியர்

**க. சிவகுமார்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இலகடி, அல்வாய்.

வாழ்த்துவோர்:
மாமா, மாமி, மைத்துனர், மைத்துனிமார்.

(29559)(10.14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2013 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த யாழ். கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மாணவி

**செல்வி டனுசிகா தவசீலன்**

மேலும் பல புலமைப்பரிசில்கள் பெற்று கல்வியில் சிறக்க வாழ்த்துவதோடு அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

கைதடிமேற்கு.

வாழ்த்துவோர்:
குணரத்தினம் குடும்பத்தினர்.

(C/12674)(10.14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வவுனியா இந்துக்கல்லூரியைச் சேர்ந்த

**செல்வி சஞ்சிகா நாகேந்திரம்**

2013ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் 5ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இவரை கல்வியில் சிறப்புறப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, பாஸ்கரன் குடும்பத்தினர், வளர்மதி குடும்பத்தினர், திவி மாமாமார்.

(32559)(10.14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்/மட்டுவில் கமலாசனி வித்தி. சாவகச்சேரி ஆசிரியை

**செல்வி பொன்னையா யோகேஸ்வரி**

அவர்கள் மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் இலங்கை பிரதமர் கௌரவ டி.எம். ஜயரத்ன அவர்களால் "பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு நாம் பெரும் மகிழ்வடைவதுடன் மேன்மேலும் பட்டங்களும் விருதுகளும் கிடைக்க மனதார வாழ்த்துகின்றோம்.

நாவலம்பதி, அச்சுவேலி.

வாழ்த்துவோர்:
இரத்தினமணி (சித்தப்பா), ரவி, ரெஜி, மனோ, பார்த்திபன், குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulation

யா/ நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க.த.க பாடசாலை மாணவன்

**செல்வன் மகிந்தன் லஜுஜன்**

2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றமையையிட்டு பாராட்டுவதுடன் அதிபர், ஆசிரியர்களையும் மற்றும் ஆசிரியர் றஜினகுமார் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பப்பா, அம்மம்மா
நவாலி தெற்கு.

(32489)(5.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**மனோகரன் சிந்துஜன்**

எமது வணிக உரிமையாளர் மனோகரன் (ரகு) அவர்களின் மகனும் பருத்தித்துறை யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை மாணவனுமாகிய **சிந்துஜன்** அவர்கள் 2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் 2ஆவது நிலையைப் பெற்றார். அவரை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் கல்வியைத் தொடர்ந்து பல்கலைக்கழகம் செல்ல எல்லாம் வல்ல முருகனை வேண்டி நிற்கின்றோம்.

Congratulation

வெற்றியுடையவன் பணியாளர்கள்
நாச்சிக்குடா, முழுங்காவில்.

(அ/12667)(5.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலையில் உலக உளநல நாள் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஒக்.09

மெய்யியல் - உளவியல் துறையினால் உலக உளநல நாள் நிகழ்வும் "உளவியல்" புத்தக வெளியீடும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் நடைபெறும் என்று யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## யாழ்.போதனா பற்சிகிச்சைப் பிரிவு நேற்று இயங்கவில்லை

யாழ். போதனா வைத்திய சாலையில் பற்சிகிச்சைப் பிரிவினர் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பற் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையின் போது பணியில் இருக்க வேண்டிய ஊழியர் ஒருவர் நேற்று சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டதாகவும் அவருக்கு பதிலாக வேறொருவரை பற் சிகிச்சைப் பிரிவுக்கு நியமிக்கவில்லை எனவும் தெரிவித்தே வைத்தியர்கள், தாதியர்கள் அனைவரும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் நேற்று பற்சிகிச்சைக்கு வந்த நோயாளர்கள் பாதிக்கப்பட்டனர். இது தொடர்பில் நிர்வாகத்துக்கு அறிவித்தும் ஊழி யர் நியமிக்கப்படவில்லை. சம்பவம் தொடர்பில் வைத்திய சாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவுடன் தொடர்புகொண்டபோது, ஊழியர்கள் சிலர் விடுமுறை யில் சென்றதனால் உடனடியாக பதில் ஊழியரை நியமிக்க முடியவில்லை. அத்துடன் ஊழியர் பற்றாக்குறையும் நிலவுகிறது - என்றார். (ஐ-4)

## பொலிஸ் பேச்சாளராக மீண்டும் அஜித்

கொழும்பு, ஒக்.09

பொலிஸ் பேச்சாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான அஜித் ரோஹண மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோனால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 11ஆம் திகதி இவர் பொலிஸ் பேச்சாள ராக கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார். தற்போது அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றும் அஜித் ரோஹண முன்னரும் பொலிஸ் பேச்சாளராக சுமார் ஒரு வருடம் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மீனவர்

செல்வாபுரத்தில் இந்திய அரசின் நிதியுதவிடன் இரண்டாம் கட்டத் திட்டத்தில் அமைக்கப்பட்ட இரண்டு வீடுகளைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, துணைத் தூதுவர் வி.மகாலிங்கம், யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் க.ஸ்ரீமோகனன் யாழ். மாவட்ட பிரதி மாவட்ட செயலர் சாம்பசிவம் சுதர்சன், வலி.வடக்குப் பிரதேச சபை தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய அரசினால் வழங்கப்பட்ட 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பயனாளிகளின் பணமும் முதலிடப்பட்டே வீடுகள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியை, யாழ். பழைய பூங்காவிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இறுதியில் ரில்கோ விடுதியில் சந்திப்புக்களை நடத்தினார்.

இதில் இரண்டாம் கட்ட இந்திய வீட்டுத் திட்டத்தை நிறைவு செய்த பயனாளிகளுக்கு குர்ஷித் சான்றிதழ்களை வழங்கினார்.

அத்துடன் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் போரினால் தொழில்வாய்ப்பை இழந்த 10 பேருக்கு சிறுகைத்தொழில் முயற்சிக்கான உபகரணங்களையும் அவர் வழங்கினார்.

இதன் பின்பு வடக்கு மாகாண முதலமைச்சரை சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை. சேனாதிராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பிலேயே அதிகம் கலந்துரையாடப்பட்டதாக வடமாகாண முதலமைச்சர் தெரிவித்தார். (த-5)

## தெரிவுக்குழுவுக்கு

இந்தச் சந்திப்பின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் கருத்துத் தெரிவிக்கும்போது,

"பல தசாப்தங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் வட மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றதை இந்திய அரசின் சார்பில் நான் பாராட்டுகின்றேன். இந்தத் தேர்தல் தமிழ்ச் சமூகத்திற்கான ஒரு முக்கியமான கட்டமாகும். நான் இதனை ஒரு முக்கியமான வரலாற்று நிகழ்வாகப் பார்க்கின்றேன்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி யீட்டி வடக்கு மாகாணசபையை தனது ஆளுகைக்குள் கீழ் கொண்டு வந்துள்ளது.

வடக்கு மாகாண சபை முதலமைச்சர் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்ததன் ஊடாக கூட்டமைப்பின் நல்லிணக்க சமிக்ஞை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இந்த மாகாணசபை அபிவிருத்தி காண இலங்கை அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும். இந்திய அரசும் தன்னாலான பங்களிப்பை வழங்கும்.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்னுடன் நேற்று (நேற்றுமுன்தினம்) நடத்திய சந்திப்பின்போது தெரிவித்துள்ளனர். எனவே, வடக்கு, கிழக்கு மக்கள் கெடுபிடிகள் எதுவுமின்றி நிம்மதியாக வாழும் சூழ்நிலை ஏற்படவேண்டும்.

இதேவேளை, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு முழுமையாக அமுல் படுத்த வேண்டும். மாகாணசபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை இலங்கை அரசு வழங்க வேண்டும். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கோரி நிற்கின்றது.

இலங்கை அரசானது அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஊடாக இனப்பிரச்சினைக்கு வெகு விரைவில் தீர்வைக் காண வேண்டும். இந்திய அரசு இதில் உறுதியாக இருக்கின்றது" - என்று தெரிவித்தார் சல்மான் குர்ஷித்.

இதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதிலளிக்கும் போது, "நாடாளுமன்றம் ஊடாகவே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைக் கூட்டி மக்களின் தேவையைக் கருத்திற்கொண்ட தீர்வொன்றை பேச்சின் மூலம் பெற்றுக்கொள்வதே இந்தப் பிரச்சினைகளுக்கு சிறந்த வழியாகும்.

எனவே, அரசு நியமித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டாயம் பங்கேற்று எம்முடன் கலந்துரையாடி மக்கள் விரும்புகின்ற ஒரு தீர்வுக்கு வர வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இனியும் பங்கேற்க மறுக்குமானால் நாம் ஒன்றும் செய்ய முடியாது" - என்று தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த.

இந்தச் சந்திப்பின்போது இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான அபிவிருத்தி மூலோபாய நோக்கங்களின் அடிப்படையில் பல்வேறு பரஸ்பர நலன்கள் குறித்த விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இரண்டு நாடுகளையும் சேர்ந்த மீனவர்களுக்கிடையே எழும் பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி ராஜபக்ஷவும் குர்ஷித்தும் கலந்துரையாடினர்.

மீனவர்கள் தங்களது பிரச்சினை களுக்கான தீர்வுகளை தாங்களாகவே கண்டுகொள்ளும் வகையில் இரண்டு நாடுகளையும் சேர்ந்த மீனவர் சமூகங்களுக்கிடையில் ஒரு கலந்துரையாடலுக்கான வசதியைச் செய்து கொடுப்பது சிறந்த வழியாகும் என இந்தச் சந்திப் பின்போது உடன்பாடு காணப்பட்டது.

இலங்கை மற்றும் இந்திய வர்த்தகர்களுக்கிடையிலான தொடர்புகளை மேம்படுத்தவும் வர்த்தக சமூகங்களுக்கு மத்தியிலும் இத்தகையதோர் அணுகுமுறை இதன்போது முன் மொழியப்பட்டது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சிங்ஹாவும் இந்திய வெளிவிவகார அமைச்சு மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பாரம் பரியக் கைத்தொழில்கள் - சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வலு - சக்திவள அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, வெளி விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளி விவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம மற்றும் இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## ஐ.தே.கவின்

யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததா வது:

புதிதாக ஒரு சபை அமைக்கப்படவுள்ளது. இந்தச் சபையில் ஏழு அல்லது எட்டு வரையான உறுப்பினர்கள் அங்கம் வகிக்க முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிப் பாதையில் கொண்டு செல்லல் கட்சியின் பிணக்குகளைத் தீர்த்தல், மாகாண சபைத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடையச் செய்தல், கட்சியை மீண்டும் கட்டியெழுப்புதல் போன்ற காரணிகளை முன்வைத்தே இந்தப்புதிய பொறிமுறை முன்வைக்கப்படவுள்ளது. சபைக்கான பெயர்கள் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. இந்த அமைப்பின் செயற்பாடுகள் குறித்து பேச்சு இடம்-பெறவுள்ளது. கட்சியை விசுவாசிக்கின்ற அதே வேளை மக்களால் விசுவாசிக்கப்படுகின்ற ஒருவர் தலைமைத் துவத்தை ஏற்க முன் வந்தால் தான் தலை மைத்துவப் பதவியை கொடுக்கத் தயார் என ரணில் கூறியுள்ளார். வடக்கு மாகாகணத்தில் விக்னேஸ்வரனைத் தோற்கடிக்க அரசு பல வழிகளில் செயற்பட்டது. அனைத்தையும் தாண்டிவிக்னேஸ்வரன் வெற்றி பெற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவி ஏற்றுள்ளமை சுபமான விடயம்" என்றார் திஸ்ஸ அத்தநாயக்க. (த-10)

## மேர்வினின்

வில் மருதானை டி.ஆர் விஜயவர்த்தன மாவத்தையில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பயணித்த மொண்டேரோ ரக ஜீப் வாகனம் டி.ஆர். விஜயவர்தன மாவத்தையில் கைவி டப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட் டுள்ளது. இவ்வாகனத்தின் கண்ணாடிகள் கீழிறக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டதாக அறியமுடிகிறது.

இதனுள் இருந்த இரண்டு [illegible] றும் பாதணிகளும் மீட்கப்பட்டுள்ளன. அத்தோடு, வாகனத்தின் சாவி அருகிலிருந்த வீதியில் வீசப்பட்டிருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட செல்வந்த வர்த்தகரான திலக்கசிறி, வைபவங்களுக்குத் தேவையான பொருள்களை வழங்குவதனால் அவர் ஹட் திலக்க சிரி என்று அழைக்கப்படுகிறார் என தகவல்கள் கிடைத்துள்ளன.

திங்கட்கிழமை இரவு சுமார் பத்து முப்பது மணியளவில் வீட்டைவிட்டு வெளியேறியதாக அவரது மனைவி செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன, கடத்தப்பட்ட திலக்கசிறி மேர்வின் சில்வாவின் செயலாளர் என உறுதியாகக் கூறமுடியாது என்றும் தெரிவித்தார்.

## திடீரென

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரனை யாழ். ரில்கோ விடுதியில் நேற்று மாலை சந்தித்தார்.

இதன் போது இவர்களின் சந்திப்பு இடம்பெறவிருந்த அறையில் வடக்கு மாகாண சபையின் கொடியும் இந்தியத் தேசியக் கொடியும் வைக்கப்பட்டிருந்தன.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் இலங்கைத் தேசியக் கொடிதான் வைக்கப்பட வேண்டும் என்றும் இல்லை எனின் வடக்கு மாகாண சபை கொடியையும் இந்தியக் கொடியையும் அகற்றுமாறு தெரிவித்து அதனைச் சந்திப்பு நடைபெற்ற அறையில் இருந்து வெளியே எடுத்துச் சென்றனர். இறுதியில் எந்தவொரு கொடியும் வைக்கப்படாமலேயே சந்திப்பு நடத்தப்பட்டது. (த-5)

## விசுவமடு

தியும் எரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியேற்றத்தையடுத்து 2011 ஆம் ஆண்டு குறித்த நூலகம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டது.

ஆயினும் நூலகக் கட்டடத்தைப் புனரமைப்பதற்குத் தொடர்ந்தும் தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நூலக சிறுவர் பகுதிக்கென சிறுவர் பாதுகாப்பு நிதியம் அமைத்து வழங்கிய கட்டடம், அதனோடு இணைந்த இரு கட்டடங்கள் ஆகியவற்றில் ஒரு கட்டடத்தைத் தவிர ஏனைய கட்டடங்கள் இராணுவத்தின் பயன்பாட்டிலேயே உள்ளன.

இதனால் இந்த நூலகத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நூலகத் தேவைகளை நிறைவு செய்ய முடியாமல் இந்தப் பகுதி மாணவர்கள்,பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-6)

## மீண்டும்

வண்ணம் ரோந்தில் ஈடுபட்டு வந்த பாதுகாப்புப் படையினர் போர் நிறைவுற்றத்தை அடுத்து அவற்றுக்கு ஓய்வு கொடுத்திருந்தனர். சுமார் நான்கு வருட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் போர் நடவடிக்கைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியதையடுத்தும், ஆனைக்கோட்டையில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்கானதையடுத்தும் இராணுவத்தினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

சீருடையுடன் சைக்கிள்களில் துப்பாக்கி இன்றி நடமாடிய இராணுவத்தினர் தற்பொழுது தொலைத் தொடர்பு கருவிகளை முதுகில் சுமந்த வண்ணம் துப்பாக்கிகளுடன் சைக்கிளில் ரோந்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை,

கடமையிலிருந்த பொலிஸார் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து பொலிஸாரின் நடவடிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதுடன் புலனாய்வுத் துறையினரின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கும் நோக்குடன் கடமையில் ஈடுபட்டுள்ள மானிப்பாய் பொலிஸார் இரவு பகல் என்ற வித்தியாசமின்றி வீதியால் செல்லும் வாகனங்களைத் திடீரென வழிமறித்து சோதனை செய்வதுடன் சந்தேகத்துக்குரியவர்களைத் துருவித்துருவி விசாரணை செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் ஆனைக்கோட்டை சந்தியில் இரவு நேரம் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர், இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்களில் வந்த இனந்தெரியாதவர்களின் வாள் வெட்டுக்கு இலக்கானார்.

பொலிஸாரை அதிர வைத்துள்ள இந்தச் சம்பவம் குறித்து உஷார் அடைந்த மானிப்பாய் பொலிஸார் வீதியால் செல்லும் வாகனங்களை மூலை முடுக்குகளில் நிறுத்தி வழிமறித்து ஆவணங்களை சோதனை செய்வதுடன் சந்தேகத்துக்குரியவர்களைத் துருவிதுத்ருவி விசாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை பொலிஸார் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து பயங்கரவாத தடுப்பு பிரிவினர், விசேட புலனாய்வுப் பிரிவினர் தேசிய புலனாய்வுப் பிரிவினர் என சகல புலனாய்வுப் பிரிவினரும் களத்தில் இறங்கி கடமையில் ஈடுபட்டுள்ளனர். சாதாரண உடையில் திரியும் இவர்கள் பொது இடங்கள், தேநீர் கடைகள் போன்ற இடங்களில் நடமாடி வருகின்றனர். (த-115)

## தம்பதியரை

வனும் மனைவியும் கத வைத் திறக்காமல் கூக்குரலிட்டுள்ளனர். ஆயினும் எவரும் உதவிக்கு வராத நிலையில் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் கோடரி மற்றும் கொட்டன்களால் தாக்கிக் குடும்பப் பெண் அணிந்திருந்த மோதிரம் உட்பட தங்க நகைகளையும் மதில் அமைப்பதற்கு வங்கியில் பெறப்பட்ட பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

## வடக்கைக்

டுத் திட்டப் பணிகள் எதிர்வரும் டிசெம்பருக்குள் நிறைவடையும்.

இராமேஸ்வரம் - மன்னார் படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டே தலைமன்னார் இறங்குதுறையைப் புனரமைக்கின்றோம்.

நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற ரயில் பாதை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் நிறைவு பெற்றுவிடும். காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தக நோக்கிற்காகவும் பலாலி விமான நிலையத்தை முற்று முழுதான சிவில் விமான நிலையமாகவும் பயன்படுத்தவே புனரமைக்கிறோம்.

இவற்றைப் பயன்படுத்தி உங்கள் கஷ்டங்கள் எல்லாம் நீங்கி வர்த்தக ரீதியிலும் சுற்றலாத் துறை ரீதியிலும் வளர்ச்சியடைய வேண்டும் - என்றார். (ஐ-5)


## மரண அறிவித்தல்

### ஜோதிட கலாநிதி பிரம்மஸ்ரீ இராமசத்தியமூர்த்தி குருக்கள்

**இணுவில் கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொத்தகலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோதிட கலாநிதி பிரம்மஸ்ரீ இராமசத்தியமூர்த்தி குருக்கள் நேற்று (08.10.2013) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தகலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

விஸ்ணுபுர ஜோதிட ஆலயம்,
கொத்தகலை.

*தகவல்:*
*பிள்ளைகள்*
*0773040394*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத் தடகளப் போட்டியில் பதக்கம் வென்ற அருணோதய வீரர்கள்




யாழ்ப்பாணம் ஒக்.9
கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டத் தடகளப் போட்டியில் பதக்கங்கள் பெற்ற அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீர வீராங்கனைகளின் விவரம் வருமாறு:

17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் எஸ். ஜெஜீபன் 3.60 மீற்றர் தூரத்தைத் தாண்டி 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இதே பிரிவில் பீ.விதுசன் 3.30 மீற்றர் தூரத்தைத் தாண்டி வர்ண விருதை பெற்றார்.

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் எஸ்.ஜென்ஷிகா 2.50 மீற்றர் தூரத்தைத் தாண்டி வர்ணவிருதை பெற்றார்.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் எம். டிலக்சனா 2.50 மீற்றர் தூரத்தைத் தாண்டி 3ஆவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.

19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில்
எம். சாள்ஸ் அன்ரனி 4.05 மீற்றர் தூரத்தினை தாண்டி முதலாவது இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

பி. நிதுஷன் 3.95 மீற்றர் தூரத்தைத் தாண்டி 2ஆவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

பி. லவணன் 3.85 மீற்றர் தூரத்தைத் தாண்டி வர்ண விருதை பெற்றார்.

21 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் எ.பவித்திரா 3.05 மீற்றர் தூரத்தைத் தாண்டி முதலாவது இடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

ஆர். ஜக்சன் 2.80 மீற்றர் தூரத்தினை தாண்டி 2ஆவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினை பெற்றுள்ளார்.

21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் ஹோகாய் றொசாந் 4.00 மீற்றர் தூரத்தைத் தாண்டி 2ஆவது இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தினை பெற்றுள்ளா. (கு-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.9
யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங் களுக்கு இடையே நடத்தப்படும் லீக் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மோதும். (கு-23)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஒக்.9
மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழங்களுக்கு இடையிலான 7பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

பி.ப 3.30 மணி இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் இமையணன் மத்திய விளையாட்டுக்கழகம்.

மாலை 4.30மணி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் உதய தாரகை விளையாட்டுக்கழகம். (23)

# அரையிறுதிக்கு ஜமாலியா அணி

யாழ்ப்பாணம், ஒக.9
தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் திருகோணமலை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. காலிறுதி ஆட்டம் ஒன்றில் ஜமாலிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

ஜமாலியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஜமாலியா விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (கு-23)

# றெட்றேஞ்சர்ஸ், ஞானமுருகன் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.9
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழப்பாணச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஞாயிற்றுக் கிழமை உரும்பிரய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் றெட் றேஞ்சர்ஸ் வியைாட்டுக்கழகம் மயிலங்காடுஞானமுருகன் வியைாட்டுக்கழகம் ஆகியன வெற்றிபெற்றன.

வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணிமோதிக் கொண்டது.

இதில் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகஅணி 3:0என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது

குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (கு-23)

# யாழ்.கோட்ட மட்ட உதைபந்து இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.9
யாழ். கோட்ட பாடசாலைகளின் 14 வயதுப்பிரிவு, 16 வயதுப்பிரிவு, 18வயதுப்பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றது .

14 வயதுப்பிரிவு அணிகளுக்கான ஆட்டம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில்காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 2.30 மணி வரை இடம் பெறவுள்ளது.

16 வயதுப்பிரிவு , 18 வயதுப்பிரிவு அணிகளுக்கான ஆட்டம் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை இடம் பெறவுள்ளது. (கு-23)

# வென்றது ஐக்கியம்

யாழ்ப்பாணம், ஒக்.9
யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்க ளுக்கு இடையே நடத்தப்படும் லீக் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட் டுக்கழக அணி வெற்றிபெற்றது.

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (கு-23)

# பற்றிமா வி. கழகம் இறுதியாட்டத்துக்கு

யாழ்ப்பாணம் ஒக.9
தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் திருகோணமலை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.



இதில் பற்றிமா விளையாட்டுகழக அணியை எதிர்த்து ஈஸ்ரேன் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட் டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது.

இதில் பற்றிமா விளையாட்டு கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றன. (கு-23)

# மகாஜன வீரர்கள் நேற்றுக் கௌரவிப்பு



அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையே கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி பதக்கங்களையும் நிற விருதுகளையும் வென்றவர்கள் மற்றும் கலந்துகொண்டவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று நண்பகல் கல்லூரியின் பதில் அதிபர் எஸ். சயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட வீர, வீராங்கனைகள் கல்லூரி வெளி வீதியில் இருந்து கல்லூரியின் பாண்ட் வாத்திய குழுவின் அணிவகுப்பு மரியாதையுடன் மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பாராட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சத்தியபாலனும், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கு.கோசலை அதிபர் கே.வேல் சிவானந்தன் ஆகியோர் பாராட்டி பத்திரங்களையும் பதக்கங்களையும் வழங்கினார்கள். (கு-86)

# மன்னார் பனங்கட்டிக்கொட்டு உதைபந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக்.9
மன்னார் சிரேஸ்ட உதைபந்தாட்டச் சங்கம் அமரர் பி.எம். தியோபிளஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார் பனங்கட்டிக்கொட்டு சூசையப்பர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் பனங்கட்டு கொட்டு சூசையப்பர் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து பள்ளி முனை சென். லூட்சியா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மன்னார் பனங்கட்டிக் கொட்டு சூசையப்பர் விளையாட் டுக்கழக அணி 2:1 கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

தொடர் ஆட்டநாயகனாக பள்ளி முனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணிவீரன் றெஜி கடோ தெரிவானார். சிறந்த கோல்காப்பாளராக பனங்கட்டிக் கொட்டு சூசையப்பர் விளையாட்டக்கழக அணிவீரன் குருஸ் தெரிவானார்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் காத்தான்குளம் சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் காத்தான்குளம் சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன் றாமிடத்தைத் தனதாக்கியது. (கு-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் மாஸ்ரர்ஸ் மெய்வன்மையில் இலங்கை வீரருக்கு 4 பதக்கங்கள்



சிங்கப்பூரில் நடைபெற்ற 34ஆவது மாஸ்டர்ஸ் வருடாந்த தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கையை சேர்ந்த ரொஷான் சமிந்த நான்கு தங்கப்பதங்கங்களை வென்றெடுத்ததுடன் பெறுமதி வாய்ந்த வீரருக்கான விருதையும் தன்வசப் படுத்திக்கொண்டார்

சிங்கப்பூரின் டோ பாஒ மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டிகளில் 35 முதல் 39 வயதுக் குட்பட்டவர்களுக்கான பிரிவின் கீழ் கலந்து கொண்ட ரொஷான் 800 மீற்றர், 1,500 மீற்றர், 3,000 மீற்றர் ஓட்டப்போட்டிகளிலும், 3000 மீற்றர் வேகநடைப்போட்டி ஆகிய நான்கு தனிநபர் போட்டிகளிலும் தங்கப் பதக்கங்களை சுவீகரித்துக் கொண்டார்.

அதுதவிர 4X100 மீற்றர் தொடர் ஓட்டப்போட்டி, 4X400 மீற்றர் தொடர் ஓட்டப்போட்டி ஆகிய குழுநிலைப் போட்டிகளிலும் இரண்டு வெளளிப்பதங்களையும் வென்றார். மொத்தமாக நான்கு தங்கம் இரண்டு வெள்ளி அடங்கலாக ஆறு பதங்கங்களை வென்றெடுத்த சமந்தவுக்கு சிங்கப்பூர் மாஸ்டர்ஸ் மெய்வல்லுநர் போட்டிகளில் பெறுமதி வாய்ந்த வீரருக்கான விருது வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, மலேஷியா, தாய்லாந்து, பங்களாதேஷ், புருனை, ஹொங்கொங், சிங்கப்பூர் உட்பட பல நாடுகளை சேரந்த மாஸ்டர்ஸ் மெய்வல்லுனர்கள் இப்போட்டிகளில் கலந்துகொண்டனர். (த)




# ரூபா 24 கோடி கேட்கிறார் டோனி

இந்தியக் கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் டோனியை ஒப்பந்தம் செய்ய 3 நிறுவனங்கள் வரிசையில் நிற்கின்றன. அவர்களின் தயாரிப்புகளை விளம்பரம் செய்ய அவர்கள் டோனிக்கு கோடிக் கணக்கில் கொட்டிக் கொடுக்க வேண்டியுள்ளது. தயாரிப்புகளை விளம்பரம் செய்வது மட்டும் அல்லாமல் அவற்றுக்கு ராயல்ட்டியும் வழங்கும் வகையிலான ஒப்பந்தங்களில் டோனி கையெழுத்திடவிருக்கிறாராம். இந்த ஒப்பந்தங்கள் ஆஸ்திரேலியாவுக்கெதிரான தொடருக்கு முன்பு கையெழுத்தாகும் என்று தெரிகிறது. ஆஸ்திரேலியாவுக்கெதிரான தொடரில் டோனியின் துடுப்புக்கு புதிய அனுசரணை கிடைத்துவிடும் என்று தெரிகிறது.

துடுப்பு அனுசரணையாளர்களிடம் டோனி ரூபா 24 கோடி கேட்கிறாராம். ரூபா 24 கோடி ரொம்பவே அதிகம் என்று அனுசரணையாளர்கள் நினைக்கிறார்களாம்.

டோனி தற்போது 23 பொருள்களை விளம்பரப்படுத்துகிறார். இது தவிர அவ்வப்போது துடுப்புக் கம்பனி லோகோக்களையும் விளம்பரப்படுத்துகிறார்.

பொதுவாக துடுப்பு அனுசரணைக்கு ஒரு வீரருக்கு ஆண்டுக்கு ரூபா 3 கோடி முதல் ரூபா 7.5 கோடி வழங்கப்படும். அதுவே முன்னணி வீரர்களுக்கு ரூபா 13.5 கோடி முதல் ரூபா 16.5 கோடி வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக டோனி சூட் விளம்பரத்தில் நடிக்க ரூபா 30 கோடி கேட்டதால் அந்த வாய்ப்பு பொலிவுட் நடிகர் சைப் அலிகானுக்குச் சென்றது குறிப்பிடத்தக்கது. (த)

# டெஸ்ட் போட்டியில் வாய்ப்புக் கிடைக்கும்

## ரோகித் நம்பிக்கை



டில்லியில் நடந்த சம்பியன்ஸ் லீக் 20/20 ஓவர் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 33 ஓட்ட வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இந்த ஆண்டில் மும்பை இந்தியன்ஸ் அணி ரோகித் ஷர்மா தலைமையில் கைப்பற்றிய 2 ஆவது கிண்ணம் இது வாகும். கடந்த மே 6ஆம் திகதி ஐ.பி.எல். கிண்ணத்தை இந்த அணி வென்று இருந்தது. சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வென்ற பின்னர் மும்பை இந்தியன்ஸ் அணி கேப்டன் ரோகித் ஷர்மா அளித்த பேட்டியில் கூறியதாவது:-

நவீன கிரிக்கெட்டில் அணியில் தொடர்ந்து இடத்தைத் தக்கவைப்பது முடியாத விடயம். டெஸ்ட் போட்டியில் அறிமுகம் காண நான் காத்து இருக்கிறேன். அந்த வாய்ப்பு விரைவில் கிட்டும் என்று நம்புகிறேன். சரியான நேரம் மற்றும் வாய்ப்புக்காக நான் காத்து இருக்கிறேன். சம்பியன்ஸ் லீக் வெற்றி எங்களுக்கு எளிதாக கிடைத்து விடவில்லை. எங்கள் அணி மீது நிறைய எதிர்பார்ப்பு இருந்தது. இதனால் ஏற்பட்ட அதிகப்படியான நெருக்கடியை நாங்கள் நல்ல முறையில் கையாண்டோம் என்று நினைக்கிறேன். இந்தப் போட்டியில் நாங்கள் நிறையச் சிறப்பான பண்புகளை வெளிப்படுத்தினோம்.

ஹர்பஜன்சிங்கின் நிலை குறித்து நான் கவலைப் படவில்லை. அவர் அருமையாகச் செயல்பட்டு ஆட்டத்தை எங்களுக்குச் சாதகமாகப் திருப்பினார். அவர் ஒரே ஓவரில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியது எங்களுக்கு மிகவும் முக்கியமானது. ஒன்று, இரண்டு ஓவர்களின் அடிப்படையில் போட்டியின் முடிவு அமைந்ததாக நான் நினைக்கவில்லை. அணித்தலைவர் சிறப்பாக விளையாடினால் அணியினரை ஈர்க்க முடியும். டோனியைப் போல் நான் பொறுப்புடன் அணியை வழிநடத்தியதாக நம்புகிறேன்.

அணியின் எல்லா வீரர்களும் நல்ல பங்களிப்பையும், ஆதரவையும் அளித்தனர். 20 ஓவர் போட்டியில் இருந்து ஓய்வு பெறும் டெண்டுல்கருக்கு இது சரியான வழியனுப்பு விழா என்று நான் நினைக்கிறேன். டெண்டுல்கருக்காகக் கிண்ணத்தை வென்றமை எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரே ஆண்டில் இரண்டு கிண்ணம் வென்றது பூரிப்பாக இருக்கிறது என ரோகித் ஷர்மா கூறினார்.

26 வயதான ரோகித்ஷர்மா இதுவரை 102 ஒருநாள் போட்டிகள் மற்றும் 35, 20/20 ஓவர் போட்டிகளில் விளையாடியிருந்தாலும் இன்னும் டெஸ்ட் போட்டியில் அறிமுகம் ஆகவில்லை. (த)

## ஜொஹான் போத்தாவின் பந்து வீச்சினால் சர்ச்சை

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஜொஹான் போத்தாவின் பந்துவீச்சுத் தொடர்பாக முறையிடப்பட்டுள்ளது. சட்டரீதியற்ற பந்துவீச்சுப் பாணியைக் கடைக்கொள்வதற்காக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க அணியின் ஒப்பந்தத்திலிருந்து விலகி, தெற்கு ஆஸ்திரேலியா சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றிவரும் ஜொஹான் போத்தா, அங்கு உள்ளூர்ப் போட்டியில் வைத்தே பந்தை எறிவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் பந்தை வீசியெறிவது தொடர்பான நடைமுறையின் படி, ஜொஹான் போத்தா தொடர்ந்தும் பந்துவீசுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்தோடு, ஜொஹான் போத்தா பந்தை எறிவதாக் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே அவர் பந்துவீசுவதற்குத் தடை விதிக்கப்படும்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை விதிகளின் படி, பந்தை வீசியெறிவதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வீரரொருவர், 14 நாள்களுக்குள் அது தொடர்பான பரிசோதனைக்குள்ளாக்கப்பட வேண்டும். இதற்கு முன்னரும் பந்தை வீசியெறிவதாக பலமுறை குற்றஞ்சாட்டப்பட்ட ஜொஹான் போத்தா, இறுதியாக 2009ஆம் ஆண்டு குற்றஞ்சாட்டப்பட்டு, தூஸ்ரா பந்துவீசுவதற்குத் தடை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)



# முக்கோணத் தொடரில் டில்ஷான் இல்லை

இலங்கை கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்துள்ள 3 அணிகள் பங்குபற்றும் உள்ளூர் முதற்தரப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியிலிருந்து திலகரட்ண டில்ஷான் நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது. டில்ஷானுக்கு ஏற்பட்ட விரல் என்பு முறிவு காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு, அடுத்த போட்டியில் அவர் பங்குபற்றுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

திலகரட்ண டில்ஷான் முதலாவது போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதையடுத்து, இலங்கை ஏ அணிக்காக அறிவிக்கப்பட்டிருந்த கௌஷால் சில்வா கிரிக்கெட் சபை பதினொருவர் அணிக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அபிவிருத்தி அணியில் இடம் பெற்றிருந்த கனிஷ்க அல்விற்றிகல இலங்கை ஏ அணிக்காக மாற்றப்பட்டுள்ளதுடன், கசுன் மதுஷங்க அபிவிருத்தி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.



இலங்கை அணி சிம்பாப் வேயிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் பங்குபற்றவிருந்த நிலையில், அத்தொடர் பிற்போடப்பட்டுள்ளதால், அத்தொடருக்குப் பதிலாகவே இத்தொடர் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளதோடு, இத்தொடர் இன்றைய தினம் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மாற்றப்பட்டுள்ள புதிய குழாம்கள்:**

கிரிக்கெட் சபை பதினொருவர் அணி: அஞ் சலோ மத்தியூஸ், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, கௌஷால் சில்வா, அஞ்சலோ பெரேரா, பிரசன்ன ஜெயவர்த்தன, நுவான் குலசேகர, சச்சித்திர சேனநாயக்க, ரங்கன ஹேரத், சுராங்க லக்மால், திஸர பெரேரா, அஜந்த மென்டிஸ், லஹிரு ஜெய ரத்ன, ரி. பிரியஷங்கர் இலங்கை ஏ: டினேஷ் சந்திமால், மஹேல உடவத்த, பபசுர வடுகே, கித்துருவன் விதானகே, அஷன் பிரியஞ்சன், சத்துராங்க டீ சில்வா, கனிஷ்க அல்விற்றிகல, இஷான் ஜெயரத்ன, டில்ருவான் பெரேரா, நுவான் பிரதீப், விமுக்தி பெரேரா, மதுர லக்மால், சத்துர றன்டுனு, றமித் றம்புக்வெல்ல, பானுக ராஜபக்ஷ

அபிவிருத்தி அணி: லஹிரு திரிமன்ன, ஷெஹான் ஜெயசூரிய, குசால் பெரேரா, றுமேஷ் புத்திக்க, சச்சித்திர சேரசிங்க, றொஷென் சில்வா, தனுஷ்க குணதிலக, மாதவ வர்ணபுர, தரிந்து கௌஷால், மலிந்த புஷ்பகுமார, விஷ்வா பெர்னான்டோ, கசுன் மதுஷங்க, லஹிரு கமகே, ஷ மின்ட எரங்க, நிரோஷன் டிக்வெல்ல, சீக்குகே பிரசன்ன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். அனுபவம் உதவும்

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டு வந்துள்ள ஆஸ்திரேலிய அணி, அந்தக் குழாமில் இடம்பெற்றுள்ள வீரர்களின் இந்தியன் பிறிமியர் லீக் அனுபவம் அவ்வீரர்களுக்குச் சாதகமாக அமையும் என எதிர்பார்க்கிறது. இந்தத் தகவலை அவ்வணியின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள ஜோர்ஜ் பெய்லி தெரிவித்துள்ளார்.

ஒற்றை 20/20 சர்வதேசப் போட்டி, 7 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் அடங்கிய இந்தத் தொடரில் மைக்கல் கிளார்க் பங்குபற்ற முடியாது போக, இந்தத் தொடருக்கான முழு மையான தலைவராக ஜோர்ஜ் பெய்லி செயற்படவுள்ளார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ஜோர்ஜ் பெய்லி, சில வருடங்களாக இடம்பெற்றுவரும் இந்தியன் பிறிமியர் லீக் தொடரின் நன்மைகளில் ஒன்றாக இந்திய வீரர்களையும், இந்திய மைதானங்களையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு காணப்படுவதாகத் தெரிவித்தார். இந்தக் குழாமில் இடம்பெற்றுள்ள வீரர்களில் எல்லோரும் இந்திய வீரர்களுடன் இணைந்தோ அல்லது அவர்களுக்கு எதிராகவோ இந்தியன் பிறிமியர் லீக் தொடரில் பங்குபற்றியுள்ளதால் எமக்கு சாதகமான நிலை ஏற்றப்பட்டது என்றார். (த)


ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

**IELTS**

A1 B1 (ESOL) Diploma

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

இலவச ஆலோசனைகளுக்கு 0777240707

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

யாழ்ப்பாணம் 0212224403 | நெல்லியடி 0212262470 | சாவகச்சேரி 0212270775 | சுன்னாகம் 0212241970



## விற்பனைக்கு

சீவம் நியுகலா தீபாவளிக் காட் மொத்தமாகவும் சில்லறையாகவும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீகரன் புக் சென்ரர்
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
நிலை-73 T.P:077 078 1660

(சி/12664) (3.6.4)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 18.01.1951 — ஆண்டவன் அடியில் 01.10.2011



அமரர்

**செல்லத்துரை சங்கரப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர்)

அணையா விளக்காக வீற்றிருக்கும் அப்பாவே!
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
வையகத்தில் சீரோடும் சிறப்போடும்
வாழ்ந்து வானுலகம் சென்றுவிட்ட உங்களின்
ஆத்ம சாந்திக்காக
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புற்றளை, புலோலி. — குடும்பத்தினர்.

(32555)(10.6)


## பணிநிலை வேண்டுகை

வடக்கின் நவீன அச்சுக் கலையின் முன்னோடி
**கரிகணன் பிறிண்டேர்ஸ்**
தமது நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோருகின்றது.

### கணினி பக்க வடிவமைப்பாளர் Graphics Designer

தகமைகள்
- DTP (E.g.: Indesign, Photoshop, Coreldraw) தொடர்பான கல்வியறிவு
- மொழித்தேர்ச்சி
- முன்னனுபவம் விரும்பத்தக்கது

### கணினி தட்டெழுத்தாளர் Type Setter

தகமைகள்
- போதுமான Typing Speed (30 Word per Minute)
- மொழித்தேர்ச்சி
- முன்னனுபவம் விரும்பத்தக்கது

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படுவதுடன் ETF, EPF போன்ற அரசதிட்டங்களுக்களுடனும் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள்.

எதிர்வரும் 2013.10.14ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கவும். மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பிப்போர் தங்கள் விரும்பும் பதவியினை (Mail Subject) குறிப்பிட்டு அனுப்பவும்.

தபால்மூலம் அனுப்பவேண்டிய முகவரி: மனிதவள முகாமையாளர்
கரிகணன் பிறிண்டேர்ஸ்
இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் மூலம் அனுப்பவேண்டிய முகவரி: print@harikanan.com



## வேலையாள்கள் தேவை

சங்கென் வடமாகாண கிளைக்கு தேவையான வேலையாள்கள்/ உப கொந்தராத்துக்காரர்கள் தேவை. (யாழ், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி)

விபரங்களுக்கு:-
- திலீபன் - 0712387076
- ரிசிகேசன் - 0712387106
- யசோக் - 0718643645
- இராஜ்குமார் - 0776393412
- உஷா - 0212224840



## Sanken Nothern Branch Wanted

The following Personals with Suitable qualification and experience..

**Vacancies are available at killinochchi and Mullaitivu.**

**Site Manager:** Civil Engineer with 5 years experience.
**Site Engineer:** Civil Engineer with 3 years experience.
**Site Supervisors:** N.C.T. (Civil) with 5 years experience.
**Store Keeper:** Construction relatated field experience is essential
**Site Admin Officer:** Constrction related field experience is required.

Apply to
**jayanthi@sankenconstruction.lk.**

(சி12671-23-14)



## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் இப்பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 12.10.2013 சனிக்கிழமை
1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 1.00-03.00
4. மாலை 3.00-05.00

வார நாள் பிரிவுகள் ஆரம்பம் 10.10.2013 வியாழன்
1. காலை 9.00-11.00
2. காலை 11.00-01.00

குறிப்பு:-3 மாதங்களில் ஆங்கிலம் சரளமாக பேசமுடியாதவிடத்து முழுப்பணமும் மீள வழங்குவதற்கான உத்தரவாதம்.

SAAMSON EASY WAY ENGLISH
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567



# After A/Level's..

இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து Pendrive ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

New batches ➡ 11th Octobrer 14th Octobrer @ 9.00 am

ESOFT Diplomas have an International Recognation

- DiTEC — Diploma in Information Technology — International + ESOFT Certificates — 4 Months
- DiWE — Diploma in Web Engineering — International + ESOFT Certificates — 6 Months
- DiSE — Diploma in Software Engineering — International + ESOFT Certificates — 6 Months
- DiBM — Diploma in Business Management — International + ESOFT Certificates — 4 Months
- DiCA — Diploma in Computerized Accounting — International + ESOFT Certificates — 4 Months
- DiE — Diploma in English (Grammar | Spoken | Comprehension) — International + ESOFT Certificates — 4 Months

edexcel Assured

Dual Certificates

50% Discount for ESOFT Students

Register with ESOFT After A/Levels .......

Win FREE

Get Rewarded by Introducing your Friends to the Diplomas

SMS மேலதிக விபரங்களுக்கு to 077 990 56 11
<Fullname> space <Degree> spece <Address>

ESOFT Shaping Lives, Creating Futures.
**ESOFT METRO CAMPUS - JAFFNA**
No 137, K K S Road, Jaffna | Tel :021 222 4142
HOTLINE : 077 309 9 308

| Nelliady | Kilinochchi | Jaffna 2nd Branch |
|---|---|---|
| 151, Jaffna Rd 021 226 4940 | 01, Kanagapuram Rd, 021 228 5444 | 17/1 Brown Rd, Jaffna 021 750 1120 |



## உடன் தேவை

அச்சக வேலைக்கு Tamil, Engilsh Typing, corel Draw, page maker, photo shop தெரிந்தவர்கள் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் நேரில் வரவும்.

ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ்
555, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கைலாயப்பிள்ளையார் கோயில் அருகில்)
T.P 0777917680



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111



## பகுதிநேர அறிவிப்பாளராக
### வருவதற்குரிய அரிய சந்தர்ப்பம்

வானொலி அறிவிப்பாளர் ஆகும் உங்கள் கனவை நனவாக்க நேர்முகத் தேர்விற்கு கீழ்வரும் முகவரிக்கு இன்று (09.10.2013) புதன்கிழமைகாலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை சமூகமளிக்கவும்.

தொடர்புகளுக்கு:-

**உதயன் இணைய வானொலி**
359, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 5672222
web: www.uthayanradio.com



- ஐரோப்பிய நாடான போலந்து நாட்டில் படிக்க உழைக்க 7 இலட்சம் மட்டும் போதும்
- மலேசியாவில் படிக்க உழைக்க 3 இலட்சம் மட்டும் போதும்
- ஹொலண்ட், நெதர்லாந்தில் படிக்க மாதம் 2 இலட்சம் வரை உழைக்க சொற்ப பணம் போதும்.
- இத்தாலி சட்டரீதியாக செல்லலாம்.
- எந்த வயதினரும் கனடாவுக்கு சட்ட ரீதியாக Visit Visa வில் செல்லலாம்.
- நியூசிலாந்தில் படிக்க IELTS தேவையில்லை. பகுதிநேர தொழில். 2 வருடத்தில் நிரந்தரக்குடியுரிமை.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

விஷயங்களை அறிய மனிதன் காட்டும் ஆர்வம், அவற்றுடன் சொந்தக் கற்பனையைச் சேர்த்துப் பிறருக்குக் கூறுவதற்கு.

-ஓர் அறிஞர்

# புதன் பொய்கை A

உதயன் | ஒக்ரோபர் 09 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

# பெருந்தன்மை

## அரிய பண்பு

ராஜராஜன்

இன்றுள்ள மனிதர்களிடத்தில் பெருந்தன்மைக் குணம் அருகி வருவதைக் காண முடிகின்றது. விட்டுக் கொடுக்கும் பண்பு மெல்ல மெல்ல மறைந்து வருவதால் பெருந்தன்மையும் அற்றுப் போகும் நிலை காணப் படுகின்றது.

இந்த அரியகுணம் அருகி வருவதால், சிறிய சச்சரவுகள் கூடப் பெரிதாகிப் பூதாகாரமாக உருவெடுத்து நிற்கின்றன. எமக்குத் தீமை செய்யும் ஒருவனை நாம் மன்னித்து விடுவோமாயின் அதைவிடப் பெரிய நற்பண்பு வேறெதுவும் இருக்க முடியாது. ஏனென்றால் மன்னித்து விடும் பழக்கம் தெய்வ அம்சம் பொருந்தியது. இதனை வேறு எவரும் எமக்குக் கற்றுத்தர வேண்டியதில்லை. தானாகவே எமது மனங்களிலிருந்து இந்தக் குணம் வெளிவர வேண்டும். இதனால்தான் யேசு, புத்தர், காந்தி ஆகியோர் மனிதப் பிறவிகளாக இருந்த போதி லும் தெய்வப் பிறவிகளாகப் போற்றி மதிக்கப் படுகின்றனர்.

ஆனால் சாதாரண மனிதர்களாகிய நாம் எடுத்ததற்கெல்லாம் ஆத்திரப் படுகின்றோம். கோபத்தில் எதையெல்லாமோ செய்துவிடுகின்றோம். எம்மீது அன்பையும் பாசத்தையும் பொழிபவர்களை ஒரே வினாடியில் இழந்து விடுகின்றோம். எவர் எந்த வேளையில் எமக்குத் தீங்கு செய்து விடுவார்களோ என்ற அச்சத்தில் உறைந்து நிற்குமளவுக்கு எதிரிகளைச் சம்பாதித்து விடுகின்றோம். இறுதியில் மன உளைச்சலுக்கு ஆளாகி நோய்களால் பீடிக்கப்பட்டுத் துன்பங்களை அனுபவிக்கின்றோம். நாம் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டிருந்தால் இவையெல்லாவற்றையும் தவிர்த்துவிட முடியும். ஆனால் ஏனோ நாம் தவறி விடுகின்றோம்.

மனைவி சமைத்த உணவில் உப்புச் சுவை சற்று அதிகம் இருந்ததைக் காரணம் காட்டிக் கணவன் பெரும் பூகம்பத்தையே உருவாக்கி விடுகின்றான்.

சில வேளைகளில் உணவுக் கோப்பை மனைவியில் முகத்தைப் பதம் பார்க்கும். பிள்ளைகள் அருகிலிருந்தால் அலறியடித்துக் கொண்டு ஓடி விடுவார்கள். மொத்தத்தில் உணவு மேசை ஒரு போர்க்களம் போன்று காட்சியளிக்கும். அன்று அந்த வீட்டிலுள்ள எவரும் உண வருந்தியிருக்கமாட்டார்கள். ஒரே சோகமான சூழ்நிலை அங்கு நிலவும். உணவில் சிறிதளவு உப்பு அதிகரித்து விட்டது என்பதற்காக இத்தனை ஆர்ப்பாட்டமும் வேதனை யும் தேவைதானா என்ற கேள்வி எம்முள் எழுகின்றது. மனைவி எவ்வளவோ கஷ்டப்பட்டு அந்த உண வைத் தயார் செய்தாள் என்பதை அந்தக் கணவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. மேலும் ஏதோ சிறிய தவறொன்று நடந்து விட்டது. இத னைச் சமாளித்து விடுவதுதான் பெருந்தன்மை என்பதையும் அவன் உணர்ந்து கொள்ளவில்லை. ஆனால்



இதன் விளைவாக அந்தக் குடும்பம் வேதனையில் ஆழ்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது. அண்மையில் ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளிவந்த பின்னர் சில பெற்றோர் நடந்து கொண்ட முறை வேதனை தருகின்றது. தமது மகன் பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதற்பாக சிறுவனைக் கடுமையாகத் தண்டித்த தந்தையைப் பற்றிக் கேள்விப்பட்டோம். வேறொரு குடும்பத்தில் சித்தியடையாத தமது பிள்ளையை அடித்து வீட்டை விட்டு விரட்டிய பெற்றோர்களும் இந்த உலகில்தான் உள்ளனர். இவ்வாறு பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. பாவம் சிறு பிள்ளைகள். அவர்கள் இயன்றளவு முயற்சி செய்தவர்கள். ஏனோ சித்தியடைய முடியவில்லை என எண்ணுவதற்கு இந்தப் பெற்றோர் தவறியுள்ளனர். சமூகத்தில் தமது மதிப்பு குறைந்து விடும் என்ற காரணத்துக்காகவும் சில பெற்றோர் தமது பிள்ளைகளை வதைத்து விடுகின்றனர். இவர்களின் பெருந்தன்மையற்ற அற்பத்தனத்தால் அந்த இளம் சிறிசுகள் வதைபடுகின்றன.

சில குடும்பங்களில் ஈகோ என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மனப்பாங்கு அதிகளவில் காணப்படும். கல்வி, அழகு, உத்தியோகம் மற்றவர்களால் விரும்பப்படும் தன்மை இவ்வாறு பல விடயங்களில் இந்த ஈகோ புகுந்து விளையாடும். மனைவி அழகாக இருந்து விட்டால் அதற்கு எதிர்மாறான உடலமைப்பைக் கொண்ட கணவன் புழுங்கி நிற்பான். தன்னிலும் பார்க்க அவள் உயர்ந்த உத்தியோகத்தில் அமர்ந்திருப்பதையும் அவனால் பொறுத்துக் கொள்ள முடியாது. மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கும் இவன் அவள் மீது எப்போதும் குறை கூறுவதையே வழக்கமாகக் கொண்டிருப்பான். அவளது நடத்தையில் சந்தேகமும் கொள்வான். இறுதியில் சிலவேளை நீதிமன்றத்துக்கு இவர்கள் இருவரும் செல்ல வேண்டிய நிலையும் உருவாகி விடும். விட்டுக் கொடுக்காத பண்பும். பெருந்தன்மையை இழந்த தன்மையும் அந்தக் கணவனிடத்தில் இருந்ததால் இத்தகைய பரிதாபமான நிலை உருவாகி விட்டது.

சில பாடசாலைகளில் அதிபருக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் நல்லுறவு நிலவுவதில்லை. இதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்கும்போது சில தகவல்கள் வெளிவருகின்றன. சில அதிபர்கள் தம்மிலும் பார்க்க தமக்குக் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் திறமையாகச் செயற்படுவதை விரும்புவதில்லை. மாணவர்கள் அந்த ஆசிரியர்களால் ஈர்க்கப்பட்டு விடுவார்களோ என்ற அச்ச உணர்வு வேறு. இதனால் அந்த ஆசிரியர்கள் மீது எப்போதும் குறை காண்பதிலேயே குறியாக இருப்பார்கள். அவர்களை மட்டம் தட்டுவதும் இவர்களின் முக்கியமான செயற்பாடுகளில் ஒன்றாகக் காணப்படும். இவர்கள் நான் அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் தானே கடமையாற்றுகின்றனர். இவர்களின் திறமைகள் மாணவர்களைச் சென்றடைவதால் இந்தப் பாடசாலை தானே நற்பெயர் பெறும் என அவர்கள் ஒரு கணம் பெருந்தன்மையுடன் சிந்திக்க ஆரம்பித்தால் பிரச்சினைகளே எழமாட்டாது.

இன்று அமெரிக்க வல்லரசின் நிர்வாகக் கட்டமைப்புக்கள் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்படுவதற்கும், மேலே கூறப்பட்ட விடயங்களுக்கும் நிறையவே பொருத்த முண்டு. குடியரசுக் கட்சியின் விட்டுக் கொடுக்காத சுயநலமிக்க நடவடிக்கையால் அந்த நாட்டு மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். அதுவும் மக்களின் நன்மைக்காக ஜனாதிபதி ஒபாமாவினால் முன்மொழியப்பட்ட சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தினால் மக்கள் கவரப்பட்டு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தம்மைப் புறக்கணித்து விடுவார்களோ என்ற பயம் காரணமாக வரவு செலவுத் திட்டத்தை முடக்கி வைத்துள்ளது குடியரசுக் கட்சி. இதனால் ஏற்படும் பெரிய பாதிப்புக்கள் தொடர்பாக இவர்கள் அக்கறை காட்டவில்லை. தமது சுயநலத்தை முன் நிறுத்தியே அவர்கள் செயற்படுகின்றனர்.

இவ்வாறு ஏராளமான உதாரணங்களைக் கூறலாம்.

ஆகவே நாம் எமது வாழ்வில் எப்போதும் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். இதனால் நாம் மட்டுமல்ல எம்மைச் சூழ இருப்பவர்களும் நன்மையடைவர். மேலும் தேவையற்ற பிரச்சினைகள் எழுவதற்கான சந்தர்ப்பமும் குறைந்து காணப்படும். மனிதர்கள் கல்வி, செல்வம் ஆகியவற்றில் மட்டுமே உயர்ந்த நிலையில் இருந்தால் போதாது. மனதளவிலான நல்ல பழக்கவழக்கங்களும் நிறைந்து காணப்படும் போதுதான் வாழ்க்கை சொர்க்கமாக மாறும்.

**இன்று அமெரிக்க வல்லரசின் நிர்வாகக் கட்டமைப்புக்கள் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்படுவதற்கும், மேலே கூறப்பட்ட விடயங்களுக்கும் நிறையவே பொருத்த முண்டு. குடியரசுக் கட்சியின் விட்டுக் கொடுக்காத சுயநலமிக்க நடவடிக்கையால் அந்த நாட்டு மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மனிதர்களின் பற்களை சுத்தம் செய்யும் மீன்

மீன்கள் மனிதர்களின்
பற்களைச் சுத்தம் செய்யும்
ஆற்றல் கொண்டவை.
அவ்வாறு பல்லை
சுத்தம் செய்யும்
மீனைக் காணலாம்.




சாதிக்கத் துடிக்கும் உள்ளங்கள்
ஏற்றுக் கொள்ளும்
இரகசியம்- சோதனை
கனவிலும் நனவிலும்
நினைவிலும்
அடைந்திட முயலும்
குறிக்கோள்- நிஜமான வெற்றி

சிந்து சிவதாஸ்,
ஐங்கரன் வீதி, சுதுமலை



# புற்றுநோய் வராமல் குறைக்க நடைப் பயிற்சி

வாரம்தோறும் 7 மணித்தியாலங்கள் நடப்பதன் மூலம் புற்றுநோய் வரமால் தப்பித்துக்கொள்ளும் வாய்ப்பு 14 சதவீதம் அதிகம் காணப்படுகின்றது.

தற்போது பெண்களை அதிகளவில் தாக்கிவரும் நோயாக மார்பகப் புற்றுநோய் காணப்படுகின்றது. இதனால் இந்த நோயை குணப்படுத்துவதற்கான ஆய்வுகள் முழு வேகத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.
இதன் அடிப்படையில் வாரம் ஒன்றுக்கு 7 மணித்தியாலங்களுக்கு மேல் நடைப்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் இந்த நோய்த் தாக்கத்தைக் குறைத்துக்கொள்ள முடியும் என்று ஓர் ஆய்வு கூறுகின்றது.
73,615 பெண்களை வைத்து மேற்கொண்ட ஆய்வின் மூலம் நாள்தோறும் உடற்பயிற்சிகளை மேற்கொள்ளும் பெண்களில் 25 சதவீதத்தினால் இந்த நோயிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
வாரம்தோறும் 7 மணித்தியாலங்கள் நடப்பதன் மூலம் நோய்த் தாக்கத்தில் இருந்து தப்பித்துக்கொள்ளும் வாய்ப்பு 14 சதவீதம் காணப்படுகின்றது.

# அப்பிள் ஜூஸ் குடிப்பது ஆபத்து



உடலுக்கு மிகுந்த ஆரோக்கியம் தரும் பழங்களில் முதன்மையானதுதான் அப்பிள். ஏனெனில் அப்பிள் பழத்தில் எண்ணற்ற சத்துக்கள் நிறைந்துள்ளன. மருத்துவர்கள் கூட தினமும் ஒரு அப்பிள் சாப்பிட்டு வந்தால், நோய்களில் இருந்து விலகி இருக்கலாம் என்று சொல்வார்கள்.
ஆனால் அத்தகைய அப்பிளை ஜூஸ் போட்டு அருந்தினால், அது ஆரோக்கியத்துக்குப் பதிலாக உடலுக்குத் தீமையைத்தான் விளைவிக்கும். எப்போதும் பழங்களை ஜூஸ் போட்டு அருந்துவதை விட, அப்படியே கடித்து உண்டால்தான் அதில் உள்ள சத்துக்கள் அனைத்தையும் பெற முடியும்.
அதிலும் அப்பிளை ஜூஸ் போட்டு அதிகமாக அருந்தினால், அதில் சர்க்கரை, கலோரிகள் போன்றவை அதிகம் இருப்பதால், நீரிழிவு மற்றும் பற்சிதைவு போன்றவை ஏற்படும் வாய்ப்பு உள்ளது.
அப்பிளை அரைத்து, அதனை வடிகட்டி அதன் சாற்றை மட்டும் பருகினால் மிகவும் ஆபத்தானது.
அப்பிள் ஜூஸில் கலோரிகள் அதிகம் இருப்பதால், இது உடலில் பல ஆபத்தான பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். அதாவது கலோரிகள் அதிகம் உள்ள உணவுகளை தினமும் உட்கொண்டால், அது இதயத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.
அப்பிள் ஜூஸில் ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்கும் ஆர்செனிக் என்னும் பொருள் அதிக அளவில் நிறைந்துள்ளது. அதுமட்டுமன்றி கலோரிகள் மற்றும் சர்க்கரை அதிகம் இருப்பதால், அது உடல் பருமனுக்கு வழிவகுப்பதோடு, நீரிழிவு நோயையும் ஏற்படுத்துகிறது.
ஆப்பிள் ஜூஸில் சர்க்கரை அதிகம் இருப்பதால், இதனை குழந்தைகளுக்கு அதிகம் கொடுத்தால், குழந்தைகளுக்கு பற்களில் பிரச்சனைகளை ஏற்படுத்திவிடும்.
அப்பிளில் உள்ள சத்துக்கள் அனைத்தையும் பெற்று நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமானால், அப்பிளை ஜூஸ் செய்து குடிக்காமல் அதனை அப்படியே கடித்து உண்ணுங்கள்.







# விக்கல் நிற்க சீனி சாப்பிடுங்கள்

விக்கலை விரட்ட எளிய வழி ஒன்று உள்ளது. அதாவது கரண்டி சீனியை வாயில் போட்டு விழுங்குங்கள். நாக்கில் திடீரென வந்து விழும் இனிப்புச்சுவையால், வாயில் இருக்கும் நரம்பு முனைகள் தூண்டப்படுகின்றன. அதனால் விக் கல் நின்று விடுகிறது.

நாக்கில் திடீரென வந்து விழும் இனிப்புச் சுவையால், வாயில் இருக்கும் நரம்பு முனைகள் தூண்டப்படுவதால் விக்கல் விலகுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொண்டிருக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் போது நடுவே ஒரு சின்ன 'பிரேக்' என்று சொல்வதுபோல தொடர்ந்து கணினி பயன்படுத்தும் போது அடிக்கடி சின்ன 'பிரேக்' எடுத்துக்கொள்வது அவசியம் என்கின்றனர். இரண்டு வகைகளில் இந்த பிரேக் வலியுறுத்தப்படுகிறது. ஒன்று அமர்தல் தொடர்பாக. இன்னொன்று பார்த்தலுக்காக!

அதாவது கணினியைப் பயன்படுத்தும்போது ஒரே இடத்தில் ஒரே மாதிரி அமர்ந்திருக்க நேர்கிறது அல்லவா! உடலுக்கு இது கேடு என்று சொல்கின்றனர்.இல்லை எச்சரிக்கின்றனர். இடுப்புவலியில் ஆரம்பித்து பல்வேறு பாதிப்புகள் இதனால் ஏற்படலாம். இவ்வாறு கணினி முன்பாக கிடப்பதால் ஏற்படும் பாதிப்புகளை நிவர்த்தி செய்ய எர்கோனாமிக்ஸ் என்னும் தனிப் பிரிவே இருக்கிறது.எர்கோனாமிக்ஸ் என்றால் அமர்தல் கலை! இதே போல கணினி அல்லது மடிக்கணினி திரையையே பார்த்துக் கொண்டிருப்பதால் கண்களுக்கு களைப்பு ஏற்படுகிறது.இதைத் தவிர்க்க இடையிடையே கண்களுக்கு ஓய்வு தேவை என வலியுறுத்துகின்றனர். இதை நாமாக செய்ய மாட்டோம் என்று




# பிரவுசருக்கு ஒரு குளிர் கண்ணாடி.!

சரியான இடைவெளியில் ஓய்வு எடுத்துக் கொள்ள உதவுவதற்கு என்றே இணையத்தளங்களும் செயற்பாடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் 20;20 என ஒரு விதியும் உருவாக்கியுள்ளனர்.

இவைதவிர கண்களைப் பாதுகாப்பதற்கான குளிர்கண்ணாடியும் கூட உருவாக்கப்பட்டுள்ளது. இந்த குளிர் கண்ணாடியை நாம் சொருகிக்கொள்ள வேண்டியதில்லை. பிரவுசருக்கு சொருகிக்கொள்ளலாம்.

நீண்ட நேரமாக கம்ப்யூட்டர் மொனிட்டரை பார்த்து கொண்டிருக்கும்போது அதன் பிரகாசத்தன்மை கண்களுக்கு அயர்ச் சியை உண்டாக்கும்.குறிப்பாக மிக நீளமான கட்டுரையை படிக்கும் நிலை ஏற்பட்டால் கண்களில் பூச்சி பறப்பது போல உணர்வு ஏற்படலாம்.

இதைத் தவிர்க்க கணினியின் திரையின் பிரகாசத்தை ஓரளவு குறைத்துக் கொண்டால் படிக்கும் போது கணகளுக்கு இதமாக இருக்கும் அல்லவா? கூகுல் கூரோம் பிரவுசருக்கான நீட்டிப்பு சேவையாக உருவாக்கப்பட்டுள்ள குளிர்மை தரும் கண்ணாடி (கூலிங் கிளாஸ்) இதைத்தான் செய்கிறது.

இந்த பிரவுசர் நீட்டிப்பை தரவிறக்கம் செய்து கொண்டால் கணினியில் படிக்கும் போது அயர்ச்சியாக உணர்ந்தால் உடனே இதை கிளிக் செய்து பார்த்து கொண்டிருக்கும் இணையத் தளத்தின் பிரகாசத்தைக் குறைத்துக் கொள்ளலாம். குளிர்கண்ணாடி வழியே பார்க்கும்போது கண்கள் கூசாமல் காட்சிகள் இதமாகத் தெரிவதுபோல இப்போது இணையத் தளமும் பிரகாசம் குறைந்து மங்கலாக ஆனால் தெளிவாகத் தெரியும். எந்தளவுக்கு பிரகாசம் குறைய வேண்டும் என்று கூட தீர்மானித்துக் கொள்ளலாம்.இதற்காக நீட்டிப்பில் உள்ள கட்டத்தில் மாற்றம் செய்து கொள்ளலாம். கட்டத்தின் நடுவே உள்ள கர்சரை அப்படியும் இப்படியும் நகர்த்தினால் பிரகாசம் கூடும் குறையும். கணினியிலேயே பிரகாசத்தை மாற்றிக் கொள்ளும் வசதி இருக்கிறது.ஆனால் இந்த பிரவுசர் சேவை கணினியில் எந்த மாற்றமும் செய்யாமல் பிரவுசரில் மாற்றம் செய்து பார்க்கும் இணையத்தளத்தின் பிரகாசத்தை மங்கலாக்கித் தருகிறது. அதாவது பிரவுசருக்கு குளிர்கண்ணாடியை அணிவித்து எம் கண்களுக்கு இதம் தருகிறது.

> *இந்த பிரவுசர் நீட்டிப்பை தரவிறக்கம் செய்து கொண்டால் கணினியில் படிக்கும் போது அயர்ச்சியாக உணர்ந்தால் உடனே இதைக் கிளிக் செய்து பார்த்து கொண்டிருக்கும் இணை யத் தளத்தின் பிரகாசத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியந்து ரசிக்க வைத்த வீணை அரங்கேற்றம்



- பார்வையாளன்

மெல்பேணில் றோவில் மேல் நிலைப் பள்ளிகாட்சிக் கலைக் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற செல்வி காயத்திரி மதன சேனராஜாவின் வீணை அரங்கேற்றம் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தி ரசிக்க வைத்தது. இவர் மொனாஸ் பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்வியின் இறுதியாண்டு மாணவி ஆவார். மெல்பேணில் 1990 ஆம் ஆண்டில் கர்நாடக இசைக் கல்லூரியை ஸ்தாபித்து வீணை வாய்ப்பாட்டு என்பவற்றை இசை இரட்டையர் களான ராம்நாத் ஐயர். கோபிநாத் ஐயர் ஆகியோர் கற்பித்து வருகின்றனர்.

இவர்களின் பிச்சுமணி கர்நாடக இசைக் கல்லூரியில் காயத்திரி 1999 ஆம் ஆண்டிலிருந்து வீணை கற்றுள்ளார். காயத்திரியின் அரங்கேற்றத்தில் காலையில் சூரியனின் கதிர்கள் எழுவது போல் வீணையிலிருந்து அமைதியாக எழுந்த ஒலி மண்டபமெங்கும் இனிமை யாகப் பரவியது. சுகானா இராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்த திருவொற் றியூர் தியாகையரின் கருணிம்ப என்ற பாடலுடன் வீணை இசை ஆரம்பமானது. தொடர்ந்து முத்துசுவாமி தீட்சிதரின் வாதாபி கணபதி ஹம்சத்வனி இராகத்திலும். ஆதி தாளத்திலும் மற்றும் கோபாலகிருஷ்ண பாரதியாரின் சபாபதிக்கு வேறு தெய்வம் ஆபோகி இராகத்திலும் ரூபக தாளத்திலும் வீணையின் நாதத்தில் இசை வெள்ளம் மண்டபம் எங்கும் பரவ கச்சேரிகளை கட்டத் தொடங்கியது. பெரியசாமி தூரனின் முருகா முருகா என்ற பாடல் காவேரி இராகத்திலும் மிஸ்ரசாப்பு தாளத்திலும் முத்துசாமி தீட்சிதர் ஸ்ரீ சரஸ்வதி நமோஸ்துதே என்ற பாடல் சுரபி இராகத்திலும் ரூபக தாளத்திலும் அமைந்த உருப்படிகள் அடுத்தடுத்து இடம்பெற்று சபையோரின் செவிகளில் இன்பத் தேனை இதமாகக் கொடுத்தது. காலப் பிரமாணம், இராகபாவம் என்பவற்றில் மிகவும் கரிசனை கொண்டவர் என்பதற்கு தியாகராஜ ஐயரின் ஏதாவுரை என்ற பாடலுக்கான காயத்திரியின் வீணை வாசிப்பை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். நேரம் போவதே தெரியாமல் ரசனையாளர்கள் தம்மை மறந்து காயத்திரியின் வீணை கானத்தில் மூழ்கிக் கொண்டிருந்தார்கள். இடை வேளைக்குப் பின்னர் வந்த பாடல் இசையுலகில் மட்டுமன்றி பொதுவாக எல்லோர் மனங்களிலும் நர்த்தனம் ஆடுகின்ற பிரபல்யமான பாடல்களாக அமைந்தமை வீணை இசையில் பார்வையாளர்கள் அனைவரையும் கட்டுண்டு கிடக்க வைத்தது. இறுதியில் தில்லானாவும், மங்களமும் இடம்பெற்று வீணை அரங்கேற்றம் திருப்தியாக நிறைவேறியது. அந்த வகையில் காயத்திரி இசை நுணுக்கங்களை ஐயம் திரிபற அறிந்தும் பாடல்களின் இராக தாள வகைகளைத் தெளிவாக உள்வாங்கி வீணை வாத்தியத்தினை மிகவும் இலாவகமாக வும் உள்ளத்தால் அனுபவித்தும் வாசித்தார். இசைக்கலைஞர்கள், நாட்டிய கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் முன் னிலையில் எல்லோரும் பாராட்டும் வகையில் வீணை இசையில்தனதுவிரல்களின்ஓட்டத்தில்மனதில்ரீங்காரம்செய்யவைத்தார்.

## மரண அறிவித்தல்



### கந்தசாமி கனகராஜா

**(முன்னாள் ராஜ்மணி இரும்புத் தொழிற்சாலை பங்காளரும் காமாட்சி அம்பாள் ஐக்கிய சங்க அங்கத்தவரும் காமாட்சி அம்பாள் சனசமூக நிலைய உறுப்பினரும் ஆவார்)**

யாழ். நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி டோர்ட்முண்டை வசிப்பிடமாவும் கொண்ட கந்தசாமி கனகராஜா அவர்கள் கடந்த (02.10.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் ரத்தினம் காலஞ்சென்ற பவளரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் நந்தா, நிஷாந்தி, நிரோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிகுமார்,வசீகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கமலேஸ்வரி, மகேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசுந்தரம் கெங்கநாதன், காலஞ்சென்ற அருள்தாசன், சபேசன்,நிமலன், கமலன் ஆகியோரின்அன்பு மைத்துனரும், மதனராஜ், மதனியா, மர்சிகா, மதனரூபன்,துவாரகன்,தரிசிகா, சஜிந்தா நீருஜா,நிலானி, செந்தூரன் ஆகியோரின் அன்பு தாய்மாமனாரும், தனுஷா,சஷ்வின் ஆகியோரின் செல்லப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.10.2013) வியாழக்கிழமை மு.ப. 8 மணியளவில் Gottesacker 2544143 Dortmund, Hauptfriethof Aplerbeck இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
நந்தா- பிரித்தானியா (447424293995)
நிஷாந்தி-ஜேர்மனி (4915218281856)
நிரோஜன்- ஜேர்மனி (4915128248652)
சகோதரிகள் - இலங்கை (94776176582)

**தகவல்:**- பாலசுந்தரம் குடும்பம் நீர்வேலி வடக்கு
(மதன் பிரான்ஸ்)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேயிலைத் தோட்டம்







நாம் தினமும் காலையும் மாலையும் தேநீர் குடிப்போம். தேநீர் தயாரிப்பதற்கு அம்மா தேயிலைத் தூளை பயன்படுத்துவார். அப்போது எல்லாம் தேயிலை எப்படி தயாரிக் கப்படுகிறது என்று அறிய ஆவலாக இருந் தேன். கொழுந்தெடுத்து அதில் இருந்து தேயிலை தயாரிப்பார்கள் என்று சொல்வார்கள்.
அதனைப் பார்க்க நான் ஆவலாக இருந்தேன். அண்மையில் நான் கண்டிக்கு சென்றேன். அப்பொழுது தேயிலைத் தோட்டத்தை பார்க்க முடிந்தது.
மலையில் வரிசையில் தேயிலை மரங்கள் காணப்பட்டன. அவற்றைப் பார்க்க அழகாக இருந்தது.
நாங்கள் தேயிலைத் தோட்டத்தில் அருகில் இறங்கிப் பார்த்தோம். அங்கு வேலை செய் பவர்கள் கொழுந்தை பறித்து வாட்டினார்கள். ஒரு காம்பில் குருத்தான. இரண்டு இலைகள் கொய்து எனது கையில் தந்தார்கள். அதனையே கொழுந்து தென்று சொல்வார்கள்.
எனக்கு அதனை பார்க்க மிக மகிழ்ச்சியாக இருந்தது. பின்னர் நானும் கொழுந்து பறிப்பதற்கு சென்றேன். அப்போது அவர்கள் மர அட்டை கடிக்கும் கவனம் என்று சொன்னார்கள்.
நான் பயத்தில் கொழுந்தொன்றைப் பறித்துக் கொண்டு ஓடி வந்து விட்டேன்.

தே.ஆனந்ராம், தரம்-3 E
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

# செருப்பின் சுயசரிதை



அன்றொரு நாள் வீட்டிலே உள்ள குப்பைகளை எரித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது என் கண்ணிலே செருப்பொன்று தென்பட்டது. அச்செருப்பை எறிய முனைந்தேன். அப்பொழுது என்னை எறியாதே என்று கூறித் தனது சோகக் கதையைக் கூறத் தொடங்கியது அந்தச் செருப்பு. நண்பா நன்றி கெட்ட மனிதருக்காக நான் செய்த சேவைகளோ ஏராளம். ஆனால் என்னைக் குப்பைத் தொட்டிக்குள் வீசிவிட்டனர் என்று மனித இனத்தை நிந்தித்து தனது கதையைக் கூறத் தொடங்கியது.
இலங்கையில் இறப்பர்களுக்கென்று புகழ் பெற்ற அகலவத்தை எனும் இடமே என் பிறப்பிடமாகும். அங்கே உள்ள பிரபல்யமான தொழில்சாலையொன்றில் இறப்பராக உருவாக்கப்பட்டேன்.
நான் அழகாக வெட்டப்பட்டு செருப்பின் வடிவம் ஆக்கப்பட்டேன். காலில் கொழுவுவதற்கு ஏற்ற வகையில் என் உடலில் கொழுக்கி ஒன்றைப் பொருத்தி விட்டார்கள். அழகாக என் உடல் வடிவமைக்கப்பட்டு என் போன்ற சகோதரர்களுடன் தொழிற்சாலையில் இருந்தேன். பின்னர் நான் யாழ்ப்பாணப் பகுதிக்கு அனுப்பப்பட்டேன். என் நண்பர்களைப் பிரிந்த கவலையில் இருந்தேன். என்னை ஒரு கடையில் காட்சிப்படுத்தினர். என் அழகைக் கண்டு மயங்கிய சிலர் என் பெறுமதியை அறிந்து முன்வைத்த காலைப் பின்வைத்தனர். ஒரு வயது முதிர்ந்த தாத்தா தனது மகனுக்காக என்னை வாங்கிக் கொடுத்தார்.
என் எஜமான் மீது விசுவாசம் கொண்டு. எஜமானை வெய்யில் காலை பதம் பார்க்காமலும், மழை பெய்தவுடன் நிலத்துக்கு வந்துவிடும் நீர்ச் சிரங்குகள் எனது எஜமானின் காலைத் தாக்காமலும் கற்களும் முட்களும் என் எஜமானனுக்கு ஊறு விளை விக்காமலும் பாதுகாவலனாக இருந்தேன்.
அன்றொரு நாள் என் எஜமான் அவசர அவசரமாக என்னைக் கொழுவிக் கொண்டு சென்றார். திடீரென அவர் நிலத்தில் விழுந்து போனார். விழுந்ததும் என் உடலை விட்டு அக் கொழுக்கி கழன்று விட்டது. இதனால் நான் அறுந்துபோன செருப்பானேன். இதனால் என் எஜமான் என்னைக் குப்பைத் தொட்டிக்குள் வீசி விட்டார். இதுவே என் சோகக் கதையாகும்.

தி.அர்த்திபன், தரம்-6'பி'
யா/ஹாட்லிக் கல்லூரி

# இந்தியாவில் உள்ள புகழ் பெற்ற குகைக் கோயில்கள்



## எல்லோரா குகைகள்

கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் சரநந்திரி மலையில் முப்பதுக்கும் மேற்பட்ட குகைகள் வெட்டப்பட்டன. இந்த எல்லோரா குகைகள் மஹாராஷ்டிரா மாநிலத்தில் அமைநதுள்ளன. இவை இந்து, ஜெயின் மற்றும் புத்த மதத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இது ஒரு உலக பாரம்பரிய தளமாகக் கருதப்படுகின்றது.



## அஜந்தா குகைகள்

இந்தக் குகைகளும் மஹாராஷ்டடிரா மாநிலத்திலேயே அமைந்துள்ளன. இதனையும் ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் மற்றும் கலாசார அமைப்பினர் உலக பாரம்பரியத் தளமாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த அஜந்தா பாறை வெட்டுக்குகைகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டவையாகும்.



## உதயகிரி குகைகள்

மத்திய பிரதேசத்தில் உள்ள உதயகிரி குகைகளின் பாறை வெட்டுகள், குப்தப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் இரண்டாம் சந்திரகுப்த பேரரசால் உருவாக்கப்பட்டவை. இந்தக் குகைகள் கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப் பட்டவை.

## எலிபண்டா குகைகள்

மும்பை துறைமுகப் பகுதியில் உள்ள தீவில் அமைந்துள்ள எலிபண்டா குகைகள், இந்து மற்றும் புத்த மதத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிற்பங்கள் அனைத்தும் 5 மற்றும் 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் செதுக்கப்பட்டவை.

## அமிர்நாத் குகைக் கோயில்

ஜம்மு மற்றும் காஷ்மீரில் அமைந்துள்ள அமிர்நாத் குகைக்கோயில் கடவுள் சிவனுக்காக 3ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டவை. இங்கு ஐஸ்கட்டியால் ஆன சிவலிங்கம் இருப்பதே இதன் சிறப்பாகும். இந்த அமிர்நாத் குகைக்கோயில் சிறந்த சிவ ஸ்தலங்களில் ஒன்று.

## படலீஸ்சுவரர் குகைக் கோயில்

பூனாவில் உள்ள படலீஸ்சுவரர் குகைக் கோயில் ஒரே ஒரு பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. இந்த இந்துக் குகைக் கோயில் 8ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

## வராகா குகைக் கோயில்

தமிழ் நாட்டில் உள்ள வராகா குகைக் கோயில் 7ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே ஒரே மாதிரியாக இருந்து வரும் ஒரு வெட்டுப்பாறை. இந்த குகைக் கோயிலில் 4 தூண்கள் இருப்பதோடு அவை இந்து கடவுள்களான விஷ்ணு மற்றும் அம்மனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

சி. சிந்து, சுதுமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்குப் பெற்றோர் தரும் மிகச் சிறந்த சொத்து

எமது பெற்றோர்கள் வசதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமது பிள்ளைகளுக்காக சிறிதளவேனும் சேமிக்கவே முயற்சிப்பார்கள்.

மக்கள் வங்கியின் **சிசு உதான** கணக்கு அத்தகைய பெற்றோருக்கு பேருதவியாக இருக்கும். பிள்ளை சிறுவயதாக இருக்கும்போது ஒரு சிறிய தொகையைக் கொண்டு ஆரம்பிக்கக்கூடிய **சிசு உதான** கணக்கு படிப்படியாக வளர்ந்து பிள்ளையின் பாடசாலைக் கல்வி முடியும்போது, அக் கணக்கில் ஒரு பெரிய தொகை சேர்ந்திருக்கும். அது குடும்பத்திற்கு பாரமாக அன்றி ஒரு வரமாகவே அமையும்.

பிள்ளைகளுக்கு சிறந்த **கல்வியோடு உறுதியான பொருளாதார** பின்னணியையும் ஏற்படுத்திக் கொடுக்க முடிந்தால் அதுவே பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் தரும் மிகச் சிறந்த சொத்தாகும். ஏனெனில் உயிரினும் மேலாக நாம் நேசிக்கும் நமது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கல்வி மட்டுமே தலைசிறந்ததாக மாற்றும்.

சிசு உதான கணக்குப் பற்றியும் அதனால் கிடைக்கும் நன்மைகள் மற்றும் அனுகூலங்கள் பற்றியும் இன்றே உங்கள் மக்கள் வங்கிக் கிளையில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

மக்கள் வங்கி

சிசு உதான

சிறந்த எதிர்கால சந்ததியினர்



மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
0112 481677 / 0112 481532

AA- Brand Finance Rating, AA+ Fitch Rating

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

www.peoplesbank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுத்துணரும் அறிவும் ஆரோக்கிய வாழ்க்கையும்

இணையவன்



விலங்குகளுக்கும் பிற உயிர்களுக்கும் பகுத்துணரும் அறிவு இல்லை. அத்தகைய அறிவு மனிதருக்கு மட்டுமே உள்ளது. பகுத்துணரும் ஆற்றலும் அறிவும் உடைய மக்கள் நூறு ஆண்டுகள் மட்டுமல்ல, அதற்கு மேலும் இருநூறு முந்நூறு ஆண்டுகள் வாழ்தல் வேண்டும்.

இருநூறு முந்நூறு ஆண்டுகள் வாழ்வது எளிது என்று கூறுவதற்கு எடுத்துக்காட்டாக சீனர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அத்தனை ஆண்டுகள் வாழ்ந்தவர்கள் சாதாரணமாக எளிய வாழ்க்கை முறையை மேற்கொண்டிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பிறக்கின்றவர்கள் அனைவரும் என்றோ ஒருநாள் இறக்கின்றவர்களே என்பது எல்லோரும் அறிந்த ஒன்று; அதற்காக, இறந்து வாழ்வதை விட இருந்து வாழ்வதே அறிவுக்கு உகந்தது.

பகுத்தறிவு பெற்ற மனிதர்கள் மெய்யறிவும் பெறப்பெற்றால், நோயின்றி நீண்ட நாள் வாழலாம். தாய் தந்தையரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட அழகிய உடம்பாகிய வீடு பழுதுபடாமல் பாதுகாப்பதுடன் அவ்வப்போது புதுப்பித்துக் கொண்டும் வந்தால் அந்த வீடு நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கும். உயிர் குடியிருக்கும் வீட்டைப் பாழாக்கிவிட்டு, மனம் வருந்திக் கொண்டிருப்பவர்களுக்குப் பகுத்துணரும் அறிவு இருந்தும் பயன் என்ன?

அலுவலகத்துக்கும் தொழில் இடங்களுக்கும் சென்று வருவதற்காக வாங்குகின்ற மோட்டார் வாகனம் சிறிது பழுதானால் கூட பழுதுபார்க்க வேண்டும் என்று பலரும் ஓடிக் கொண்டிருப்பார்கள். ஆனால் உடம்பில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பதாகவோ நோய் வருவதுபோல் தோன்றினாலோ உடனே மருத்துவரைப் பார்க்க வேண்டும் என்னும் எண்ணம் எமக்குத் தோன்றுவதில்லை. மாறாக எல்லாம் சரியாகிவிடும். எது வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்கிற அசட்டையின் காரணத்தால் மீளாத துயரத்துக்கு ஆளானோர் அனேகம் பேர்.

குடியிருக்க வீடு கட்டுகிறோம். வெயிலுக்கும் மழைக்கும் காற்றுக்கும் அஞ்சி கூரை அமைக்கிறோம் வீட்டுக்குள்ளிருக்கும் பொருளை வேறு எவரும் கவர்ந்து செல்லாதிருக்க கதவடைத்துப் பூட்டி வைக்கின்றோம். அது மட்டும் போதாதென்று வேலியும் மதிற்சுவரும் அமைக்கின்றோம். இத்தனை இருந்தும் பாதுகாப்பில்லை என்று நினைத்து காவலுக்கு ஆள் அமர்த்துகிறோம் அத்தகைய வீட்டில் குடியிருக்கும் எம் உடம்பை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணவேண்டாமா?

உடம்பைப் பாதுகாக்கவும் உடம்பை வளர்க்கவும் அவசியமான அறிவைப் பெற்றவர்க்கே நோயில்லா வாழ்வு கிட்டும். நீண்ட நாள் வாழ்ந்தவர் என்று சொல்லக் கூடியவரெல்லாம் நோயை அண்டவிடாது வாழ்ந்தவர்கள் என்று கூறலாம்.

நோய் வருவதற்கான காரணங்கள் பல; அவற்றுள் மிக மிக முக்கியமானவை கீழே பட்டியல் இடப்பட்டுள்ளன. நன்றாகச் சூரிய ஒளி கிடைக்காத இடங்களில் குடியிருப்பது. குளிர் காலத்திலும் வெப்பக் காலத்திலும் உடம்பை பாதுகாக்கத் தவறுவது. தூய்மையில்லாத நீரில் குளிப்பது. உணவு தயாரிப்பது. வீட்டிலும் வீட்டுக்கு அருகிலும் குப்பைகளையும் கூளங்களையும் அழுக்குகளையும் சகதிகளையும் சேமித்து வைப்பது. நச்சு நீருள்ள மீன். இறைச்சி. கோழியிறைச்சி போன்றவற்றை உண்பது. தூய்மையில்லாத உணவுவிடுதி. நடைபாதைக் கடைகளில் உணவு உண்பது. களிம்பு. துரு முதலிய நஞ்சுள்ள பாத்திரங்களை உணவு தயாரிக்கப் பயன்படுத்துவது. உடம்பின் நிலையறியாமல் அடிக்கடி நீராடுவது. பல நாள் நீராடாமல் இருப்பது. தூய ஆடை அணியாமல் அழுக்கு ஆடை அணிவது. உடம்புக்குத் தேவையான பயிற்சி செய்யாதது.

தொற்று நோய் உள்ளவர்களோடு நெருங்கிப் பழகுவது. தவறான முறையில் தகாத உடலுறவுகள் மேற்கொள்வது. நோயுற்ற மகளிரை மருவுவது. ஓயாமல் ஏதேனும் ஒரு மருந்தை உண்டு கொண்டிருப்பது. பசித்த போது உணவு உண்ணாமல் பசியாத போது உணவு உண்பது. உடம்புக்கும் மூளைக்கும் ஓய்வு தராமல் இருப்பது போன்றவையெல்லாம் நோய்களை வரவழைக்க காரணம் ஆகின்றன. ஒரு முறை ஒரு நோய் வந்தால், வந்த நோய் என்ன காரணத்தினால் வந்தது என்று அறிந்துகொண்டு, அதே விதத்தில் மீண்டும் அந்நோய் வராமல் தடுக்கின்ற அறிவும் அது சார்ந்த கல்வியும் பெற்றாக வேண்டும்.

நோய் வந்தால் முதலில் பாதிக்கக் கூடியதாக இருக்கும் உறுப்புகள் மலக் குடலும் இரைப்பையுமாகும். நஞ்சை உருவாக்கும் மலம், குடலில் பல நாள்கள் இருந்தால், அதிலிருந்து உருவாகும் நஞ்சு இரத்தத்தில் கலந்து நோயாகும்.

மலக்குடலில் தேங்கும் அசுத்தங்களை அன்றையபோதே அகற்றிவர வேண்டும்.

மலக்குடலிலுள்ள மலச் சக்கைகளைத் தினந் தோறும் அகற்றிக் கொண்டுவந்தால், பெரும்பாலான நோயிலிருந்து உடம்பைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**அலுவலகத்துக்கும் தொழில் இடங்களுக்கும் சென்று வருவதற்காக வாங்குகின்ற மோட்டார் வாகனம் சிறிது பழுதானால் கூட பழுதுபார்க்க வேண்டும் என்று பலரும் ஓடிக் கொண்டிருப்பார்கள். உடம்பில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பதாகவோ நோய் வருவதுபோல் தோன்றினாலோ உடனே மருத்துவரைப் பார்க்க வேண்டும் என்றஎண்ணம் தோன்றுவதில்லை.**

# கற்றலை மேம்படுத்தும் மதியத் தூக்கம்

துஷி


BBC

மூன்று வயதுமுதல் ஐந்து வயது வரையிலான மழலைக் குழந்தைகளை மதியம் ஒரு மணி நேரம் ஒரு குட்டித் தூக்கம் போடவைத்தால் அது அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துகிறது என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

மதியச் சாப்பாட்டுக்குப் பின்னரான இப்படியான தூக்கம் குழந்தைகளின் மூளைத் திறனை மேம்படுத்துவதாக இந்த ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மூன்று வயது முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகள் மதியம் ஒருமணிநேரம் தூங்கி எழுந்தால், அவர்கள் தங்களின் மழலைப்பருவ பாடங்களை நன்றாக நினைவில் வைத்திருப்பதாக இந்த ஆய்வில் தெரியவந்திருக்கிறது.

இயற்கை விஞ்ஞானத்துக்கான தேசியக் கழகத்தின் விஞ்ஞான சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த ஆய்வின் முடிவுகள் மேச்சசூசெட்ஸ் ஹம்ஹர்ஸ்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் 40 சிறார் களிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் எட்டப்பட்டிருக்கிறது.

இப்படி மதியம் தூங்கி எழுந்த குழந்தைகளின் மூளைத்திறன் மேம்பாடு மதியம் தூங்கி எழுந்தபின்னர் அதிகரிப்பதுடன், மறுநாளும் இது நீடிப்பதாகவும் இவர்கள் கண்டறிந்துள்ளனர்.

குழந்தைகளின் நினைவாற்றலை ஸ்திரப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கும், ஆரம்பகால கற்றலுக்கும் இந்த மதிய தூக்கம் அவசியமாகிறது என்று இந்த ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மதிய உணவுக்குப் பின்னர் தூங்க அனுமதிக்கப்பட்ட குழந்தைகள் தூங்கி எழுந்ததும் காலையில் கண்களால் பார்த்து அதன்மூலம்கற்றவற்றைநினைவு கூர்வதில் சிறப்பாக செயற் பட்டதாகவும், மதியநேரம் தூங்க அனுமதிக்கப்படாத குழந்தைகளை விட இவர்களின் நினைவாற்றல் மேம்பட்டு இருந்ததாகவும் இந்த ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

மேலும் இதே குழந்தைகளை மதிய நேரம் தூங்க விடாத போது அவர்களின் கற்றல் திறன் குறைவதையும்தாங்கள்கண்டறிந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பரிசோதனையில் பங்கேற்ற 14 குழந்தைகள் தூங்கும்போது அவர்களின் மூளையின் கற்றலுக்கு பொறுப்பான பகுதிகள் வேகமாக செயற்படுவதையும் ஆய்வாளர்கள் பரிசோதனைகள் மூலம் கண்டறிந்தனர்.

தங்களது இந்த ஆய்வின் மூலம் மழலையர் பாடசாலைக் குழந்தைகளுக்கு மதிய நேரத் தூக்கம் அவசியம் என்பதை தாங்கள் மருத்துவரீதியில் உறுதி செய்திருப்பதாக தெரிவித்தார் இந்த ஆய்வுக்குழுவுக்குத் தலைமை தாங்கிய ஆய்வாளர் ரிபெக்கா ஸ்பென்ஸர்.

குழந்தைகளுக்கு வயது கடக்கும்போது மதியநேர தூக்கம் என்பது இயற்கையிலேயே இல்லாமல் போகும் என்று கூறும் அவர், மழலையர் பாடசாலைகளில் குழந்தைகளை மதிய நேரத்தில் தூங்க அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு மதியநேர குட்டித்தூக்கம் மனிதர்களின் மூளைத்திறனை, விழிப்புணர்ச்சியை அதிகப்படுத்தும் என்பது ஏற்கெனவே ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்ட செய்தியேதான் என்றாலும், மழலையர் பாடசாலை மாணவர்களிடமும்இதுநல்லபயனைத் தரும் என்பதை இந்த ஆய்வு உறுதி செய்திருப்பதாக கூறுகிறார், ரோயல் கல்லூரியின் சிறார் ஆரோக்கியம் குறித்த சிறப்பு மருத்துவர் ராபர்ட் ஸ்காட் ஜுப்.

மழலை வயதில் குழந்தைகள், இயற்கையாகவே தம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளில் இருந்து ஏராளமான தகவல்களை உள்வாங்கிக்கொள்ளும் தன்மை கொண்டவர்கள். இந்த தகவல்களையெல்லாம் அவர்களின் மூளை உள்வாங்கி பகுத்துப் பார்த்து சேமித்து வைத்துக்கொள்வ



தற்கு சராசரியாக ஒரு நாளைக்கு 11-13 மணிநேரம் அவர்கள் தூங்குவது அவசியம். எனவே இரவு நேரத் தூக்கத்தைப்போலவே, மதிய நேரத் தூக்கமும் இந்த மழலையர்களுக்கு மிகவும் அவசியம் என்பதை இந்த ஆய்வுகள் உறுதி செய்திருப்பதாக கருதுகிறார் மருத்துவர் ராபர்ட்.

மதியநேரம் தூங்க அனுமதிக்கப்படாத குழந்தைகள், களைப்படைந்தும், எரிச்சலுடனும், கவனம் செலுத்திக் கற்க முடியாமலும் திணறுவார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

தங்களின் குழந்தையின் மழலைக்கற்றலை ஊக்குவிக்க நினைக்கும்பெற்றோர்கள், அவர்களை மதியநேரம் குறைந்தது ஒருமணிநேரமாவது தூங்க விடுங்கள் என்பதே இந்த மருத்துவர்கள் செய்யும் பரிந்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு வயதில் இருந்தே கமெராவுடன் வளர்ந்தவர் பீட்டர் ஜாக்ஸன்




நியூஸிலாந்தில் பிறந்த பீட்டர் ஜாக்ஸனிடம் சிறு வயதில் இருந்து கமெராவின் மீது ஏற்பட்ட மோகமும் வெளிவரும் திரைப்படங்களை தவறாமல் பார்க்கும் வழக்கமும் அவரை பிரபல திரைப்பட இயக்குநராக வலம் வர வைத்தது. சிறு வயதில் தன்னிடம் இருந்த கமெராவில் அவ்வப்போது எதையாவது படம் எடுப்பது ஜாக்ஸனின் பொழுது போக்கு.

தனது 12 ஆவது வயதில் வீட்டின் தோட்டத்தில் நண்பர்களோடு சேர்ந்து குழிகள் அமைத்து இரண்டாம் உலகப் போரின் விளைவுகளைக் கொண்டு வந்து அதனைத் திரைப்படமாக எடுப்பது ஜாக்ஸனுக்கு கை வந்த கலையாக இருந்தது.

பிலிம் சுருளில் சிறிய ஓட்டைகள் போட்டு துப்பாக்கி குண்டுகளின் பாதிப்பை ஏற்படுத்தினான் என்று ஜாக்ஸனின் வாழ்க்கை குறிப்பு தெரிவிக்கிறது.

த ஈவினிங் போஸ்ட் என்ற நியூஸிலாந்து தினசரிப் பத்திரிகையில் ஜாக்ஸனுக்கு புகைப்படத் துறையில் வேலை கிடைத்தது. புகைப்படங்களை போட்டோ சொப் செய்யும் வேலை. இந்த வேலையில் கிடைத்த சம்பளத்தை வைத்து 1983 ஆம் ஆண்டு Roast of the Day என்ற 10 நிமிட படத்தை எடுத்தார். 22 வயதில் இந்தப் படத்தை முழு நீள திரைப்படமாக எடுப்பதற்காகப் போராடினார். இந்தப் படத்தை எடுப்பதற்கு ஜாக்ஸனிடம் பணம் இல்லாததால் முதலில் பணம் பெறுவதற்கான முயற்சியில் இறங்கினான். New Zealand film Commission (NZFC) என்ற நியூஸிலாந்தின் திரைப்பட வளர்ச்சிக் குழுமத்துக்கு ஒரு கடிதம் எழுதினார்.

ஜாக்ஸனின் கடிதத்தைப் படித்த குழுமம்.அவரது திறமையை ஆராய்ந்து பணத்துக்கு ஒப்புதலும் வழங்கினர். Roast of the Day படம் எடுக்கப்பட்டது. அந்தப் படத்துக்கு Bad Taste என்று புதிய பெயர் சூட்டப்பட்டது. பல நாடுகளில் உள்ள திரையரங்குகளில் அந்தப் படம் திரையிடப்பட்டு பெரும் வசூலை அள்ளிக் கொடுத்தது. அந்தப் படத்தின் மூலம் ஜாக்ஸன் பெயர் சொல்லும் திரைப்பட இயக்குநராக வலம் வரத் தொடங்கினார்.

சினிமாப் படத் தயாரிப்பு கம்பனி ஒன்றையும் நடத்தினார். ஜாக்ஸன் அடுத்த படமாக Meet the Feebles என்ற படத்தை எடுத்து தனது திறமையை மேலும் நிலை நாட்டினார். 1989 பொம்மைகளை வைத்தும் பொம்மைகளைப் போன்ற உடைகளை உடுத்திய நடிகர்களை வைத்தும் எடுக்கப்பட்ட இந்தப் படம் எதிர்மறை கதை சொல்லல் பாணியில் எடுக்கப்பட்டது.

இந்தப் படத்தில் இடம் பெறும் பொம்மைகள் திருட்டு, தீமைகள் ஆகியவற்றின் ஆசை கொண்டிருக்கும். இந்தப்பட வெற்றியை அடுத்து பிரமாண்டமான படம் ஒன்றை எடுப் பதற்கு முயற்சி செய்தார். தனக்கு பழக்கமான திரைக் கதை யாசிரியர்கள் ஸ்டீவன் ஸிங்க்வேர், மற்றும் ஃப்ரான்க் வால்ஷ் ஆகியவர்களை அழைத்து திரைக் கதை அமைத்தனர். அந்தப் படம்தான் Brain Dead. 2000 ஆம் ஆண்டில் இந்தியாவில் அடிக்கடி திரையிடப்பட்ட படம். கொடூர எலி ஒன்று கடித்தால் என்னவாகும் என்ற மனிதர்களைப் பற்றிய படம். இன்றும் நாஸ்டால்ஜியா ரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்ட படம். அது இந்தப் படம் அமெரிக்காவில் Dead and Alive என்று அழைக்கப்பட்டது. வெற்றித் திரைப்படங்களை எடுத்து உலகப் புகழ் எடுத்த ஜாக்ஸனுக்கு New Line Cinema என்ற ஹொலிவூட் பட நிறுவனம் அழைப்பு விடுத்தது.

முதன் முதலாக கிடைத்த இந்த பெரிய கம்பனியின் வாய்ப்பை சரியாகப் பயன் படுத்த வேண்டும் என்று நினைத்து ஜாக்ஸன். புதிய திரைக் கதையை செதுக்கினார். இதற்குள் வேறொரு திரைக்கதை அந்தக் கம்பனிக்கு கிடைத்ததால் ஜாக்ஸன் அனுப்பிய திரைக்கதையை திருப்பி அனுப்பி விட்டார்கள். சலிப்படையாத ஜாக்ஸன் தனது நண்பரான திரைக் கதையாசிரியரான ஃப்ரான்க் வால் ஷிடன் சேர்ந்து எடுத்த படம் தான் Heavenly Creatures ஆகும். இந்தப் படம் நியூஸிலாந்தின் பிரபல கொலை வழக்கு ஒன்றை மையமாக வைத்து எடுக்கப்பட்டபடம்.

30 வருடங்களுக்குப் பின்னர் கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருக்கும் ஜீலி யட் ஹீல்ம் என்ற பெண்மணியை நியூஸிலாந்தின் மீடியா துரத்திக் கொண்டிருந்த நேரத்தில் இந்தப் படமும் வெளியானதால் படத்துக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது. இரண்டு இளம் பெண்கள், காதலர்களாக மாறி, அவர் களில் ஒரு பெண்ணின் தாயைக் கொலை செய்வதும் இவர்களுக்குள் நிலவும் காதலுமே படத்தின் கதை.



**30 வருடங்களுக்குப் பின்னர் கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருக்கும் ஜீலி யட் ஹீல்ம் என்ற பெண்மணியை நியூஸிலாந்தின் மீடியா துரத்திக் கொண்டிருந்த நேரத்தில் இந்தப் படமும் வெளி யானதால் படத்துக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது.**

இந்தப்படம் 1994 ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைக்கதை ஆஸ்கார் விருதை வென்றது. 1995 ஆம் ஆண்டு நியூஸிலாந்து தொலைக்காட்சியில் ஜாக்ஸன் இயக்கிய Forgotten Silver என்ற ஒரு ஆவணப்படம் காண்பிக்கப்பட் டது. நியூஸிலாந்தில் பிறந்த பல கண்டுபிடிப்பாளர்கள் எப் படி பிற உலகத்தினரால் மறக்கப்படு கிறார்கள் என்பதைப் பற்றிய ஆவ ணப்படம். இந்தப் படம் Colin Mckensie என்ற கண்டுபிடிப்பாளரின் வாழ்க்கையை உலகுக்கு அறிவித்தது. ரைட் சகோதரர்கள் ஆகாய விமானத்தை கண்டு பிடிக்கும் முன் னரே இவர் அதைக் கண்டு பிடித்த வரலாறும், அமெரிக்காவில் திரைப்பட சுருள் கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னரே அவற்றைக் கண்டு பிடித்த விடயமும் இந்த ஆவணப் படம் வெளி வந்த போது தான் நியூஸிலாந்து மக்களுக்கு தெரிய வந்தன.

இதன் பின் The Frighteners என்ற ஹொலிவூட் படத்தை இயக்கும் வாய்ப்பு ஜாக் ஸனுக்கு கிடைத்தது. இந்தப் படம் பெரிய அளவில் பேசப் படவில்லை. இதனால் துவண்டிருந்த ஜாக்ஸனுக்கு நாஸ்டால் ஜியா உத விக்கு வந்தது. மீண்டும் பல படங்களை எடுத்தார். வெற்றியும் கண்டார். ஜாக்ஸன் எடுக்கும் படங்களுக்கு நியூஸிலாந்தில் எதிர்ப்புகள் வந்தும் அந்தப் படங்கள் உலகப் பார்வையில் பேசப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

-பார்வையாளன்-

# புகை கக்கும் வாகனங்களும் புகைப் பரிசோதனையும்

**கோப்பாய் சண்முகம்**
**கதையோடு செய்தி**

யாழ். வீதிகளில் வாகனங்கள் பல புகையைக் கக்கிக் கொண்டு பயணிக்கின்றன. இதனால் வீதிகளில் பயணிக்கும் மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகி வருகின்றனர். வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையால் காற்று, ஒலி, ஒளியில் மாசுக்கள் சேர்ந்துள்ளன.

இவற்றால் சுற்றுச்சூழலில் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுவதோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டு வருகின்றது. இதன் பக்க விளைவாக மூச்சுத் திணறல், இதய நோய்கள், நெஞ்சுவலி, தொண்டை வலி, முதுகு வலி போன்ற பல்வேறு நோய்களுக்கு மக்கள் ஆளாகின்றனர் என்கின்றன மருத்துவ வட்டாரங்கள் யாழ். நகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசலாலும் வாகனங்கள் வெளிவிடும் புகையாலும் நகருக்குள் சுத்தமான காற்று இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகக் காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட அளவில் மட்டுமே வாகனத்தில் இருந்து புகை வெளியேற வேண்டும். ஆனால் எமது வீதிகளில் செல்லும் வாகனங்களில் இருந்து அளவுக்கு அதிகமான புகை வெளியேறுகின்றது.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் 1860 ஆம் ஆண்டில் சிறப்புச் சட்டத்தை பிரிட்டிஷ் அரசு இலங்கையில் கொண்டு வந்தது. இதன் மூலம் கடல் மற்றும் நீராதார மாசுக்கள் தவிர்க்கப்பட்டன. 1905 இல் புகை மாசு குறித்த சட்டம் கொண்டு வரப்பட்டது. அதையடுத்து ஒலி, ஒளி மாசுத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1995 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதனால் சுற்றுச் சூழல் மாசடைவு பெருமளவில் தவிர்க்கப்பட்டது. ஆனால் இன்று இந்தச் சட்டம் முழுமையாக நடைமுறையில் இருக்கிறதா என்பது கேள்விக் குறியாக இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

வாகனப் புகையால் கார்பன் மோனொக்சைடு, புளோரோ கார்பன், நைட்ரஜன் போன்றவை வெளியேறி சூழலை பாதிப்படையச் செய்கின்றன. வாகனத்தில் இருந்து வெளியாகும் புகை மற்றும் வீதியில் பறக்கும் தூசியால் மூளை நோய் ஏற்படும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது. மூளை நோயால் ஞாபக மறதி, அல்ஷமீர் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இந்தத் தகவலை அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானி காலெப் பஞ்ச் தலைமையிலான நிபுணர்கள் எலிகளின் மூலம் இந்த ஆய்வை மேற் கொண்டனர். வாகனத்தில் இருந்து வெளியேறும் புகை மற்றும் காற்றில் பறக்கும் தூசியை விட ஆயிரம் மடங்கு மிக நுன்னிய தூசித் துகள்கள் சுவாசத்தின் மூலம் எலிகளின் மூளையைத் தாக்கின. இதே போன்றுதான் மனித உடலிலும் ஏற்படும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

வாகனங்களில் இருந்து வெளியேறும் புகையில் உள்ள கார்பன், ஒட்சிசன் மற்றும் கார்பன் மொனாக்ஸைடு உள்ளிட்ட நச்சுப் புகையால் வளி மண்டலம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. குளோ பல்வார்மிங் எனப்படும் புவிவெப்பமாதலுக்கு வாகனங்களின் புகை முக்கிய காரணம். அட்லாந்திக் சமுத்திரத்தின் நேர்மேலே ஓசோன் படுக்கையில் பெரியதுளை புவிவெப்பமாதலால் ஏற்பட்டு விட்டது. இதனால் உலக மக்களுக்கு பெரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடலில் அரை டிகிரி செல்ஸியஸ் வெப்பம் உயர்ந்ததால் கடல் வாழ் உயிரினங்கள் அழிந்து விடும் ஆபத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன. பெற்றோல், டீசல் போன்ற எரிபொருளுக்குப் பதிலாகச் சுற்றுச்சூழலைப் பாதிக்காத மாற்று ஏற்பாட்டை ஆராய்வது இன்றைய சூழ்நிலையில் அவசியமாகியுள்ளது. எதிர்வரும் 40 ஆண்டுகளுள் பெற்றோல், டீசலுக்குத் தட்டுப்பாடு ஏற்படவுள்ளது. யாழ். வீதிகள் புனரமைப்பின்போது தூசிகளில் குளித்த பயணிகள் இப்பொழுது வாகனப் புகையில் குளிக்கிறார்கள்.

கடந்த வாரம் ஒரு நாள் மதிய வேளை பருத்தித்துறை நோக்கி வாகனம் ஒன்று புகையைக் கக்கிக் கொண்டு சென்றது. கோப்பாய்க்கும் நீர்வேலிக்கும் இடைப்பட்ட பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த முதியவர் ஒருவர் அந்த வாகனத்தில் இருந்து வெளியேறிய புகையில் அகப்பட்டு சைக்கிளை ஓரமாக நிறுத்தி மூச்சுத் திணறலில் தவித்ததை அந்த வழியே சென்ற நான் பார்த்துவிட்டேன்.

உடனே அவர் பக்கம் சென்று என்ன ஐயா செய்யுது என்று கேட்டேன். அந்த முதியவரோ "கண்டறியாத வாகனம் ஓடுறாங்கள். இவ்வளவு புகையைக் கக்கிக் கொண்டு ஓடுறாங்கள். யார்தான் இவர்களைக் கேட்பது?" என்றார். முதியவர் சொன்னதும் அவர் வாகனப் புகையால் எத்தகைய சிரமத்துக்கு உள்ளாகியுள்ளார் என்பதை உணர்ந்து கொண்டேன். நான் மீண்டும் அவரைக் கேட்டேன் "என்ன ஐயா செய்யுது?" என்று. அவரோ "மூச்சு விட கஷ்டமாக இருந்தது. இப்ப சரி வந்துவிட்டது. உந்த வாகனங்களின் புகையை பரிசோதனை செய்வதற்காக புகைப் பரிசோதனை நிலையம் திறக்கப்பட்டிருக்காம். பிறகு எப்படி உந்த வாகனத்தை இந்த அளவுக்கு புகைகக்கும் விதத்தில் ஓட விட்டிருக்கினம்?" என்றார்.

நானோ "இந்த ஆண்டுதானே புகைப் பரிசோதனை நிலையம் திறந்திருக்கிறாங்கள்" வருகிற வருடத்துக்குள்ள யாழ்ப்பாண வீதிகளில் ஓடும் வாகனங்களின் புகையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார்கள்" என்றேன். அவரோ "ஓ வந்து விடும்!" என்று நக்கலாகச் சொல்லி விட்டு சைக்கிளில் ஏறிய போது அடுத்த வாகனம் புகையைக் கக்கிக் கொண்டு எங்களைக்கடந்து சென்றது. உடனே சைக்கிளை விட்டு இறங்கிய அவர் என்னை ஒரு பார்வை பார்த்தார். நான் உடனே "ஒழுங்கைக்குள்ளாலே போங்கோவன்" என்றேன். அவரோ "வசதியாக காப்பெற் றோட்டு போட் டிருக்கிறார்கள். நான் ஒழுங்கைக்குள்ளாலே போகவோ?" என்றார். நானோ "இல்லை ஐயா! உங்களுக்கு சுவாசப் பிரச்சினை இருக்கும் அதுதான் சொல்ல வந்தேன்" என்றேன்.

அவரோ "யாருக்கு? எனக்கோ? எங்கட காலத்தில் சுவாசப் பிரச்சினை கிடையாது. இப்ப வருமா? வாகனப் புகை சிரமம் தந்தால் மூக்கைப் பொத்திக் கொண்டு போவேன்" என்று சொல்லிவிட்டு மீண்டும் சைக்கிளில் ஏறிய போது இன்னுமொரு வாகனம் புகையைக் கக்கிக் கொண்டு சென்றது. உடனே அந்தப் பெரியவர் "நீ சொன்னது சரிதான்" நான் ஒழுங்கைக் குள்ளாலேயே போகப் போறேன் என்று சொல்லி விட்டுச் சென்றார். காப்பெற் வீதியை போட்டு விட்டு அந்த வீதியில் வாகனங்கள் புகையுடன் சென்றால் எப்படி மக்கள் பயணிக்க முடியும்? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிந்திப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org